THAYAGAM

25 . 2 . 94

75¢

உண்மை:5
ஏடு ள்:34

# தாயகம்

## ஜனாதிபதியின் ஆணையின் பேரில் கொத்தலாவல பதவிநீக்கம்

## மாத்தயாவின் சகாக்கள் விடுதலை

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு பிரபாகரன் பணிகிறார்?

**சமாதான சமிக்ஞை பிரபாகரனிடமிருந்தே வரவேண்டும்**

ரணில் பேச்சு

**சமாதான குழு தீர்வு எதையும் கொண்டு வரவில்லை**

யாழ்ப்பாணத்தில் பாலசிங்கம்

**வவுனியாவில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள்**

**வெளிநாடு சென்றவர்களின் வீடுகள் புலிகளால் பறிப்பு**

**வெலி ஓயாவில் தாக்குதல்கள் தேர்தலைக் குழப்ப புலிகள் முயற்சி**

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்
SENDURAN & Co
(416) 962 7397
584 A, PARLIAMENT ST

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் *Niru Brand*® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

**நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்**

Second class mail Registration No:8435



தாயகம்
'உண்மையைத் தேடி'

# மட்டக்களப்பில் தேர்தல் முயற்சிகள் ஏமாற்று?

மட்டக்களப்பில் களுதாவளையில் அதிகாலை பொலிஸ் கமாண்டோக்கள் கிராமங்களை சுற்றி வளைத்து நாற்பது ஆண்களை புலிகளுடனுன தொடர்பு பற்றி விசாரிக்க அழைத்துச் சென்றனர். அருகில் உள்ள கிராமம் ஒன்றில் ஆறு இளைஞர்கள் பொலிஸ் காவலுடன் முழந்தாளில் வீதியோரமாக இருந்தனர். இது வழமையான நிகழ்ச்சியாதலால் பாடசாலை சிறுர்கள் அவர்களைக் கவனிக்கவில்லை.

கிழக்கில் இராணுவம் கிராமங்களில் இருந்து புலிகளின் நடமாட்டத்தை குறைக்க கடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அரசாங்கம் அரச அதிகாரத்தை கொண்டு வரவும் புலிகளை தோற்கடித்து விட்டதாக காட்டவும் இத்தேர்தலை நடத்துகிறது. ஆனல் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் இந்த தேர்தல் நியாயமாக நடைபெறுமா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

1948ம் ஆண்டு முதல் அங்கு வாழும் யேசு சபை குருவானவரான ஹென்றி மில்லர் 'அரசாங்கம் தேர்தல் ஜனநாயக முறையாக இருக்கும் என்று கூறி மக்களை அவமதிக்கிறது' என்கிறுர். யார் தெரிவு செய்யப்படுகிறுர்கள் என்பது பிரச்சனை அல்ல, யார் தெரிவு செய்யப்பட்டாலும் பிரிகேடியரின் தாளத்திற்கு ஆடுவார்கள் என்கிறுர் அவர்.

பெரும்பாலான வேட்பாளர்கள் அரச சார்பான சிங்களவர்கள். மற்றவர்கள் பழைய இயக்கத்தவர்கள். புலிகள் இப்பகுதிக்கு பலரை அனுப்பியிருப்பதாக இராணுவம் கூறுகிறது. கிழக்கு தனது கட்டுப்பாட்டில்

***ம.ப.பார்க்க..***

# ஜனுதிபதியின் ஆணையின்பேரில் கொத்தலாவல பதவி நீக்கம்

பிந்திய செய்திகளின்படி லெப்டினனட் கேணல் கொத்தலாவலை பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவில் பயிற்சியில் இருந்த போது கடையில் திருட்டில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு இவர் அமெரிக்காவை விட்டு வெளியேறியிருந்தார். இவர் மீது சட்ட நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை என்று இராணுவம் தீர்மானித்துள்ளதாக செய்தி முதலில் வந்திருந்தது. பிந்திய செய்திகளின்படி இவரை ஜனுதிபதி பதவி நீக்கம் செய்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. ஜனுதிபதியின் உத்தரவுப்படி இவர் பதவி நீக்கப்பட்டதாகவும் இனிமேல் அவர் சாதாரண மனிதர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் தமிழர்கள் கைது பற்றி மன்னிப்புச்சபை கண்டனம்

கொழும்பில் ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழர்கள் கைது செய்யப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்திருக்கிறது. கொழும்பில் கடந்த யூன் மாதம் முதல் தை மாதம் வரையும் பதினையாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளது. இராணுவமும் ஆயுதம் தாங்கிய குழுக்களும் அப்பாவிகளைக் கடத்தி இரகசிய முகாம்களில் இரண்டரை மாதம் வரை வைத்திருந்து சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் வீதியோரங்களில் விடப்பட்டனர் என்றும் சிலர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் மன்னிப்புச்சபையின் அறிக்கை கூறுகிறது. சிவில் உடையில் வரும் இராணுவத்தினர் கொழும்பில் தமிழர்களைக் கைது செய்து கண்களைக் கட்டிக் கொண்டு இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் கொண்டு சென்று சித்திரவதை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலோர் மூன்று நாட்களில் விடுவிக்கப்பட்டாலும் சிலர் மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டார்கள், ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்கு காரணம் கூறப்படவில்லை, பலர் தங்களுக்கு புரியாத மொழியில் விசாரிக்கப்பட்டார்கள், புரியாத மொழியில் எழுதப்பட்ட பத்திரங்களில் கையொப்பம்

***ம.ப.பார்க்க..***

# சமாதான முயற்சிக்கு புலிகளின் பதில் இல்லை என்கிறார் பிரதமர்

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு புலிகளிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் திங்கட்கிழமை தெரிவித்திருக்கிறார். 'அவர்களின் தலைவரிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. எந்த சமிக்ஞையும் பிரபாகரனிடமிருந்தே வர வேண்டும்' என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் நடத்திய விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

'எங்கள் கதவுகளை பேச்சு வார்த்தைகளுக்காக மூடவில்லை, ஆனால் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன், என்ன விடயங்கள் பற்றிப் பேசுகிறோம், யாருடன் பேசுகிறோம் என்பது பற்றித் தெரிய வேண்டும்' என்றும் அவர் மேலும் கூறினார்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரைக்கும் மாகாண சபைகள் ஊடாக அதிகாரம் வழங்குதல் போன்ற பெரும்பாலான விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளன என்றும் எந்த தீர்வும் மற்றக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், அப்படியானால் மட்டுமே அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்ய முடியும் என்றும் கூறிய பிரதமர் பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

புலிகள் ஆனையிறவுப் பாதையூடாக பயணம் செய்ய அனுமதித்தால் பொருட்களின் தடையை நீக்குவதாகவும் அவர் தெரிவித்தார் குடாநாட்டு மக்களின் போக்குவரத்து சுமுகமாகினால் பிரச்சனை தீர்ந்து பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகும் என்றும் அவர் கூறினார்.

## வடக்கில் குண்டுவீச்சு

குடாநாட்டில் நடைபெற்ற குண்டுவீச்சினால் இருவர் கொல்லப்பட்டதுடன் ஒன்பதுபேர் காணாமல் போயுள்ளனர். வள்ளங்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். விமானக் குண்டு வீச்சினால் வள்ளங்கள் மூழ்கடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதும் இராணுவம் அவ்வாறான தாக்குதல் நடத்தப்படவில்லை என்று கூறியுள்ளது. கடற்படையினர் அப்பகுதியில் ஏழு வள்ளங்களை மூழ்கடித்ததாகவும் இராணுவத் தலைமைப்பீடம் தெரிவித்தது.

## மட்டக்களப்பில்..

இருப்பதாக இராணுவம் கூறினாலும் இரவுகளில் புலிகள் கிராமப்புறங்களில் நடமாடுகிறார்கள். அடிக்கடி பணக்காரத் தமிழர்களைக் கடத்தி கப்பம் பறிக்கிறார்கள் என்று கிராமத்தவர்கள் கூறுகின்றனர்.

முன்பு போல புலி ஆதரவாளர்கள் கைது செய்யப்படா விட்டாலும் கிறிஸ்மஸ் தினத்தன்று சித்தாண்டியில் ஐந்து தமிழர்கள் கொண்டு செல்லப்பட் போதும் இன்னமும் வீடு திரும்பவில்லை. கிழக்கில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் அரசும் திருத்த வேலைகளில் ஈடுபடுவதுடன் அகதிகளை மீளக் குடியமர்த்துகின்றன. பெரும்பாலோர் இந்த தேர்தல் தங்கள் வாழ்வு முறையை சிறப்பாக்கும் என்பதை நம்பவில்லை.

இந்தச் செய்திக் குறிப்பு ஏ.பி செய்தி தாபன நிருபர் அனுப்பிய செய்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டது.

புலிகள் வாக்காளர்களை மிரட்டி வாக்கு அட்டைகளைப் பறித்துச் சென்றுள்ளதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வாக்காளர் அடையாள அட்டைகளை மூன்று மட்டக்களப்பு கிராமப் பகுதிகளில் இருந்து புலிகள் பறித்துச் சென்றுள்ளனர். சகல பிரசாரங்களும் வருகின்ற சனிக்கிழமையுடன் முடிய வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

## மன்னிப்புச் சபை..

இடும்படி வற்புறுத்தப்பட்டார்கள்.

அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே சுற்றிவளைத்துக் கைது செய்யப்பட்டார்கள் என்றும் சர்வதேச சட்டத்தின்படி இலங்கை நாட்டுக்கு பயமுறுத்தலான விடயங்களை எதிர்கொள்வதற்காக சில மனித உரிமைகளை மறுக்கலாம் என்றும் ஆயினும் அது குறிப்பிட்ட எல்லைகளுக்குள்ளேயே நடைபெற வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்தது.

அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் தடுத்து வைத்தல், உறவினர்களுக்கு அறிவித்தல், விடுவித்தவர்கள் மீண்டு கைது செய்யப்படாதபடி சாட்சிப் பத்திரம் கொடுத்தல் போன்றவற்றையும் இலங்கை அரசு கைக்கொள்ளவில்லை என்றும் அரசாங்கம் தனது சட்ட, அரசியல் ரீதியான அர்ப்பணிப்பை செய்ய வேண்டும் என்றும் கொழும்பில் கைது செய்தலை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

முன்பு ஜே.வி.பி காலங்களில் நடந்தது போலவே இது நடைபெறுகிறது என்றும் சரியான முன்னேற்பாடுகள் இல்லாததால் பல ஆயிரக்கணக்கானோர் காணாமல் போனார்கள் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

கடந்த புதன்கிழமை விடுத்த அறிக்கையில் இந்த கைதுகள் பாதுகாப்புக்கு அவசியம் என்றும் மன்னிப்புச்சபை எண்ணிக்கையை மிகைப்படுத்தியுள்ளதாகவும் வெளிநாட்டமைச்சு கூறியுள்ளது. ஆயினும் இந்த கைதுகளில் சம்பந்தப்பட்ட பொலிசாரும் மனித உரிமை அமைப்புகளும் இந்த எண்ணிக்கை சரியானது என்கின்றனர்.

# வெலி ஓயாவில் புலிகள் தாக்குதல் அதிகரிப்பு தேர்தலைக் குழப்ப முயற்சி

வெலிஓயாவில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் ஒரு இராணுவத்தினர் கொல்லப பட்டார். கடந்த திங்கட்கிழமை இரண்டு இராணுவக் கண்காணிப்பு நிலையங்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இரண்டு குழுக்களாக வந்த புலிகள் குளித்துக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். மரம் ஒன்றின் மேல் இருந்த ஸ்னைப்பர் மீது புலிகள் சுட்டத்தில் அவரது தலைக்குள்ளால் குண்டு பாய்ந்தது. இதன் பின்னரே மற்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

புதன்கிழமை நடந்த தாக்குதலில் இராணுவ வண்டி மீது புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர். கம்பிலியாவவில் இருந்து பராக்கிரமபுரத்திற்கு சென்று கொண்டிருந்த போதே இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கம்பிலியாவ முகாமுக்கு ஆயிரம் மீற்றர் தூரத்திலேயே தாக்குதல் நடத்தப்பட்டது. றொக்கட்டிலிருந்து புறப்பட்டு வந்த கிரனேட் வெடித்த போது வாகனத்திலிருந்த வெடிமருந்துகளும் வெடித்து வாகனம் சிதறியதில் நால்வர் கொல்லப்பட்டார்கள் என்று பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்தார்.

பின்னர் வியாழக்கிழமை நடைபெற்ற தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப பட்டனர். சுமார் நூறு புலிகள் கல்யாணபுர குடியேற்றப் பகுதியில் றொக்கட் வீசிகள் சகிதம் தாக்குதல் நடத்தினர். முப்பது நிமிடங்கள் வரை நீடித்த இந்த தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடத்தியதை அடுத்து புலிகள் பின்வாங்கினர்.

அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறும் தேர்தல்களைக் குழப்பும் நோக்கில் இராணுவத்தினரின் கவனத்தை திருப்பவே புலிகள் இப்பகுதியில் தாக்குதல் நடத்துகிறார்கள் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்குள் பிரபாகரன் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வன்னிக்காட்டுப் பகுதிக்கு சென்றுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்குள், ஆளும் கட்சி வேட்பாளர் ஒருவர் மீது எதிர்த்தரப்பினர் கிரனேட தாக்குதல் ஒன்றில் ஈடுபட்டதாகவும் யாரும் காயமடையவில்லை என்றும் செய்திகள் கூறுகின்றன.

# றிச்சாட் டி சொய்சா மரணம் பற்றி விசாரணை செய்ய கோரிக்கை

றிச்சாட் டி சொய்சா மரணம் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று நூற்றுக் கணக்கான பத்திரிகையாளர்களும் மனித உரிமைப் போராட்டக்காரர்களும் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் உட்பட பலர் றிச்சாட் டி சொய்சா மரணம் குறித்து விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்று பதாகைகளைச் சுமந்தபடி காணப்பட்டனர்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் பெப்ரவரி 18ம் திகதி கடத்திச் செல்லப்பட்ட அவர் மறுநாள் பிணமாகக் காணப்பட்டார். சுதந்திர தகவல் சாதன இயக்கத்தினரால் இந்த ஆர்ப்பாட்டம் சட்டமா அதிபரின் அலுவலகம் இருந்த கட்டடத்தின் முன்னால் நடத்தப்பட்டது.

# மீண்டும் ஐ.நா அகதிகள் தூதுவராலயம் சேவை

ஐ.நா அகதிகள் தூதுவராலயம் மீண்டும் அகதிமுகாம்களில் பணியில் ஈடுபடும் என்று செய்திகள் கூறுகின்றன. மூன்று மாதங்களின் பின்னர் தூதுவராலயம் பணிகளில் ஈடுபடுகிறது. மடுமுகாமில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களினால் வாபஸ் பெற்ற தூதுவராலயம் மீண்டும் மடு, பாலம்பிட்டி முகாம்களில் சேவையில் ஈடுபடும். இரு முகாம்களிலும் 32 ஆயிரம் அகதிகள் வசிக்கிறார்கள். இவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்வதாக புலிகள் தெரிவித்துள்ளதன் பேரிலேயே மீண்டும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

# புலிகளின் ட்ரக்கிற்கு குண்டுவீச்சு

புலிகள் வெடிமருந்துகள் கொண்டு சென்ற வாகனம் மீது குண்டு வீசித் தாக்கியதாகவும் மூன்று புலிகளை காயப்படுத்தியுள்ளதாகவும் இராணுவம் கூறியுள்ளது.

பலாலிப் பகுதியில் மூன்று கிளேமோர் கண்ணிகளை எடுத்ததாகவும் புலிகளின் பங்கர்களைத் தாக்கியதாகவும் இராணுவம் கூறியது.

# விமானத்திற்கு தீவைத்தவர் கைது

ஹோட்டல் ஒன்றில் சிறந்த வேலைக்காக எகிப்துக்கு சென்ற ஒருவர் தனக்கு சிற்றூழியர் வேலை கொடுக்கப்பட்டதை அடுத்து நாடு திரும்பிய போது விமானத்தில் தீவைக்க முயன்ற போது விமான

ம.ப.பார்க்க..

# வவுனியாவில் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள்

வவுனியாவில் தேர்தலுக்கான ஆயத்தங்களைப் பார்வையிட பத்திரிகையாளர்கள் சென்று வந்துள்ளனர். அப்பகுதியில் உள்ள மக்கள் அரசாங்கத்தின் மேலுள்ள வெறுப்பினால் தாம் பழைய இயக்கங்களுக்கே வாக்களிக்கப் போவதாக தெரிவித்துள்ளனர் என்று றெய்ட்டர் நிருபர் தெரிவித்துள்ளார்.

மார்ச் 1ம்திகதி நடைபெறும் தேர்தல்கள் 11 வருடங்களின் பின் நடைபெறுகின்றன. இங்குள்ள 12,604 வாக்காளர்களில் பெரும்பாலோர் தமிழர்களாவர். ஐ.தே.க, புளொட், டெலோ, முஸ்லிம் காங்கிரஸ் என்பன 11 ஆசனங்களுக்காக போட்டியிடுகின்றன. விஜேதுங்கவின் இறுக்கமான நிலைப்பாட்டினால் மிதவாதத் தமிழர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். அரசாங்கம் செய்கின்ற எதுவும் எங்களுக்காக அல்ல, பெரும்பான்மையினரைத் திருப்திப்படுத்தவே என்கிறார் கடைக்காரரா சுப்பையா கனகரத்தினம். இவர் தான் புளொட்டிற்கே வாக்களிக்கப் போவதாக கூறுகிறார்.

புலிகள் வடக்கில் எங்களுக்காக போராடுகிறார்கள், புளொட் எங்களுக்காக இங்கே போராடுகிறது என்கிறார் இளைப்பாறிய ஆசிரியையான மகேஸ்வரலிங்கம் லட்சுமி. புளொட் ஏழைகளுக்கு அன்றாட தேவைகளுக்கு உதவுவதுடன் அப்பகுதிக்கு பாதுகாப்பும் வழங்குகிறது என்கிறார் அவர்.

தங்களுக்கு எட்டு ஆசனங்களும் ஐ.தே.கட்சிக்கு மூன்று ஆசனங்களும் கிடைக்கும் என்கிறார் சித்தார்த்தன். மக்கள் எங்களுக்கே வாக்களிப்பார்கள், ஏனென்றால் அவர்களுக்கு ஐ.தே.க வெற்றி பெறுவது விருப்பமில்லை, ஜனாதிபதியே எங்களுக்காக பெரும் பிரசாரம் செய்கிறார் என்று கூறுகிறார் சித்தார்த்தன்.

நகரில் முக்கிய இடங்களில் இராணுவம் சோதனை முகாம்கள் அமைத்து பாதுகாப்பில் ஈடுபடுகிறது.

வவுனியா தற்போது செழிப்பான நகரமாக இருக்கிறது. கடைகளில் தேவையான பொருட்கள் கிடைக்கின்றன. வயல்கள் செழிப்பாக இருக்கின்றன. இதுவரையும் பத்துக்கோடி ருபாக்கள் நீர், மின்சாரம், சுகாதார வசதிகளுக்காக செலவிடப் பட்டுள்ளது.

தனது வாக்கு ஐ.தே.கவுக்கே என்கிறார் 37 வயதுப் பெண் ஒருவர். ஏனென்றால் அவர்கள் தான் வவுனியாவை அபிவிருத்தி செய்வதுடன் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும் அதுவே நல்லது, ஐ.தே.கட்சி பிரச்சனையைத் தீர்க்கவில்லை. புளொட்டும் தீர்க்கவில்லையே என்கிறார் அவர்.

## ஆபாச புத்தங்கள் வேட்டை

கொழும்பில் பாலியல் சஞ்சிகைகள் மீது பொலிசார் வேட்டை நடத்தியுள்ளனர். இந்த வேட்டையில் பல விற்பனை நிலையங்களில் இருந்து பல புத்தகங்கள், சஞ்சிகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் இரண்டு லட்சம் புத்தகங்கள் ஆறு கடைகளில் கைப்பற்றப்பட்டன. 14 பத்திரிகை முகவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## விமானத்தை...

ஊழியர்கள் அந்த முயற்சியைத் தடுத்துவிட்டனர். நீல் ஜயசுந்தர எனப்படும் இவர் இலங்கையிலிருந்து கெய்ரோவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் சென்றிருந்தார். அபுதாபியிலிருந்து நாடு திரும்பிய மலசல கூடத்திற்கு சென்று அங்குள்ள காகிதத்திற்கு தீவைக்க இவர் முயன்றார். புகை உணரும் கருவிகள் சத்தம் கேட்ட விமானி ஊழியர்களுக்கு விடயத்தை தெரிவித்ததும் அவர்கள் இந்த முயற்சியை முறியடித்தனர். கொழும்பு வந்ததும் இவரை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

## தூதுக்குழு பற்றி பாலசிங்கம்

யாழ்ப்பாணம் வந்த சமாதானக் குழுக்கள் எந்த தீர்வையும் கொண்டு வரவில்லை, நாமும் எந்தத் தீர்வையும் கொடுக்கவில்லை, யுத்தம் நடந்து மக்கள் அழிவுகளை எதிர்கொள்ளும் போது பேச்சுவார்த்தைகள் சாத்தியமில்லை, எனவே பேச்சுவார்த்தையை தொடங்க சமாதானச் சூழ்நிலை வேண்டும். இதற்கு போர் நிறுத்தப்பட்டு பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும். இதை நாம் கிறிஸ்தவ தூதுக்குழுவிடம் தெரிவித்திருக்கிறோம் என்று பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார்.

யுத்த நிறுத்தமும் தடை நீக்கமும் நிபந்தனைகள் அல்ல, கோரிக்கைகளே என்ற பாலசிங்கம் அரசு மக்களிற்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்றும் பேச்சுவார்த்தை புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலேயே நடக்க வேண்டும் என்றும் இது குறித்து தூதுக்குழுவினரிடம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.


**விற்பனைக்கு**

டான்போர்த் வீதியில் சிகரெட், இறைச்சி போன்றன விற்பனை செய்யும் கடை சகல பொருட்களுடனும் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு
**321 2739**
**சுந்தர்**

# ஜனாதிபதி மாளிகையின் மாணிக்கம் திருட்டு

ஜனாதிபதிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மாணிக்கக் கல் ஒன்றை திருமதி ஹேமா பிரேமதாசா அபகரித்து விட்டார் என்று சந்தேகம் எழுந்துள்ளது. ஜே.ஆர் ஆட்சியிலிருந்த போது வர்த்தகர் ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்தக் கல் ஜனாதிபதி மந்திரில் வைக்கப்பட்டிருந்தது. தனக்கு இந்தக் கல் பற்றித் தெரியாது என்றும் தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கே அந்தக் கல் சொந்தமானது என்றும் ஜே.ஆர் தெரிவித்திருந்தார்.

இந்த கல் ஜனாதிபதி மாளிகையில் இருந்த போது திருமதி பிரேமதாசாவே அங்கு வசித்திருந்தார். இந்தக் கல் மிகவும் சக்தி வாய்ந்தது என்றும் இந்தக் கல்லை வைத்திருப்பவர்களுக்கு பெரும் செல்வம் குவியும் என்றும் ஆனால் குடும்பத்தில் துன்பம் நேரும் என்றும் கொழும்பு பத்திரிகைகள் கூறுகின்றன. இந்தக் கல்லினுள் விகாரையின் உருவம் தெரியும் என்றும் இது இயற்கைக் கல் என்றும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன.

# மாத்தயா பற்றிய அழுத்தங்களுக்கு பிரபாகரன் பணிகிறார்?

மாத்தயா விவகாரத்தில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த மாத்தயாவின் சகாக்கள் பலரை யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் விடுவித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்திருக்கிறது. மாத்தயா வுடன் வைக்கப்பட்டிருந்த இவர்கள் விடுவிக்கப்பட்டது பலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளதாகவும் சர்வதேச அழுத்தங்கள், உள்எதிர்ப்புகள் போன்றவற்றுக்கு பிரபாகரன் பணிந்திருப்பாரா என்றும் சண்டே ரைம்ஸ் வினவியுள்ளது.

மாத்தயாவுக்கு இன்னமும் மரண தண்டனை வழங்கப்படவில்லை என்றும் தொடர்ந்தும் விசாரணைகள் நடக்கின்றன என்றும் புலிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் தெரிவித்து வருகின்றனர். இராணுவம் குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் மக்களை தயார்படுத்துவதற்காக கூட்டங்களை புலிகள் ஒழுங்கு செய்து வருகின்றனர். அக்கூட்டங்களில் மாத்தயா பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவருக்கு இன்னமும் மரண தண்டனை வழங்கப்படவில்லை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் தொடர்பு சாதனங்கள் மாத்தயாவின் குற்றங்கள் பற்றிய பிரசாரங்களில் யாழ்ப்பாணத்தில் ஈடுபட்டுள்ளன. ஆனையிறவு தோல்விக்கும் மாத்தயாவே காரணம் என்று புதிதாக பிரசாரங்கள் எழுந்துள்ளன.

# பலாலியில் கொல்லப்பட்ட இளைஞர்கள்

சமீபத்திய பூனகரித் தாக்குதலின் போது பலாலி முகாமில் புலிகள் ஊடுருவல் நடைபெற்று தாக்குதல் நடைபெற்றிருந்தன. இந்த தாக்குதலின் போது புலிகளும் படையினரும் கொல்லப் பட்டிருந்தனர். இதனால் கோபமடைந்த இராணுவத்தினர் முகாமில் கைது செய்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் சிலரையும் தொலைத்தொடர்பு அதிகாரியாக பணியாற்றிய தமிழ் அதிகாரி ஒருவரையும் சுட்டுக் கொன்றுள்ளனர் என்றும் கொல்லப்பட்ட அதிகாரி கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இருதயநாதன் என்றும் சரிநிகர் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

# ஜே.வி.பி வன்முறையைக் கைவிடவில்லை

ஜே.வி.பி வன்முறையை கைவிட்டு விட்டதாக வெளிவந்த அறிக்கை தவறு என்று லண்டன் கிளை அறிவித்திருக்கிறது என்று ஐலண்ட் செய்தி கூறுகிறது. சந்திரான கிளாரன்ஸ் பீரிஸ் என்பவரின் பெயரில் வந்த அறிக்கையை முதலில் சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டிருந்தது. ஆனால் அவர் தற்போது தங்கள் உறுப்பினர் இல்லை எனவும் தற்போதைய சூழ்நிலையில் அரசியலில் நுழைவதோ, தேர்தலில் பங்குபற்றுவதோ சாத்தியமில்லை என்றும் லண்டன் கிளை செயலாளர் சி.ஐ.பெனண்டோ ஐலண்டிற்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார்.

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஒத்திவைப்பு

யூன் மாதம் நடைபெறவிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தற்போது காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறப் படுகிறது. உலகவங்கியின் தலையீடே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. எயர்பஸ் விமானங்கள் வாங்குவதில் ஏற்பட்ட பிணக்கு, மற்றும் தேர்தலை ஒட்டி உலக வங்கியின் ஆலோசனைகள் அமுல்படுத்தப படாமையே இதற்கு காரணம்.

இந்த ஒத்திவைப்பால் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் பின்போடப்படக் கூடும் அல்லது கைவிடப்படக் கூடும்.



# முனியின் பதில்கள்

புலிகளுக்கு வீழ்ச்சி நெருங்கிக் கொண்டு வருகிறதா முனிவரே?
ராஜேஸ், ரொரன்ரோ
**புலிகளின் ஈடு இணையற்ற புகழின் உச்சகட்டம் முடிந்து விட்டது. புலிகளுக்கு வீழ்ச்சி ஏற்படுமாயின் அதன் முழுப் பெருமையும் புலிகளின் தற்போதைய தலைமைக்கே போய்ச்சேரும்.**

கனடா வந்த தமிழகப் பத்திரிகையாளர்களிடம் ஈழக் கோரிக்கையை மீண்டும் தமிழ்நாட்டில் வலுப்படுத்த ஆவண செய்யுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளதுஎனப் படித்தேன் இது புலிகளை அவமதிப்பதாகாதா?
ராஜேஸ் ரொரன்ரோ
**எமது போராளிகள் தமிழ் நாட்டில் செய்த கலாட்டக்களில் தொடங்கி, ராஜீவ்காந்தி கொலைவரை ஒவ்வொருநாளும் ஈழத்தமிழர்களின்பால் தமிழ் நாட்டு மக்கள் கொண்டிருந்த பற்று குறைந்து கொண்டே வந்திருக்கிறது. ராஜீவ் கொலைக்கும் பிறகு ஈழத்தமிழரை நம்பத்தகாதவர்களாக பார்க்கும் அளவிற்கு எமது நிலமை அங்கு போய்விட்டது. இதற்குக் காரணமான எமது அரசியலை நாம் திருத்த முயல்வதே அவசியமாகும் அதைவிட்டு படம் சப்ளை பண்ணுவதிலிருந்து, பந்த் நடாத்துவது வரை அவர்கள் செய்யட்டும். நாங்கள் வாங்கிப் பார்ப்போம் என்ற மனப்பாங்கில் கோரிக்கை விடுவது சிரிப்புக்கிடமானது.**

கனடா தமிழ்மக்களை இன்று எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சனை என்ன?
தர்மா மொன்றியால்
**சுபமங்களா**

பச்சைப்பாலகர்களான கரும் புலிகள்தாக்குதலுக்குப்போகுமுன் பிரபாகரனுடன் ஒருவேளை சேர்ந்து உணவு அருந்திவிட்டு சாகப் போகிறார்கள் இது எதைக் காட்டுகிறது முனிவரே?
மோகன் மொன்றியால்
**ஹூம் பிரபாகரன் காந்தி வழியல் உண்ணாவிரதமிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.**

உலகத்தமிழரிலும் வேறு சில கனடாப் பத்திரிகைகளிலும் பார்ப்பனியம் பற்றி எழுதுகிறார்கள் ஈழத் தமிழர்களுக்கு பார்ப்பனியம் எந்த அளவில் ஒரு பிரச்சனையாக இருக்கிறது?
ஜெயசேகர், மொன்றியால்
**வேதமறிந்தவன் பார்ப்பான் நல்ல வித்தை தெரிந்தவன் பார்ப்பான் என்ற யோசனையின்றி தமது கட்டுரைகளை இங்குள்ள சிலர் எழுதுகிறார்கள் தமிழக பத்திரிகைகளைப் பார்ப்பான். பிறகு அதேபோல திருப்பி எழுதுவான்.**

அரசியல் ஆலோசகராயிருந்தும் இசகு பிசகாக அறிக்கை விடும் பாலசிங்கம் மாத்தயா பிரபா ஒற்றுமை குலைந்த பின்பும் எதுவித அறிக்கையும் விடக்காணேமே?
ராஜன் ரொரன்ரோ
**குலைக்கவேண்டிய அவ்வளவும் குலைத்தாயிற்று. இனி புதிதாக எதை குலைப்பது என்று யோசித்துக் கொண்டு இருக்கின்றாரோ என்னவோ....**

ஊருக்கு போக ஆசை வருவதில்லையா முனிவரே?
கண்ணன் ரொரன்ரோ
**ஏன் வருவதில்லை.... ஆசைகள் ஒருபுறமிருக்கட்டும் சில வாரங்களுக்கு முன்னால் ஏ.பி.ஸி வேர்ல்ட் நியூஸில் சுற்றுலாப் பயணிகள் பற்றி சொன்னார்கள். கூடவே ஸ்ரீலங்கா, என்றார்கள் காதையும் கண்ணையும் தீட்டிக் கொண்டு பார்த்தேன். கொழும்பிற்கு ஆண் தன்னினச் சேர்க்கையாளரான ஐரோப்பியர் அதிகம் செல்வதாயும் ஸ்ரீலங்கா சிறுவர்களை அதற்கு பயன்படுத்துவதாயும் மூன்று நிமிட ரிப்போர்ட்.. ஒரு சிறுவன் விபச்சாரத்தில் ஈடுபடவில்லை என கோபித்து அவனது தந்தை உடலில் சூடு போட்டிருக்கிறாராம். காட்டினார்கள். கடவுளே... நாம் பிறந்த நாட்டிற்கு இப்படியும் ஒருவகை 'புகழ்' சேர்க்கிறார்களே வெட்கமாக இருக்கிறது.**

பிரபாகரனுக்கு பதிலாக உம்மை புலிகளின் தலைவராக ஆக்கினால் எப்படி இருக்கும்?
கண்ணன் ரொரன்ரோ
**வாராது போல வந்த மாமுனியைத் தோற்போமோ என இங்குள்ள அனுபவம் வாய்ந்த பத்திரிகையாளர்கள் கட்டுரை எழுதுவார்கள்.**

காதல்செய்தவர்கள் பிரிவதற்கும் கல்யாணம் செய்தவர்கள் பிரிவதற்கும் என்ன வித்தியாசம்
கண்ணன் ரொரன்ரோ
**கல்யாணம் இல்லாததால் காதல் செய்தவர்கள் பிரிகிறார்கள் காதல் இல்லாததால் கல்யாணம் செய்தவர்கள் பிரிகிறார்கள்.**

சினிமா நடிகைகளைப் பற்றி எழுதும் நீர் தமிழ் சினிமா நடிகைகளைப்பற்றி எழுதாது விடுவதிலிருந்து என்ன தெரிகிறது?
கண்ணன் ரொரன்ரோ
**நடிகைகளைப்பற்றி எழுதுவதால் முனிக்கு ஆணுதிக்க மனோபாவம்**

என்று குற்றம் சாட்டாமல் விட்டவரைக்கும் நன்றி. நடிகர்களைப்பற்றி எழுதுவ தென்றால் இன்று கமல்ஹாச னைப்பற்றித்தான் சொல்ல வேண்டும் இடுப்பை அசிங்கமாக ஆட்டி நடனமாடும் பிளேபோயாக புகழ் பெற்ற கமல் இன்று தமிழ்படத்தின் போக்கை மாற்றும் பல புத்திசாலித்தனமான பரிசோதனைகளில் ஈடுபடுகிறார். (சமீபத்திய மகாநதி) முன்பெல்லாம் சிவாஜி நடிப்பில் மட்டும்தான் கை போடுவார். எம்ஜிஆர் நடிப்பைத் தவிர மற்றவை அனைத்திலும் 'கைபோடுவார்' எம்ஜிஆரையும் சிவாஜியையும் சேர்த்ததுபோல இருக்கும் கமலஹாசன் நடிப்பு தவிர்ந்த ஏனைய விடயங்களிலும் தலையிடுவதால் திருப்திகரமான முன்னேற்றம்தான் தெரிகிறது திருஷ்டி படத்தக்க விதமாக கமல் பாடுவதுடன் மட்டுமல்ல எழுதவும் செய்கிறாரே! ஆகவே கமலை பாராட்டுவதில் உமக்கு ஆட்சேபனை கிடையாது என்றே நினைக்கிறேன்.

கனடா ஈழநாடு மறைந்து தமிழ் ஈழநாடாகியது 'தமிழோசை' காலமாகியது ஈழநாடு உயிர்த்தெழுந்தது. இப்போ கனடாவும் தமிழும் வருகின்றன அதேபோல்முன்பு செந்தாமரையும் ஒரு 'செந்தாமரை மஞ்சரி' வந்தது பிறகு செநதாமரை செத்துப்போக மஞ்சரி மட்டும் உயிர்த்தெழுந்தது இதற்கான காரணம் என்ன முனிவரே?
நேசன் ஸ்காபரோ
*இதைத்தான் பத்திரிகைச் சுதந்திரம் என்று சொல்வார்கள். எவ்வளவு சுதந்திரமாக பத்திரிகைகள் நடாத்தப்படுகின்றன பார்த்தீர்களா?*

உமது கருத்துக்களும் கியூறியஸின் கருத்துக்களும் தாயகத்தின் கருத்துக்களா?
சம்பந்தன் மிஸிசாக்கா
*சேரனின் கருத்துக்கள் 'மஞ்சரியின்' கருத்துக்களல்ல (இப்படியும் பார்க்க ஆசை)*

சுபமங்களாவில் வந்த கனடாவில் தமிழ் என்ற கட்டுரைக்கு பலமான ஆட்சேபனையை தெரிவித்து தலையங்கங்கள் எழுதப்பட்டு கட்டுரைகள் வருகின்றனவே!
சம்பந்தன் மிஸிசாக்கா
*புலிகள் மாமனிதர் என தமிழீழத்திலிருந்த தம்மவருள் சிலரைக் கௌரவிக்கும்போது கேட்டுக்கொண்டிந்த கூட்டம்.... ரொரன்டோவில் அழைக்கப் பட்டவர்களுக்கு மட்டும் கூட்டம் வைத்து அதனுள்ளிருந்து சிலரை கனடாவின் மாமனிதர்களாக பிரகடனப்படுத்த தகவல் சொல்லும்போது பேசாமலிருக்கும் கூட்டம் ஒரு மகரந்தனுக்காக தலையங்கமே எழுதுகிறது வாழிய வாழியவே.*

முனிவரே உங்களிடம் ஒரு கேள்வி பெண் ஆணை காதலிப்பது நல்லதா. . ஆண் பெண்ணை காதலிப்பது நல்லதா?
கீதப்பிரியன் வின்னிபெக்
*இருவருமே ஒருவரை ஒருவர் காதலிப்பதுதான் நல்லது. முதலில் ஒருவர் மற்றவரை கண்மூடித் தனமாக காதலிக்க ஆரம்பிக்க வேண்டும். இவரது காதலை மற்றவர் தெரிந்து கொண்டாலும் அவரும் இவரை கண்மூடித் தனமாக காதலிக்க வேண்டும். கடைசியில் இருவரும் ஒருவரை ஒருவர் கண் மூடித்தனமாக காதலிக்கவேண்டும் அதுதான் நல்லது unfortunately உலகில் எப்போதும் இப்படி நடப்பதில்லை.*

இசைஞானி இளையராசாவை இப்போது 'மாஸ்ட்ரோ' இளையராசா என்று எழுதுகிறார்கள் இது சரியா?
கீதப்பிரியன் வின்னிபெக்
*இந்தியாவின் பல சங்கீதமேதைகள் மேற்குக்கு நன்கு அறிமுகமாகியுள்ளதுடன் இசைக்கோர்வை எனப்படும் ஸிம்ஃபனியை தொகுத்துக் கொடுத்தும் இருக்கிறார்கள் ரவிசங்கர், எல். சுப்பிரமணியம் போன்றோர் இந்தியக் கருவிகளை வைத்து மேற்கும் கிழக்கும் இணைந்த இசையை அளித்தனர் மேற்கின் இசையுலகு அதை புதுமையாக ரசித்தாலும் அந்த இசையை திருப்பி வாசிக்க இந்திய இசையில் அபார திறமையுள்ளவர்களே தேவை. ஆனால் இளையராசா சமீபத்தில் எழுதிக்கொடுத்த இசைக்கோர்வை எதுவித இந்திய இசைக்கருவிகளின் கலப்புமற்ற மேற்கின் இசைக்கருவிகளை மட்டுமே ஆதாரமாக கொண்ட கம்போஸிங் சுமார் ஒன்றரை நூற்றாண்டு கால இசைப் பாரம்பரியம் கொண்ட றோயல் பில்ஹார்மோனிக் குழு இளையராசாவின் இந்த ஸிம்பஃனியை ஏற்று வாசித்தால் இளையராசா மாஸ்ட்ரோ ஆகிக்கொண்டார்.*

சமீபத்தில் கேட்டு ரசித்த பாடல்களில் உமது மனதை தொட்ட காதல் பாட்டுக்கள் சிலவற்றை சொல்லுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் முனியரே?
கீதப்பிரியன் வின்னிபெக்
*ஆஹா..... "புத்தம் புதுமலரே.... என் ஆசை. சொல்லவா... கேட்டிருக்கிறீரா?... "தாஜ்மஹால் தேவையில்லை..." கேட்டிருக்கிறீரா அது சரி ...எதற்காக இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறீர்? ஒருவேளை காதலிக்கிறீரோ?*

கனடாவில் வாழ நேர்ந்த தமிழ் மக்களுக்கு கனடாவில் வெளிவரும் பத்திரிகைகளிலிருந்து சுதந்திரம் எப்போது கிடைக்கும்.முனிவரே?
ஆனந்த், மொன்றியால்
*நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி நலனென்று மறியாத புலியாரைக் கூடி பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்*
*புல புலெனக் கலகலெனப் பத்திரிகை பெறுவீர் காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர் கவர் பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக் கொண்டே*
*ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல*
*அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே!*

# அன்ரனி பிறதர்ஸ்

## மாபெரும் மலிவு விற்பனை

பெப்ரவரி 15 முதல் மார்ச் 15 வரை

**1484 Queen West (at Jameson)**

**Tel:588 3447**

***இறைச்சி வகைகள்***

ஆட்டிறைச்சி றாத் $2.49
மாட்டிறைச்சி றாத் $2.49
(எலும்புகள் இல்லாமல்)
உயிர்க்கோழி $2.50
கோழிக்கால் றாத் $.79

***மீன் வகைகள் - றாத்***

பாரை $1.99
திரளி $1.99
கணவாய் $2.99
சீலா $2.49
King Fish $3.99

***மரக்கறி வகைகள்***

கத்தரிக்காய்,பாவற்காய்,
பயிற்றங்காய் $1.29 றாத்
வெங்காயம் $2.49 10 றாத்

***பருப்பு வகைகள்***

மைசூர்ப்பருப்பு, கடலைப்பருப்பு,
துவரம்பருப்பு, உழுந்து, கடலை,
ரவை
றாத் 69 சதங்கள் மட்டுமே

***சவர்க்கார வகைகள்***

ராணி, லக்ஸ், கோம்பா, லைவ்
போய்
$2 டொலருக்கு நான்கு

கடுகு, பெருஞ்சீரகம், வெந்தயம்
.99 200 கிராம்
ஜாம்வகைகள் $1.49
ஹோமோ பால் 2 வீதம் $2.99
தயிர் 750 மிலீ $1.59
முட்டை XL $1.69
டின்பால் பிளாக் & வைட் $1.99

***உங்கள் வதிவிடங்களில் பூச்சித் தொல்லையை அறவே ஒழிக்க எங்களை நாடுங்கள்***

***சகல சுவாமிப் படங்களும் ஐம்பது வீத மலிவு விலையில் கிடைக்கும்***

# ANTONY BROTHERS FASHION HOUSE

***1484 Queen St West***

**Tel:588 3447**

**Feb 15-Mar 15**

***Audio 60 min ¢99 ........ ~~$1.99~~***
***Video 120 min $2.79......... ~~$3.99~~***
***Ladies Clothes $ 9.99........ ~~$14.99~~***
***Single Heart Clock $11.99 .......... ~~14.99~~***
***Double Heart Clock $17.00 .......... ~~24.99~~***
***Classical Art Clock $29.99 ........ ~~39.99~~***

# கொத்தலாவலைக்கு விசாரணை இல்லை

அமெரிக்காவில் இருந்து வெளியேறிய இராணுவ அதிகாரி கொத்தலாவலை மீது விசாரணைகள் நடைபெறாது என்று கூறப்படுகிறது. தனது நிலைப்பாடு பற்றி தளபதி ஜெரி டி சில்வாவுக்கு கொத்தலாவலை விளக்கம் அளித்திருந்தார். இவர் குறித்து விசாரணை செய்வதாயின் சம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்ய விசாரணைக்குழு அமெரிக்கா செல்ல வேண்டி வரும், அல்லது அவர்களை இலங்கைக்கு அழைக்க வேண்டும். இதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உள்ளதால் இராணுவத் தலைமைப்பீடம் இவ்வாறான விசாரணைகளை விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

பூனகரிக்கு தற்போது கொத்தலாவலை பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சிங்க படையணியின் எட்டாவது பிரிவுக்கு பொறுப்பான இவரே பூனகரியில் நியமிக்கப்பட்ட சிரேட்ட அதிகாரியாவார்.

# வெளிநாடு சென்றோரின் வீடுகளை புலிகள் பொறுப்பேற்பு

தங்கள் சொந்த வீடுகளில் மற்றவர்களை பாதுகாப்புக்கும் வாடகைக்கும் வாடகைக்கும் விட்டுச் சென்றவர்களின் வீடுகளை புலிகள் கையேற்கவிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. வெளிநாடுகளுக்கு குடும்பமாகச் செல்வோர் தங்கள் வீடுகளை உறவினரிடம் பொறுப்புக் கொடுத்து விட்டதுடன் சிலர் வாடகைக்கும் கொடுத்து விட்டு சென்றுள்ளனர். தற்போது இது பற்றிய விபரங்களை புலிகள் சேகரித்து வருகிறார்கள். இந்த வீடுகளை அபகரிப்பதே புலிளின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

உரிமையாளர்கள் இல்லாத வீடுகளில் வசிப்போருக்கு தற்போது விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டதுடன் குறிப்பிட்ட கால எல்லைகளுள் அவற்றை நிரப்பிக் கொடுக்காவிடின் இருமடங்கு பணத்தை தண்டமாகச் செலுத்த வேண்டி வரும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். இந்த விபரங்களின்படி தற்போது குடியிருப்போரிடம் புலிகள் வாடகையையும் அறவிட்டுள்ளதாக சரிநிகர் செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.


ATLANTIC AUTO CLINIC LTD

1960 LAWRENCE AVE EAST

Car Certification
29.99

755 8550
CALL
MIKE or RAJAN


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்


Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil



# கங்கையில் ஈரமில்லை

## ஒரு திரைப்பட அபிப்பிராயம்



**அருணன்**

கிராமப்புறம் ஒன்றில் பரம்பரை வழியே பாக்கு சீவல் வியாபாரத்தில் பணக்காரனாய் இருக்கும் ஒருவன் தற்செயலான சந்திப்பில் அறிமுகமாகும் முன்பின் தெரியாத ஒருவனின் ஆசை வார்த்தைகளை நம்பி சென்னை பட்டணம் போய் சீட்டு கொம்பனி ஆரம்பித்து அவனால் ஏமாற்றப்படுகின்றான். சீட்டு கொம்பனி மூலம் மக்களை ஏமாற்றிய குற்றச்சாட்டின் பெயரில் அவன் சிறை வைக்கவும் படுகின்றான். மீண்டும் கிராமத்துக்கே செல்வோம் என்னும் எண்ணத்தில் சிறை மீளும் அவனுக்கு அவனை ஏமாற்றிய அதே ஏமாற்று பேர்வழியால் அவன் சிறையிருந்த காலத்தில் பன்னிரண்டரை வயதாயிருந்த மகள் விபச்சாரியாக்கப்பட்டதும் பத்து வயது மகன் தெருக்கூத்தாடிகளால் வளர்க்கப்பட்டதும் தெரிய வருகின்றது. மகளை கெடுத்து இக்கதிக்கு ஆளாக்கியவனை பழிவாங்குவதே மகாநதியால் சொல்லப்பட்ட கதை. இக் கதை கமலஹாசனுடையது.

இக்கதையில் சொல்லப்பட்ட சேதி என்ன? கிராமத்தான் இலகுவில் ஏமாறக்கூடியவன் என்பதா? ஏமாற்றுக்காரன் பழிவாங்கப்படவேண்டும் என்பதா? - இரண்டுமா?

இரண்டாவது பிரசவத்தில் மனைவியை பறிகொடுத்த இரண்டு பிள்ளைகளின் அப்பா (கமலஹாசன்) தான் கதைநாயகன் கிருஸ்ணசாமி.

சந்தர்ப்பவசத்தால் பண மோசடி குற்றச்சாட்டில் குற்றவாளியாக்கப்படும் பஞ்சாபிகேஸன் ஐயர் (பூர்ணம் விசுவநாதன்) எனும் வக்கீல் குமாஸ்தா கிருஸ்ணசாமியுடன் ஒரே கூட்டு கைதிகளாக சந்திக்கிறார்கள். இதில் ஐயர் பழமைவாதியாக காட்டப்படுகின்றார். இப்பழமை வாதத்தை உறுதிப்படுத்த ஐயர் திணறுவதும், சங்கடப்படுவதும் அருமையாக காட்டப்படுகின்றது. (நல்ல முயற்சி) அதற்காக ஐயரின் கருத்துகள் எல்லாம் தூக்கி எறியவேண்டியது என ஆகாது. உதாரணமாக 'எங்களுக்கு வெளியே போறது தான் முக்கியம். பொறுமையாயிருந்தா சீக்கிரமே போயிரலாம்' என ஐயர் சொல்வது யதார்த்தமானது. ஆனால் கதாநாயகன் பொங்கி எழுவதும் அதற்கான காரணங்களும் நியாயமெனக் காட்டப்படுவது எம்.ஜி..ஆர் பாணியில் யதார்த்தம் போதனையால் அமுக்கப்படுகின்ற நாடக தன்மையை உண்டு பண்ணுகின்றது.

மூலக்கதைக்கும் சிறையின் சம்பவங்களுக்கும் கூடுதலான சம்பந்தம் இல்லை. ஐயரின் சந்திப்பும் ஐயரின் மகள் ஜமுனாவின் சந்திப்பும் ஏற்றுக் கொள்ளப் பட்டாலும் சிறையில் நடக்கும் சண்டைகளும் சிறையில் இருக்கும் ஏனைய கதாபாத்திரங்களும் கதைக்கு அன்னியமாகவே துருத்திக்கொண்டு நிற்கின்றது. கதாநாயகன் கூடுதலாக அடிவாங்குவதும் பின் ஒருக்கால் பொங்கி எழுந்து அடித்து அடக்குவதும் நாயகன் படத்தை ஞாபகப்படுத்தும் ஒரு முயற்சி போல் தெரிகின்றது. - இச் சண்டைக்காட்சிகள் கூடுதல் வன்முறையை ரசிகர்கள் மனதில் திணிக்கும்.

இரண்டாம் கல்யாணத்துக்கு மனத்தில் விருப்பிருந்தும் ஊர் என்ன சொல்லுமோ என்று தயங்கி வெளிக்காட்டாமல் இருப்பதும் மாமியாரே மறுகலியாணத்துக்கு ஒழுங்கு செய்வதும் கச்சிதமான காட்சி அமைப்பு. அதிலும் மணமகள் தெரிவுக்காக வந்த புகைப்படத்தை மீண்டும் பார்க்க சபலப்படுவதும் தயங்கியபடி மாமியாரிடம் படம் கேட்பதும் 'கல்யாணம் செய்ய போற பொண்ணை மாப்பிள்ளை பாக்காமலா? தாராளமாய் பாக்கலாம்' என்றபடி படத்தை மாமியார் கொடுப்பதுடன் 'அதை வைச்சுக்கொள்ளுங்கோ, இன்னொரு கொப்பியிருக்கு என் கையில்' என சொல்லும் போது நாயகன் அசடு வழிவதும் தத்ரூபமான காட்சி.

மகள் காவேரி நித்திரையில் கதைக்கும் பழக்கம் உள்ளவள். இவர் கல்கத்தாவில் விபச்சார பகுதியில் இருந்து மீட்டு கொண்டு வரப்பட்டதும் நித்திரையில் 'விடுங்கடா, இத்தனை பேரும் எத்தனை தரம்தான்..... விடுங்கடா நானென்ன மெஷினே.... என உழறுவது நெஞ்சத்தை தொடும் இன்னுமொரு காட்சி.

சில இடங்களில் கூடுதல் அக்கறையுடன் படமாக்கியிருக்கிறார்கள். மகள் வயதுக்கு வரும் காட்சி, பொலிஸ் காரர்களுடன் பிள்ளைகள் இருவரும் கதைக்கும் பொழுது மகன் துவக்கை தொட்டு தொட்டு பார்ப்பது என. ஆனால் சில இடங்களில் கோட்டையும் விட்டிருக்கிறார்கள். மகன் துவக்கை தொடும் பொழுது பொலிஸ் எருமை மாட்டில் மழை பெய்தது போலிருப்பது, 'சிறு பிள்ளைகளிடம் மருந்து வாங்கி வரச் சொல்ல ஒரு தாதி கேட்பது, நாய் குட்டியை மகன் தூக்கியபோதும் தாய் நாய் சுரணையில்லாமல் இருப்பது, மகன் கண்டுபிடிக்கப்பட்டதும் அவனிடம் அக்கா எங்கேயென கேட்காமல் மறுநாள் மகன் நித்திரை முழித்ததும் பாட்டி எங்கே? அக்கா எங்கே? என்று கேட்கையில் தான் ஏதோ அப்போது தான் மகளின் ஞாபகம் வந்தது போல் 'நீ தான் சொல்ல வேண்டும். அக்கா எங்கே?' என கமல் கேட்பது கோமாளித்தனமான திரைக் கதையாய் தெரிகிறது. இருபிள்ளைகளை பறிகொடுத்தவன் சோகத்தில் இருப்பான். அதே நேரம் ஒருவனுக்கு எந்நேரத்திலும் காமம் தூண்டப்படலாம் தான் -- ஆனால் திரைப்படத்தை பொறுத்த வரை பிள்ளைகளை பறிகொடுத்த ஒருவன் அடிக்கடி சல்லாபப்பட துடிப்பதை காட்டும் போது அவன் பிள்ளைகளை

பறிகொடுத்த சோகத்தை ரசிகர்கள் சரியாக மனதில் வாங்கிக் கொள்ள மாட்டார்கள்.– இது இப்படத்தில் இன்னுமொரு குறை.

திரையிசையை பொறுத்த வரை கோயில் காட்சியில் இளையராஜா அதிக உணர்ச்சி வசப்பட்டும், சண்டை காட்சியில் மரக்குத்தியில் சுத்தியலால் அடிக்க எழும் ஒலியை கொடுத்து படத்திலிருந்து இசையை அன்னியப்படுத்திவிட்டாரே தவிர மீதியில் இசை தனித்து தெரியாமல் படத்துடன் ஒன்றியிருந்தது பாராட்டுக்குரியது. பாடல்கள் படத்தில் கேட்கும் போது காட்சியுடன் ரசிக்கக் கூடியதாயிருக்கின்றது. படத்துக்கு வெளியேயும் கேட்பதாயும் ஸ்ரீரங்கரங்கநாதனின் எனும் பாடல் மட்டும் தேறுகின்றது. ஒலிப்பதிவு குறைகூறும் அளவில் இல்லை. உயர்வாக சொல்லக்கூடிய வகையிலும் படக்கதை ஒளிப்பதிவாளருக்கு கைகொடுக்கவில்லை. எனினும் இரண்டாம் காட்சியின் புகையிரதம் போகும் காட்சியும் கல்கத்தாவில் வாடைகக்கார் ஓடாமல் திடீர் என நிற்கும் காட்சியும் ஒளிப்பதிவாளர் முத்திரைகள்.

ரா.கி.ரங்கராஜனின் உதவியுடன் கமலஹாசனே வசனம் எழுதியுள்ளார். சில இடங்களில் பிரச்சார பாணியில் வசனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவை பொறுத்தவரை இது எடுபட்டால் இம்முயற்சி நன்றுதான். ஆனால் என்னை பொறுத்தவரையில் இம் முயற்சி படத்துடன் ஒன்றி போகாதது போல் தொனிப்பதையே உணர்த்திற்று. பயந்து போயிருந்து அநீதிகட்கு பலியாகாமல் அதை வன்முறையால் ஜெயிப்பதே வழி என்பதே கதை கரு. இது மீண்டும் நாயகனின் எதிரொலி ஆனால் வன்முறைகளை வன்முறைகளால் அடக்கி ஆளலாம் என சொல்லப்படாதது தான் வித்தியாசம்.

ஆகமொத்தத்தில் படத்தில் கூடுதலாக வன்முறைகள் இடம் பெற்றிருக்கிறது. சிறைச்சாலை பாகம் வன்முறைகள் நிறைந்ததே. தலை கொதிகுழம்பில் அமிழ்த்தல், சுவருடன் தலையை மோதுதல் என்று குரூரங்கள் காண்பிக்கப்பட்டன. கதையின் மீதி பகுதியிலிருந்த சோககாட்சிகள் இக் குரூரத்தால் தோற்கடிக்கப் பட்டுவிட்டன.

கல்கத்தா (கஷின் விபச்சார) பகுதி சலாம் பொம்பேயை ஞாபகப்படுத்தப்படுகிறது. முத்தக் காட்சிகள் இரண்டு முறை காட்டப்படுவது புன்னகை மன்னன் பாணியில் விரசம் ஏற்படுத்தாத வகையில் அமைக்கப்பட்டாலும் திரைக்கதை திணிக்கப்பட்டது என்பது புலனாகின்றது.

'சாக்கடையை துப்பரவு செய்யவென்று வன்முறையில் இறங்கினால் தண்ணீர் அல்ல, இரத்தம் தான் ஓடும்' என படத்தில் சொல்லப்படும் வசனம் கதைப்படி மறுதலிக்கப்படுகிறது. இங்கு திரைப்படம் பார்த்தோர் கதை பல சொன்னார்கள். சோகம் நிறைந்த ஒரு குடும்ப படம் என்று –நானும் போய் பார்த்தேன்– இவர்கள் குடும்ப படம் என்று எதை கருதுகின்றார்கள் என்ற கேள்வி இன்னும் உண்டு. சிறைக்கூட பாகத்திற்கு பதில் கிருஸ்ண சாமியின் பிள்ளைகள், மாமியார் இவர்களின் அவலங்கள் காட்டப் பட்டிருந்தால் நிட்சயம் சோகம் நிறைந்திருக்கும். ஆனால் எம்மவர்கள் இதிலுள்ள அதீத வன்முறையை எப்படி புறக்கணித்தார்கள்? டயர் போட்டு உயிருடன் எரித்ததையும், ரத்தம்ஓட கம்பத்தில் கட்டப்பட்ட தமிழனையும் அன்றன்றாடம் உடல் பிளந்த மனிதர்களையும் கண்டு வைத்தவர்களுக்கு இது அற்பம் தான். ஆனாலும்.......

பன்னிரெண்டு வயது மகளை பலாத்காரம் செய்யும் கொடுமையே மகாநதியின் இன்னொரு செய்தி. இந்தியாவில் இது சாதாரணம். ஆனால் அது எம்மவரிடம் எடுபட்டு போனது ஆச்சரியமல்ல. ஆனாலும் அவை காட்சியாய் காட்டப்படாதது ஆறுதல் தான். இனி வரும் படங்களில் அதுவும் வரலாம்..... . இருந்தும் இலங்கையர் மனம் பறிகொடுக்கும் அளவில் திரைக்கதையில்லை.

படத்தில் நகைச்சுவைக்கென பாத்திரம் அமைக்கப'படாதது பாலசந்தரின் தற்கால பாணியின் பிம்பமாக இப்படத்திலும் அமைந்திருந்தது. வழமையான கமலஹாசனின் சொந்த படமுடிவு போல் இப்படத்திலும் காதில் பூ வைக்கப்பட்டுள்ளது. ஹட்டலில் வாள் இருந்ததும் அது மூலம் கிருஸ்ணசாமி தன் கையை வெட்டுவதும், விரல் வெட்டினால் கூட ஓடும் இரத்தம் கூட கைவெட்டியதில் ஓடாததும் இப் படத்தின் புதுமைகள். இதனால் தான் புதுமைப் படம் என்கிறார்களோ?

நடிப்பை பொருத்தவரை சிறுமிகளை கற்பழிக்கும் புதுமுக நடிகர் மோகன் நடராஜ் திறம்பட தெரிகின்றார். சிறுவர்கள் நன்கு நடித்திருக்கிறார்கள்– நடிக்க வைத்திருக்கிறார்கள். கமலஹாசன் அழுவதும் ஆத்திரப்படுவதும் தவிர சகலமும் திருப்தி. எஸ்.என். லக்ஷ்மி தமது பங்கை சீராக செய்துள்ளார்.– மொத்தத்தில் காவேரி, ஜமுனா என நதிகளின் பெயர்களை பாத்திர பெயர்களாக கொண்டு அவை கலக்கும் (இந்திய) மகாநதியில் ரத்தம் உறைந்து கிடக்கின்றது.


கிறிஸ்தவ
திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான
தலைச்சோடனை,
அலங்காரப்
பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு
பெற்றுக் கொள்ள
ராஜி
796 2672

பூங்கொத்துக்கள்
நீங்கள் விரும்பிய
வடிவங்களில்
பெற்றுக்
கொள்ளலாம்
Net, Colorful Flower
Bouquet, Flower
Basket

# வளர்முக நாடுகளும் குடிமனைப் பிரச்சனைகளும்

## வ.ந.கிரிதரன்

வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் கட்டங்களை தொழில் மயப் படுத் துவதாலேற் படும் நன்மைகள் பற்றியும், இவ்விதம் தொழில்மயப்படுத்துவது எவ்விதம் வீட்டுப் பிரச்சனையைக் குறைப்ப தற்கு உதவமுடியுமென்பது பற்றியும் பார்த்தோம். இனி கட்டட மூலப் பொருட்களையும், வடிவமைப்பையும் (Design) எவ்விதம் இவ் வீட்டுப் பிரச்சனையைத் தீர்க்கும்விடயத்தில் கையாளலாம் என்பது பற்றிப் பார்ப்போம். முதலில் கட்டட மூலப் பொருட்களைப் பற்றிப் பார்ப்போம்.

வீடு கட்டுவதற்கான செலவில் சுமார் 60% ற்கும் அதிகமான பங்கை இம் மூலப் பொருட்களே எடுப்பதால், குறைந்த செலவு வீடுகளைக் கட்டும்போது இம்மூலப் பொருட்களைத் தகுந்த முறையில், குறைந்த செலவில் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய வேண்டியதன் தேவை தவிர்க்க முடியாததே. வீட்டிற்கான மூலப்பொருட் செலவுகளை எவ்விதம் குறைக்கலாம்? இதற்கான விடையின் ஒரு பகுதியினை பாரம்பர்யக் கட்டடக்கலை (Traditional Architecture) எமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

### பாரம்பர்யக் கட்டடக்கலை

எமக்கு நன்கு பரிச்சயமான எம் தாய் நாட்டையே எடுத்துக் கொள்வோம். உதாரணமாக யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் ... அங்கு வீடுகள் எவ்விதம் கட்டப்பட்டு வந்துள்ளன என்பதை ஆராய்ந்து பாருங்கள். பனையும் தென்னையும் ஒரு வீட்டின் அமைப்பில் எவ்விதம் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை உடனே புரிந்து கொள்வீர்கள். வீட்டின் கூரைகள், உத்தரம் என்று பனை மரம் பாவிக்கப்படுகின்றது. பனையோலை, தென்னோலை கொண்டு உருவாக்கப்பட்ட கிடுகுகளால் வேயப்படுகின்றன. வீட்டு வளவின் வேலிகள் கிடுகுகளால் ஆக்கப்படுகின்றன. மண்சுவர்கள் மண்தரைகள் என்று மண் பெரிதும் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. வீடுகள் கட்டும்போது மரம்பெருமளவு கிடைப்பதால் மரச் சட்டங்களை உருவாக்கி (Timber frame) வீடுகளை அமைக்கின்றார்கள். இதே மாதிரியான தொரு முறையில் வீடுகள் அமைக்கப்பட்டு வந்துள்ளதை தென்னிலங்கை பகுதியின் பாரம்பர்யக் கட்டடக்கலை நமக்குப் புலப்படுத்துகின்றது. அங்கு அப்பகுதிகளில் பெருமளவில் கிடைக்கும் மரங்களை வெட்டி, மரச்சட்டங்களை அமைக்கின்றார்கள். குறுக்கும் நெடுக்குமாகச் சிறு சிறு பிரிவுகளாகப் அமைக்கப்பட்ட மரச்சட்டங்களில் மண்ணைக் குழைத்து நிரப்புவதன் மூலம் வீட்டுச் சுவர்கள் அமைக்கப்படுகின்றன. இத்தகைய முறையை, (மரச்சட்டங்களை அமைத்து, மண்ணைப் பூசி அமைக்கும் முறையை) ஆங்கிலத்தில் wattle and raub முறை என்றைப்பார்கள். இத்தகைய பாரம்பர்யக் கட்டடக்கலை முறையில் வீடுகள் அமைக்கப்படும் முறையிலிருந்து நாம் முக்கியமாக அறிந்து கொள்வது என்ன? நமது முன்னோர்கள் வீடுகளைக் கட்டும்போது அவர்கள் வாழ்ந்த பகுதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களை மிக அதிகளவில் பாவித்தார்கள் என்பதை அறிகின்றோம். இது எம் முன்னோர்களிற்கு மட்டுமல்ல உலகின் வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களிற்கும் பொருந்தும். பாரம்பர்யக் கட்டக்கலை உலகின் எப்பகுதியைச் சேர்ந்ததாக யிருந்தாலும், பொதுவாக மேற்படி உண்மையையே காட்டி நிற்கின்றது.

வளர்முக நாடுகளின் வீட்டுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் மேற்படி உண்மை கை கொடுக்கின்றது. வீடுகள் அமைய இருக்கும் பகுதிகளில் பெருமளவு காணப்படும் மூலப் பொருட்களை பாவிப்பதற்கு நாம் முயலவேண்டும். வீடுகளிற்கான மூலப்பொருட் செலவில் பெரும் பகுதியை இவ்விதம் பாவிப்பதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம். உள்ளூர் மூலப்பொருட்களைப் பாவிக்க வேண்மென்பதற்காக நம் முன்னோர்கள் பாவித்த மாதிரியே பாவிக்க வேண்டுமென்பதல்ல, நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களைத் தகுந்த முறையில் பாவிப்பதன் மூலம், பெருமளவில் கிடைக்கக் கூடிய உள்ளூர் மூலப் பொருட்களின் தரம் (Quality) உறுதி (strength) நீண்டகால பயன்பாட்டுத்தன்மை (Durability) ஆகியவற்றையெல்லாம் அதிகரிக்கலாம். இது பற்றிப் பல்வேறு வகையான ஆய்வு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. நடைபெற்று வருகின்றன.

### பாரம்பர்ய மூலப்பொருட்கள் (Traditional materials)

பாரம்பர்ய மூலப் பொருட்களாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம். மண், ஓலைகளாலான கிடுகு (Thatch) கல் (stone) மரம் செங்கற்கள் சுட்ட களிமண்ணாலான ஓடுகள், களிமண் சுண்ணாம்பு. முதலில் மண்ணையும், கிடுகையும் எவ்விதம் தரமுயர்த்தலாம் என்பது பற்றிப் பார்ப்போம்.

### மண்ணும், கிடுகும்,

மண்ணும் கிடுகும் நீண்டகாலப் பயன்பாடு குறைவான பொருட்கள்,

30ம் பக்கம் பார்க்க..

# அவையத்து முந்தி இருந்து ஈழத் தமிழர் பெருமையை நிலைநாட்டியவர்

# இலக்கிய வித்தகர் கலாநிதி க.செ.நடராசா அவர்கள்.

வி.கந்தவனம்

ஓர் ஊரில் ஓர் இராசா பிறந்தார். ஊர் நாவற்குழி, இராசா நடராசா பிறந்தது 30.6.1919

இளவல் நடராசன் படிப்பிலே வெகு சுட்டி, மகா விவேகி. இருப்பினும் தந்தை செல்லப்பாவும்தாய் அன்னம்மாவும் தமதுசெல்வக்குமரன் மேற்படிப்புப் படிப்பதை விரும்பவில்லை. ஒரே ஒரு மகன். தமது சொத்துப்பத்து இராச்சியத்தைப் பரிபாலனம் செய்தாலே போதும் என்ற கொள்கையுடையவராக இருந்த னர். எனினும் மகனின் கல்வித் திறனும் ஆசிரியர்களின் அறிவுரைகளும் அவர்களது கொள்கையை உடைத்தெறிந்தன. அந்தக் காலத்தில் பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ்ப் படிப்பு மேன்மையுற காரணமாக இருந்தவர்களில் முதன்மையானவர் விபுலானந்த அடிகளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை நிறுவி அதன் தலைவராகவும் இருந்தவர். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பீடத்தை உருவாக்கிய பெருமையும் அடிகளாரையே சாரும்.

அடிகளாரிடம் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பயின்ற பெருமையுடையவர் நடராசா அவர்கள். இந்தப் பெருமை உரும்பராயைச் சேர்ந்த நவரத்தினம் தங்கராணி அவர்களுக்கும் உரியதாயிற்று. இவர் நடராசா அவர்களுடன் சுவாமி விபுலானந்தரால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற வித்துவான் வகுப்பில் படிக்கும் பேறு பெற்றவர். வித்துவான் பரீட்சை முதன்முதலாக 1949ல் வைக்கப்பட்டது. இதில் இருவர் மட்டுமேசித்தியடைந்தனர். ஒருவர் நடராசா. மற்றையவர் தங்கராணி.

பெண்களுடன் கண்ணிய மாகப் பழகும் பண்பு மிக்க நடராசாவைச்சக்தி ஒன்றுஈர்த்தது. சிவம் சக்தியை நோக்கிற்று . கூர்மதியும் சீரழகும் வாய்ந்த தங்கராணி மீது நடராசாவின் கண்கள் பதிந்தன. காதல் வளர்ந்து 03.09.1951 ல் திருமணமாகப் பூத்தது. நாமிருவர் நமக்கு இருவர் என்ற குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கையை அன்றே கடைப் பிடித்தவர்கள் இத் தம்பதிகள். வத்சலாநங்கை (திருமதி கருணை சின்னையா), மகிழ்நன்நம்பி ஆகிய இணையற்ற செல்வங்களுடன் பூரிப்பெய்தினர்.

இவர்களது திருமணம் அந்தக் காலத்தில் அக்கினிக் குஞ்சையொத்த சமயப் புரட்சி ஒன்றை ஏற்படுத்தியது. எந்தக் காலத்தவர்க்கும் ஒரு பாடமாக அமைய வல்ல முன்மாதிரியைத் தோற்றுவித்தது. வெறும் ஆண் பெண் திருமணமாகவல்லாது இரு சமயங்களின் இல்லறமாக அமைந்து நல்லறத்தை வளர்த்தமை குறிப்பிடத்தக்கதாகும். நடராசா சைவம், தங்கராணி கிறிஸதவர் சமயங்களெல்லாம் போதிப்பது நல்லறமே என்ற தத்துவத்தை உணர்ந்தவர்கள் இவர்கள்.

நடராசா அவர்களின் முறையான தொழில் இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் நியமனத்துடன் ஆரம்பமாகியது. இங்கு தொடர்ந்து பல நிலைகளிற் பணியாற்றித்தமிழ்ச் சேவையின் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் இந்தப் பதவியில் இருந்து தமிழ் ஒலிபரப்புக்கலையின் தரத்தை உயர்த்தியதோடு பல வானொலிக் கலைசார்ந்த வல்லுநர்களையும் உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

நடராசா அவர்களின் தமிழ் ஆர்வம் சொல்லிமுடியாது. தொடர்ந்து பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து கொண்டே இருந்தார். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடி எடுப்பதை ஒரு சமூகசேவை இயக்கமாகவே மாற்றினார். இவ்விதம் சேகரித்த ஏட்டுச் சுவடிகளின் கண்காட்சி ஒன்றையும் இளைஞர்களைக் கொண்டு கொக்குவிலில் வைப்பித்தார்.

தமது எம். ஏ. பரீட்சைக்கு ஈழத்துத் தொல்நூலாகிய வையாபாடலுக்கு உரை எழுதினார். கலாநிதிப் பட்டத்துக்கு முற்காலத்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை ஆராய்ந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டைத் தவிர்ந்த மற்றைய எல்லா உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளிலும் பங்குபற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித் திருக்கின்றார். அவையத்து முந்தி இருந்து அறிஞர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்று ஈழத் தமிழரின் பெருமையை நிலைநாட்டிய பேரறிஞர் இவர். இவரது ஆய்வு நூல்களாக 'வையாபாடல் திருத்தப் பதிப்பு' 'ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்பன வெளிவந்துள்ளன.

கலாநிதி நடராசா அவர்கள் இயல்பான ஒரு கவிஞருமாவார். நாவற்குழியூர் நடராசன் என்ற கவியாறு பல பத்திரிகைகள் வழியாகப் பாய்ந்து தமிழ் அன்னையைக் குளிர்வித்தி ருக்கின்றது. 'சிலம்பொலி', 'கவிக்கற்பரசி' ஆகிய இரு கவிதைத் தொகுதிகளும் இவரது கவித்துவ

28ம் பக்கம் பார்க்க..

# வேலிகள்



கடற்புத்திரன்

காலங்காத்தாலே அம்மாட நச்சரிப்பை தாழமுடியாது பாண் வாங்க சைக்கிளில் வெளிக்கிட்ட வேலன், 'சேர்ச்' சந்தியில திரும்பிய போது எதிர்ப் பக்கத்தில் வீதியோரமாகவிருந்த வயிரவர் கோவிலடியில் மக்கள் நிற்பது ஆச்சரியத்தைக் கொடுத்தது. போனுன்
"சிவத்திற்கு விசர் பிடித்துவிட்டது.

கதிரேசு குமுறிக் கொண்டிருந்தான் பேச்சில் 'வீரம்' எல்லாம் வந்து போய்க்கொண்டிருந்தது.

சிறிது தள்ளி "கையை வெட்ட வேண்டும்" கள்ளு முட்டியோடு நிற்கிற செல்லன் சொல்லிக் கொண்டிருந்தான். இவன் பகிடிக்காரன். அவனை பெரிவர் சிறியவர் சூழ்ந்திருந்தார்கள் அவன் சீரியஸாக கதைப்பதாகப்பட்டது.

அப்படி என்ன நடந்து விட்டது?

ஓரமாக நிற்கிற ராசையாண்ணை "ரத்தம் தொடர்ந்தும் சிந்தப் போகிறதோ?" முணுமுணுப்பதை பார்த்தான் முத்தனின் பெரியப்பா பாரதூரமாக ஏதோ நடந்துவிட்டதைப் புரிந்து கொண்டான்.

"அண்ணை" கிட்டப்போய் "என்ன நடந்தது? கேட்டான்.
"உன்ர கூட்டாளிக்கல்லோ மண்டாவாலே ஏத்திப் புட்டான்கள்" குரல் அடைக்கச் சொன்னுர்.
"முத்தனுக்கா ........" பதறிக் கேட்டான்
"ஓம்" என்ருர்
"இப்ப எப்படி? " வார்த்தை தவறவில்லை
"பொன்' பெடியள் ஆஸ்பத்திரிக்கு கொண்டோடியிருக்கிருர்கள்" ஒருவித ஆறுதலுடன் சொன்னுர்.
'சிவம்' எந்தாளை என்று அவனுல் அனுமானிக்கமுடியவில்லை. பல சிவம் அங்காலயிருந்தனர்.
"அண்ணை வாரன்" சைக்கிள்ளை கடைப்பக்கம் விட்டான்.

பவித்திரா கடைக்கு முன்னுல் இருக்கிற 'வீதி போக்' அங்கால பெடியள்களின் கேந்திரப்பகுதி மாலைநேரங்களில் வரிசையாக இரு பக்கமுமிருந்து கதைத்துக் கொண்டிருப்பார்கள். பிரச்சனை நடந்தாலும் லீவுநாளாக விருப்பதாலும் கனபேர் நிற்பார்கள் அவன் வகுப்புத் தோழர்களை சந்திக்கலாம் என்று நினைத்தான். கனகன் மட்டுமே இருந்தான்.
"எங்கடா சுரேஷ்" கேட்டான்.
"முத்தன் கூட போயிருக்கிருன்" என்ருன்
என்னடா நடந்தது"
"நளினியை தெரியும்தானே (வகுப்புப்பெண்) அவளிட கையை பிடித்து இழுத்தவனும்?" அதிலே தொக்கி நின்ற பலாத்காரம் புரிய.. . உணர்ச்சியை புரிந்து கொள்ள முடிந்தது. எவ்வளவு பெண்ணடிமைத்தனங்களை நாம் மேற்கொண்டாலும், மற்ற சாதி இன, மதத்தைச் சேர்ந்தவன் நம்மூர் பெட்டைகளோட கதைத்து விட்டாலே ரத்தம் கொதித்து விடுகிறது. முத்தன் தவருக நடப்பவனில்லை. கையைப் பிடித்து இழுத்து விட்டால் சிக்கல் தான். மண்டா வீரர் சிவம் நளினிட சித்தப்பா என்பதை புரிந்து கொண்டான்.
"அவன் அப்படிப்பட்டவனில்லையே" என்ருன் கவலையுடன்
"நானும் நம்பவில்லை. வருகிற கதைகள், அவன் கத்தியோட நின்றது எல்லாம் பிரச்சனையின் இறுக்கத்தையே காட்டின" என்ருன்.

பெண்ணை விரும்பாதவன் யாரிருக்கிருன்' 8ம் வகுப்போட படிப்பை நிறுத்தியவன் பருவ மாற்றத்தினுல். சபலப் பட்டிருப்பானே? இயற்கையே! இருந்தால்... பெண்ணடிமைத் தனத்தைக் குறித்து நியாயம் வழங்கப்பட வேண்டும். அதை விட்டுட்டு சாதிக்கொடியை தூக்கிப் பிடித்தபடியே நிற்கிருர்கள்
கனகன் விபரித்தான்
"எங்கடயாட்கள் தடிகளோடு சூழ்ந்து நின்ருர்கள். சிறிது வெறியோடு இருந்த சிவத்தான் மண்டாவை மறைவாக எடுத்துக் கொண்டு வந்திருக்கிருன். எல்லாம் நொடியிலே நடந்து விட்டன" என்ருன்.
'எதுவுமே எங்கட கையிலே இல்லை' என்ற சலிப்பு அவன் பேச்சில் இருந்தது.

★ ★ ★

"பாண் வாங்கிட்டு வாரன் " என்று கடைக்கு போனுன். சைக்கிள்.. கனகனிற்கு கிட்ட ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது. அம்மாட நச்சரிப்பு ஞாபகம் வர விரைவாக வந்தான். முள்ளி அவ்விடத்திற்கு

ஓடி வந்தான். சின்ன செட் பகிடிக் காரன் இவர்களோடு ஒட்டித் திரிகிறவன்.

"கனகண்ணே கத்தி பொல், மண்டா, தடி எல்லாவற்றையும் மாமா வீட்டில் மறைவாக குவிச்சு வைச்சிருக்கிருன்கள்" என்ற சீரியஸ்ஸான செய்தியை சொன்ஞன். அவர் வீடு ரோட்டுப் புறத்தில் இருந்தது.

'முத்தன் பகுதி அடிபட வந்தால், எதிர்த்து தாக்க இங்காலயும் கொஞ்ச பேர் தயாராகி விட்டார்கள்' என்று புரிந்தது.

பெடியளால் பெரிய செட்டை கட்டுப்படுத்த முடியாது. கழகத்தில் காரசாரமாக 'கேள்வி' கேட்பதாலும் "இன்னமும் சாதிப் பிரச்சனையை தூக்கிப் பிடிக்கப் போறீர்களா" என்று சூழவுள்ளவர்களோடு பரவலாக பேசுவதாலுமே கொஞ்சம் தணிக்க முடியும்.

'பொன்'னின் உறுதிப் பாட்டுக்கு 'அவர்களும்' கணிச மானளவு காரணம் எனவே பெடியளின் பேச்சை சிறிதாவது கேட்க வேண்டியிருக்கும். கிராமத்திலே 'கழகம்' நல்லபேரை சம்பாதித்து வைத்திருந்தது. 'அவசரப்பட்டு அடிபாடுகளில் இறங்கமாட்டார்கள்' என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆனல் இந்த முன்னேற்பாடுகள் பயங்கரமானவை. மொக்குத் தனமாக அடுத்தப்பகுதி உணர்ச்சிவசப்பட்டு இறங்கி விட்டால் ரத்த ஆறு பயங்கரமாக பெருகித்தான் நிற்கும்.

அமெரிக்கனிடம் அணுகுண்டு இருக்கப் போய்தானே 'ஏலாக் கட்டத்தில் ஜப்பானில் போட்டான். இவர்களும் முதலில் தடிகளோடு அணுகிப் பார்ப்பார்கள். ஏலாக்கட்டம் வந்தது என்ருல்... மண்டாக்களும் (மீன் முள்ளு) திருக்கைவால்களும் வெளிய வந்து விடும் இவற்றுக் கெதிராக பாளை சீவல் கத்தி துளி நேரம் கூட நிற்க மாட்டாது.

லீவு நாளான அன்று அம்மாவும் தங்கச்சிமாரும் யாழ்ப்பாணத திலிருக்கிற ஆச்சி வீட்ட போய் காலைச்சினிமாவுக்கு போறதுக்காக விருந்தார்கள்.

7.00 க்கு போனவன் 8.30 போல வந்தால் எதிர்பார்க்கக் கூடியது தான். அவர்களுக்கு ஊர்ச்சோலிபற்றி, அவன்ர நண்பனைப் பற்றி கவலை ஏது? 'தன் பிள்ளை, குடும்பம், சுகம் என்ற குறுகிய வட்டங்களே சரியானவை' என்று சொல்லி வாழ்கிறவர் களாச்சே!

தொடரும்

# ஜாக்கெட்



திருமதி OC க்கு எப்படி பிரோக் கிளீனிங் வேலை எடுத்துக் கொடுத்தேனே அதுபோல பூங்கொடிக்கும் நான் ஓர் வேலை எடுத்துக் கொடுத்து விட்டேன். இதனுல் அவள் என்னுடன் கொண்டிருந்த கோபதாபங்களை மறந்து நன்ருக ஒட்டி விட்டாள். முதல் சம்பளம் எடுக்க முன்னமேயே எனக்கொரு வடிவான ஜாக்கெட் வாங்கித் தந்து இனிமேல் நான் அதைத்தான் போடவேண்டும் எனக் கண்டிப்பான உத்தரவும் விட்டாள். ஏற்கெனவே நான் போட்டிருக்கும் ஜாக்கெட்டை வாங்கித் தந்தது திருமதி OC. இப்போது புது ஜாக்கெட்டுடன் என்னைக் கண்டால் அவ நிச்சயம் சந்தேகிப்பா. இப்படியொரு சந்தேகம் அவவிடம் வருவதில் ஞாயம் உண்டு. இன்றுவரை நானுக ஜாக்கெட் எதுவும் வாங்கியதில்லை. எல்லாமே வாங்கித் தந்தவை. இது அவவுக்கும் தெரியும்....

இருவரது ஜாக்கெட்டையும் கழட்டி வைத்து விட்டு வெளியே திரிவதென ஒரு புரட்சிகரமான முடிவை எடுத்தேன். வெளியே படு குளிராக இருந்ததால் என் புரட்சித் திட்டம்சுக்கு நூருகியது. அட! புது ஜாக்கெட் போட்டுத் திரிவதற்கும் அருகதையற்ற பாவியாகி விட்டேனே என வருந்தினேன். முடிவில், குளிர்காலம் முடியும் வரை இருவரையுமே சந்திப்பதில்லை என முடிவெடுத்தேன்.

எனது முடிவு தவிடுபொடியாகும் ஓர் நிகழ்சி நடந்தது. முக்கியமான இலக்கியப் பிரச்சனையொன்றிற்காக நான் இருவரையும் சந்திக்க போக வேண்டியிருந்தது. எந்த ஜாக்கெட்டைப்போட்டுக்கொண்டு செல்வதென எனக்குள் பிரச்சனை. வருவது வரட்டும் என முடிவெடுத்து ஒரு பெனியனை மட்டும் போட்டுக்கொண்டு, குளிரில் நடுங்கியபடி இருவரையும் சந்திக்கச் சென்றேன், நடுங்கும் உடலோடு என்னைக் கண்ட அவர்கள் விறைத்து விட்டனர்.

"என்ன நடந்தது! என்ன நடந்தது? "எனத்துடித்தனர்.


"எனது றூமில் கள்ளன் வந்து எனது உடமைகள் அனைத்தையும் திருடிச் சென்று விட்டான். ஜாக்கெட்டும் பறிபோய்விட்டது" என்று கண்ணீர் சிந்தினேன்.

'ஜாக்கட் இல்லாமலும் ஒரு வாழ்வா! நான் உமக்கு வாங்கித் தருகிறேன். நான் உமக்கு வாங்கித் தருகிறேன்' என்று இருவரும் தமது ஹாண்ட் பாக்குகளை சோதித்த போது இருவரும் பணம் சேர்த்தாலே ஒரு ஜாக்கட் வாங்கலாம் என்ற நிலை வந்தது. இதனுல் இருவருக்கும் முகம் ஒருமாதிரி.. என்னைக் குளிரில் நடுங்க விட இருவருக்குமே மனம் இல்லை.

பூங்கொடியும் திருமதி OC யும் கூட்டுச் சேர்ந்து வாங்கித் தந்த ஜாக்கட்டிலே நான் இப்போது மிகவும் சூடாகவேயுள்ளேன்.

(இது ஓர் கற்பனை கலந்த யதார்த்தக் கதையாகவும் இருக்கலாம்)

# ஒருநாள் உயிர்க்கும்!



**சிவப்பிரகாசம்**

டாக்டர் ஜோன்சன் நெதர்லாந்திலிருந்து வந்து விட்டார். அவருடன் அந்த நாட்டு தொலைக்காட்சி நிலையத்தில் இருந்தும் சிலர் வந்திருந்தனர். நாளைக்கு "டாகுயுமெண்றி" யை எப்படி செய்வது என்பது பற்றித்தான் இப்போ கலந்தாலோசித்துக் கொண்டிருக்கின்றனர். டாக்டர் கோவிந்தனின் கருத்து மிகவும் முரண்பட்டிருப்பதால் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்என்பதில் பலருக்கிடையில் கருத்து வேறுபாடு.

" அரவிந்தனின் உடல்நிலை இப்போ எப்படி இருக்கிறது.? நாளைக்கு எம்மால் செய்யப்படப்போகும் TEST எல்லாவற்றையும் தாங்கும் மனோதிடம் அவனுக்கு இருக்கிறதா ? அந்தப் பையனின் முளையை SCAN பண்ண இங்கு வசதிகள் இல்லாத நிலையில் சரியான முடிவுகளை நாம் எடுக்கமுடியுமா ?"

இப்படிப் பல கோணங்களில் அங்கே குழுமியிருந்த ஆய்வாளர்கள் கதைத்துக் கொண்டனர்.

அரவிந்தனை கொழும்பில் வைத்து அல்லது வேறு வெளிநாட்டில் வைத்து ஆராய்வதற்கு பலரும் விரும்பியபோதும் அந்தக் கோரிக்கையை அரவிந்தனின் பெற்றோரும் விடுதலை இயக்கத்தினரும் விரும்பவில்லை.

" டாக்டர் ஜோன்சன் , நீங்க கிப்னொட்டைஸ் பண்ணித்தானே இதைச் செய்ய நினைக்கிறீங்க. அந்த முறைக்கு அந்த ஆள் ஒத்துக்காவிடில் என்ன சப்சிரியுற் வைச்சிருக்கிறீங்க. டாக்டர் கோவிந்தன் ஏற்கெனவே அந்த முறையில் முயற்சி செய்தது வெற்றியளிக்கவில்லையே. மெஸ்மரிச மூலம் செய்த போது நாடித்துடிப்பு மிக அசாதாரணமாகி உயிருக்கே ஆபத்து நேரப் பார்த்தது என அவர் எழுதிய அறிக்கையைப் பார்த்தீர்களா ?"

டாக்டர் ஜோன்சன் பதில் அளிக்கவில்லை. என்ன விதத்தில் இதை approach பண்ணுவ தென்று மனதுக்குள் ஒரு திட்டம் அமைத்துக் கொண்டிருந்தார் . ஒரு அலுவலை முடிக்குமுன்னர் தேவையில்லாமல் கருத்துச் சொல்வதை விரும்பாதவர் அவர் . நாளை செய்யவேண்டியவற்றை மீண்டும் நிச்சயப்படுத்திக் கொண்டார். குடத்தனைக் காட்டையும் கடந்து உடுத்துறைக்கு பிரயாணம் செய்ய வேண்டும். அந்தப் பகுதி இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதனாலும் இயக்கத்தினர் தம் பூரண ஒத்துழைப்பை நல்குவதாய் சொல்லி யிருப்பதனாலும் பிரயாணம் அவ்வளவு பிரச்சனை அல்ல. என்றாலும் டாக்டர் ஜோன்சன் சிலவேளை உளவாளியாக இருக்கலாம் என்ற சந்தேகத்துடனேயே அவர் போகும் இடம் எல்லாம் இயக்கத்தினரின் தோட்டம் இருந்தது.

"பராசைக்காலாஜி" என்னும் புதிய விஞ்ஞானத்துறையில் பல வெற்றிகரமான ஆய்வுகளை அண்மைக்காலமாக செய்து வருபவர் டாக்டர் ஜான்சன். இந்தமுறை நோபல் பரிசு அவருக்கு நிச்சயமாக கிடைக்கும் என பலர் நம்புகின்றனர். இறந்து பின்னர் உயிர் பெற்றதாக கூறப்படும் பலரை பலநாடுகளிலும் சந்தித்து தனது ஆராய்ச்சியை வலுப்படுத்திக் கொணடிருக்கும் ஜோன்சனுக்கு இலங்கையில் இருந்து சென்ற வாரம் தகவல் வந்தது. இராணுவத்தினரின் குண்டடி பட்டு இறந்து விட்டதாக கருதப்பட்ட இளைஞன் ஒருவன் தெய்வாதீனமாக உயிர்பெற்றது மட்டுமன்றி முற்பிறப்பு பற்றிய தகவல்களை தருவதாக அந்த செய்தியில் இருந்தது. இலங்கையின் வடபகுதிக்கு செல்வதுஉயிராபத்தானது என அறிந்திருந்தும் தனது ஆய்விற்கு

இது மிக அவசியமான தடயம் என்பதனால் தனது மற்ற அலுவல்களையும் விட்டு ஓடோடி வந்திருந்தார். ஜோன்சன் இலங்கையின் வடபகுதி செல்வதை அறிந்ததும் இத்தாலியில் இருந்து அல்பிறட் என்பவர் தானும் இந்தப்பயணத்தில் இணைந்து கொள்வதாக அறிவித்தார். ஜோன்சனின் ஆராய்வுக்கு பல உதவிகளையும் இத்தாலியில் இருந்தே செய்பவர் அல்பிரட். வடபகுதிக்குள் நுழைவதற்கு ஜோன்சனுக்கு அனுமதி வழங்கியிருந்த இயக்கத்தினர் அல்பிரட் பற்றிய பூரண தகவல்கள் கிடைக்காமையால் முதலில் தயங்கம் காட்டினர். இருப்பினும் ஆராய்ச்சி சம்பந்தமாகையால்' அல்பிரட்டுக்கு இரண்டு நாள் மட்டும் குடாநாட்டுக்குள் இருக்க இணங்கியிருந்தனர்.

சென்ற மாதம் வவுனியா தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற இராணுவம் அப்பாவிச் சனங்களின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எத்தனையோபேர் உயிர் துறந்தனர் அல்லவா . அதில் ஒருவர்தான் இந்த அரவிந்தன். உள்ளூராட்சி மன்றத்தில்கிளார்க் ஆக தொழில் புரிந்தவர். இறந்ததாக கருதப்பட்டு மரணச்சடங்குக்கு ஆயத்தம்செய்து கொண்டிருந்த போது உடல் அசைந்தது. மூச்சு மீண்டும்வந்தது. வேறுஏதோ மொழியில் அரவிந்தன் ஏதோ சொல்லியபோது இவனுக்கு மூளை பழுதாகிவிட்டது என்றே எல்லாரும் நினைத்தனர். ஆனால் பின்னர் சாதாரணமாக கதைப்பது போல் அவன் கதைத்ததும் எங்கோ ஸ்பெயினில் எத்தனையோ நூற்றாண்டின் முன் தனது பெயர் றிக்காடோ என்றும் அவன் கூறியது பலருக்கு அதிசயமாக இருந்தது. முற்பிறப்பு ஞாபகம் சிலருக்கு வந்தது புதிதல்ல. சில வருடங்களின் முன் ஜேவிபீ செய்த புரட்சியின் போது கொடூரமாக கொல்லப்பட்ட பிறேமாவதி இன்னொரு பிறப்பெடுத்து முன்பு தனக்கு நடந்ததை அப்படியே சொன்னதாக அப்போது பேச்சு அடிபட்டது தெரிந்ததுதானே.

அரவிந்தனுடன் பல மணி நேரம் உரையாடிய பின்னர் டாக்டர் கோவிந்தன் தனது அறிக்கையைஏற்கெனவே பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்தார். அதில் மறுபிறப்பு, ஆவி உலகத்தொடர்பு என்பதெல்லாம் சுத்த முட்டாள்தனம் என குறிப்பிட்டிருந்தார். மூளையில் ஏற்றபட்ட பாதிப்பினால் சில கற்பனைக் கதைகளை அரவிந்தன் சொல்வதாக எழுதிய அவர் பல விஷயங்களை மறைத்துவிட்டார் . ஸ்பானியமொழியை என்றுமே படித்திராத அரவிந்தன் இப்போது அந்த மொழியில் சரளமாகக் கதைப்பது எப்படிஎன்பதையும் அவர் குறிப்பிடவில்லை. அரவிந்தனை ஆழ்ந்த தூக்கத்துக்கு கொண்டு செல்ல முயன்றபோது அது இயலாமல் போய் தானே ஆழ்ந்த தூக்கத்தில் சென்றமையை அப்படியே ஒளித்துவிட்டார். டாக்டர் கோவிந்தனின் அறிக்கையைப் படித்த டாக்டர் ஜோன்சன் அதை கருத்தில் கொள்ளவில்லை. அரவிந்தனும் டாக்டர் ஜோன்சனும் மட்டும் அறையில் இருந்தனர் . அரவிந்தனின் வேண்டுகோளின்படி மற்ற எவரும் உள்ளே இருக்க அனுமதிக்கப்பட வில்லை. ஆழ்ந்த தூக்கத்துக்கு போனபின்னர் ஏதாவது கேள்விகளை கேட்க அதற்கு அவன் சொல்லும் பதில் "அவர்களுக்கு" மாறானதாக அமைந்தால் தப்பிய உயிர் மீண்டும் போய்விடும் என்ற பயந்தான் காரணம். இப்போது அரவிந்தன் ஸ்பானிய மொழியை சரளமாக கதைப்பதாலும் டாக்டர் ஜோன்சனுக்கும் அம்மொழி நன்றாக தெரிந்திருந்தமையாலும் மொழிபெயர்ப்பாளருக்கு அவசியம் இல்லாமல் போய்விட்டது. அரவிந்தனை படிப்படியாக ஆழ்ந்த தூக்கத்துக்கு கொண்டு சென்ற பின் சாதாரண விஷயங்களை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டு முற்பிறப்பு காலத்துக்கு நினைவை நகர்த்த முயன்ற போது நாடித்துடிப்பு மிகஉச்சத்துக்கு போய்விட்டது. அரவிந்தன் மூச்சுவாங்கி ரொம்ப கஷ்டப்படுவது போல் இருந்தது. டாக்டருக்கே கொஞ்சம் பயம் வந்துவிட்டது. ஒருமாதிரி சில நினைவுகளை freeze பண்ணுவதன் மூலம் நாடித்துடிப்பை சாதாரண நிலைக்கு கொண்டுவந்தார் டாக்டர்.

" நீங்கள் இப்போது ஸ்பெயினில் உள்ள சலவேர் என்ற கிராமத்தில் உமது திருமணநாளைநினைவுகூருங்கள். அந்தக் காலத்தில் இலங்கை இந்தியா போன்ற நாடுகளைப்பற்றி ஏதாவது அறிந்துவைத்திருந்தீரா? ஏதாவது வாசித்த அல்லது தொடர்புடையஞாபகம் ..........?"

" அந்தப்பிரதேசம் பற்றி அறிந்த ஞாபகம். நொஸ்ரடாமஸ் என்ற தீர்க்கதரிசியின் மாணவன் ஒருவர் ஸ்பெயினுக்கு வந்திருந்த சமயம் இந்தப்பிரதேசங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார் "

" நொஸ்ரடாமஸ் என்பவரின் சீடரை சந்தித்துள்ளீரா ? அவர் அந்தப் பிரதேசம் பற்றி என்ன கூறினார் என்பதை கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள்."

அந்தக் கேள்விக்கு அரவிந்தன் சொன்ன பதில் டாக்டர் ஜோன்சனுக்கு மிக அதிசயமாக இருந்தது. இந்தப்பிரதேசத்தை மட்டுமன்றி மேலைத்தேசத்தையே கதிகலங்க வைக்கும் ஒருவன் ஆசியாவில் இந்தக்காலகட்டத்தில் தோன்றுவான் என்பதை நொஸ்ரடாமஸ் சொல்லியிருப்பதாக டாக்டர் ஜோன்சன் படித்திருக்கிறார். அது சீனநாட்டவனாய் இருக்கலாம் என்று சிலரும் தென்னிந்தியனாய் இருக்கலாம் என பலரும் நொஸ்ரடாமஸ் சொன்னதுக்கு கருத்துக்கூறியுள்ளார்கள். ஆனால் இப்போது அரவிந்தன் சொன்னது டாக்டரால் நம்பமுடியவில்லை.

28ம் பார்க்க..

# சிவாஸ் ரேடிங் நிறுவனத்தினரின்
# மாபெரும் மலிவு விற்பனை

## மீன் வகைகள் அனைத்தும் மலிவு விலையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரை | 1.49 | சீலா | 2.49 | சுறு | 1.99 |
| அறுக்குளா | 4,99 | முரல் | 1.99 | கணவாய் | 1.99 |
| விளைமீன் | 4.49 | நீல மீன் | 1.99 | திரளி ,கருந்திரளி | 2.49 |

| | |
|---|---|
| மைசூர் பருப்பு 4 றாத் | 2.99 |
| நல்லெண்ணெய் | 5.99 |
| சோயா இறைச்சி 200 கி | .99 |
| கோழி | 1.99 |
| ஐந்து கிலோ அரிசி மா | 6.99 |
| ஒரு கிலோ அரிசிமா | 1.49 |

| | |
|---|---|
| ஹோமோ பால் | 2.95 |
| 2% பால் | 2.95 |
| குடாஸ் 10 கிலோ கோதுமை மா | 4.99 |
| முட்டை முப்பது | 1.99 |
| வெங்காயம் 10 ரு | 2.99 |

| | |
|---|---|
| goat leg | 1.99 lbs |
| boneless | 1.99 lbs |
| chicken legs | .69 lbs |
| fresh chicken | 1.99 |
| Frozen Red Shnapper, King fish | 2.99 lbs |
| String Hopper mix | 1.99 |
| Pittu Mix | 1.99 |
| Small dictionary | 3.99 |

| | |
|---|---|
| திரு கோப்பி பவுடர் | 3.49 |
| சன்யோ றைஸ் குக்கர் | 55.99 |
| 5 கிலோ உழுத்தம்பருப்பு | 6.99 |
| 5 கிலோ மைசூர் பருப்பு | 7.99 |
| தாய்லாந்து புளி 225 கி | .69 |
| 400கி தேங்காய்ப் பால் பவுடர் | 1.99 |
| தேங்காய்ப் பால் ரின் | .89 |
| தாய்லாந்து தேங்காய்ப் பால் பவுடர் | .99 |

| | |
|---|---|
| உள்ளி 1 றாத் | .99 |
| திரு பிராண்ட் மிளகாய்த்தூள் 2 றாத் | 6.49 |
| பிரகாஷ் பிராண்ட்மிளகாய்த்தூள் 1 கிலோ | 5.99 |
| திரு பிராண்ட் அரிசிமா 1 கிலோ | 1.69 |
| திரு பிராண்ட் அரிசிமா ஐந்து கிலோ | 7.99 |
| இருபது கிலோ பஸ்மதி | 27.99 |
| 5 கிலோ பஸ்மதி | 7.99 |
| சீக்கான் பிராண்ட் அரிசிமா 1கிலோ | 1.59 |
| 1 கிலோ அரிசிமா பிரகாஷ் பிராண்ட் | 1.49 |

# Sivas Trading Co

**3852 Finch Ave E(Kennedy/Finch)**

**321 2739**

# காத்திருக்கிறோம்

அன்றொரு நாள்
மாதவிடாய் பெண்ணொருத்தியின் இரத்தம்
தோய்ந்த சேலை சபைநடுவே உரித்தெறியப்பட்டதே

ஐவரின் கைகளும் கட்டிப்போடப்பட்டிருந்த போதும்
பார்த்திபன் அவள் மானம் காத்து நின்றானே.

என் தேசத்தாலே விலக்காகியிருக்கும் உன்னை
நிர்வாணமாக்கிக்
கெடுப்பவர்களை உன் கருவறையில் சுமந்திருந்தாயே

உன்மானம் காக்க ஓடோடி வந்த கலியுகக் கண்ணன்
எஞ்சியிருந்த ஒரு சொட்டுத்துணியையும்
உன்னிடையிலிருந்து உரித்தெடுத்தானே

வேண்டாம் தாயே மீண்டுமொருமுறை தயவு செய்து
யாரையும் அபயம் கேட்காதே

அதெப்படியம்மா உன் கருவறையில் வளர்ந்தவனுக்கே
தாய்க்கும்தாரத்துக்கும் வேசிக்குமான வித்தியாசம்
தெரியாமல் போனது.

நீ கெடுக்கப்பட்டவள்
இனியெத்தனைமுறை கெடுக்கப்பட்டாலும்
அதே கெடுக்கப்பட்டவளே,
ஆனால் பூப்படையாத உன் பிஞ்சு மகள்

தயவு செய்து உனைக்கெடுத்தவனை
அவள் தந்தையென்று மட்டும்
சொல்லாதே ஏனெனில் அவன்
அவளையும் தாரமாக்கிவிடக்கூடும்

நீ தட்டிக்கொடுத்தவுன் கண்டித்தனப் பிள்ளைகளைக்கூட
தட்டிக் கேட்கும் உரிமையை இழந்தவள் நீ.

தேசமெங்கும் ஓடிச்சென்று
தப்பிப்பிழைத்திருக்கும் பிள்ளைகளை
எண்ணி நீ ஏங்குவது புரிகிறது
காலம் கடந்து விடவில்லைத்தாயே

எம்முயிரையே கொடுத்தாலும்
உன் களங்கம் கழுவப்படப் போவதில்லை
என்பதை நாமறிவோம் ஆனால்
அந்த காமுர்களிடமிருந்து

எஞ்சியுள்ள உன் உயிரையாவது
மீட்டெடுப்பது கடமையெனக்
காத்திருக்கிரோம், அதற்கான நாளைப் பார்த்தபடி

**பவான்**

# பூச்சியம்

என் அன்பு மைந்தனே
கொடுமையோ
உன் பிஞ்சு கரம் தொட்டு
என் நெஞ்சம் மகிழ்ந்த நாளில்
இப்படி ஒரு சோகத்தை நான்
எண்ணிப்பார்க்கவில்லை

என் தள்ளாத வயதில்
உன் அரவணைப்பு எனக்கு
கிடைக்கும் என இருந்தேன்
சர்வகலாசாலைக்கு சென்று படித்தபோது
இன்ப வெள்ளத்தில் மூழ்கினேன்

செங்குருதி வேட்கை கொண்ட
செந்தமிழ் ஈழம் உன்
சரித்திரத்தை மாற்றுமென்று
எண்ணியிருக்கவில்லை
தேசங்கள் கடந்து
பாசங்கள் மறந்து
சோகத்தில் வாழ்வதாய் அறிந்தேன்

உணவு விடுதியிலும் உல்லாச விடுதியிலும்
ஓடியோடி நீ வேலை செய்வதாய்
உன் நண்பன் சொல்லக் கேட்டேன்
நீ பெற்ற பட்டங்கள் எல்லாம்
பாத்திரம் தேய்க்கத்தானே

சாதிக்கொடுமையாலும் அடக்குமுறையாலும்
சபிக்கப்பட்ட எம்மினத்திற்குப்
பாவவிமோசனம் பெற
ஆண்டவன் உன்னைப்போன்றவர்களை
பாத்திரம் தேய்க்க வைத்தாரோ....

பொம்பர் வந்து குண்டு போடும்
திசையறியாமல் ஷெல்கள் வரும்
குறிபார்த்தே துப்பாக்கிச் சன்னங்கள்
ஓடி வரும் அலறவில்லை நான்
பாவப்பட்ட பூமியில்
எழுந்துநிற்கும் துப்பாக்கிகள்
எல்லாவற்றையும் விழுங்கி
ஏப்பமிடத் துணிந்த பின்
எல்லாம் பூச்சியம் தான் மகனே
எல்லாம் பூச்சியம் தான்

**கலாமலர் நடராசா**

# தெற்கில் இரத்தக் கறை

ஆக்கம்; நந்தன வீரரத்ன
உதவி; ஹசக ரத்னமலல

நன்றி ராவய 1994 பெப்ரவரி 13
தமிழாக்கம்; செ. லோகநாதன்

***விவசாய குடியேற்றத் திட்டங்களைச் சார்ந்த மக்கள் இன்று பெரும் சமூக ஒடுக்கு முறைக்கு உள்ளாகியுள்ளனர். விசேடமாக தெற்கில் இவ் ஒடுக்கு முறை மிகவும் மோசமடைந்துள்ளது. தோல்வி அடைந்துள்ள இவ்விவசாய குடியேற்றங்களில் வறுமை அதிகரித்து வருவது இந்த ஒடுக்குமுறை உக்கிரமடைவதற்கு காரணமாக உள்ளது. இக்குடியேற்றத் திட்டங்களிலுள்ள இளம் சந்ததியினர் இவ் ஒடுக்கு முறையைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அதற்கு எதிராக எழுச்சியுறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை அழித்து அடக்குவதைத் தவிர நெருக்கடிக்கு சரியான தீர்வை எவரும் தேடுவதில்லை.***

***அம்பாந்தோட்டை மாவட்டத்தின் உடவளவ திட்டத்திலும் பிங்கம விவசாய குடியேற்றத்திலும் இடம் பெற்ற இளைஞர் படுகொலை தொடர்பான ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட விசேட கட்டுரையே இங்கு பிரசுரிக்கப்படுகிறது.***

"இலங்கையில் உள்ள சகல விவசாயக் குடியேற்றத் திட்டங்களையும் இருபது வருடத்திற்கு ஒரு தடவை சுத்தப்படுத்த வேண்டும் அவ்வாறு செய்யாவிட்டால் அங்குள்ள இளைஞர்களுக்கு வயது வந்தவர்களோடு அல்லது அரசாங்கத்தோடு மோதி அவர்களையும் கொலை செய்து தம்மையும் அழிக்க நேரிடும். இதை நிறுத்துவது இலகுவான காரியமல்ல"

இலங்கையின் விவசாய குடியேற்றத் திட்டங்களில் "இளைஞர்கள் காணமற் போதல்" தொடர்பான விபரங்களை திரட்ட நாம் அம்பாந்தோட்டை சென்றபோது நாம் அங்கு சந்தித்த படித்த வாலிபர் ஒருவர் தான் இவ்வாறு கூறினார். நாம் ஏற்கனவே விளங்கியிருந்த இவ் உண்மையைப் பற்றி எம்மால் இயன்றவரை ஆராய்வதற்காக உடவளவை திட்டத்திற்கும் பிங்கம விவசாய குடியேற்றத் திட்டத்திற்கும் செல்ல வேண்டும் என தீர்மானித்தோம். அண்மைக் கால வரலாற்றில் இலங்கையின் வரண்ட பிரதேச விவசாய வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்ட மகத்தான நாவலுக்கு தளமாக அமைந்த மண்ணில் உலவும்போது அந்நாவலின் ஆசிரியரே முதலாவதாக எம் நினைவுக்கு வந்தார். காலனித்துவ இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலேயரான லெனுட் வுல்ப் தான் அவ் ஆசிரியர் வுல்ப் கண்ட அம்பாந்தோட்டைக்கும் இன்று நாம் காணும் அம்பாந்தோட்டைக்கும் இடையேயான வேறுபாடு தான் என்ன? காட்டுக் காய்ச்சலுக்கும், ஒருவரை ஒருவர் கொலை செய்வதற்கும் அகப்பட்டிருந்த பபுன், ஹீன் மெனிக்கா, ஆராச்சி போன்ற பாத்திரங்கள் அம்பாந்தோட்டையில் வளர்நதிருந்த காட்டுக்குள் மறைந்திருந்தன. இன்று? அதாவது வுல்ப் அரசாங்க அதிபராக பதவி வகித்து 80 வருடங்களின் பின்னர் அவை எவ்வாறான அழிவுக்கு முகம் கொடுத்துள்ளன?

அம்பாந்தோட்டை மாவட்டம் எனக் கூறியவுடன் கதிர்காமத்தை கடந்து செல்லும்போது சந்திக்கும் உலர்ந்த வலயப் பிரதேசமே சாதாரணமாக ஒருவரது நினைவுக்கு வரும். ஆனால் மிகவும் அண்மை வரலாற்றில் அம்பாந்தோட்டை எனக் காதில் விழுந்தவுடன் இளைஞர் கிளர்ச்சிக்கு தலைமையகமான அம்பாந்தோட்டையின் இளைஞர்களின் சுடுகாடுகளே நினைவுக்கு வருகின்றன. இலங்கையின் பரம்பரைக் கிராமங்கள் அன்றி, புதிய கிராமங்களே (விவசாய குடியேற்றங்கள்) இவ் இளைஞர்களின் பச்சை சுடலைகளை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக அமைந்தது எவ்வாறு?

"இந் நிலம் மிகவும் செழிப்பானது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களின் நிலங்களை விட செழிப்பான மண் இங்குதான் உண்டு. மறு பக்கம் அம்பாந்தோட்டையின் ஏனைய நிலத்தை விட வளவை கங்கையில் இருந்து நீர்பாயும் இம் மண் மிகவும் செழிப்பானது. ஆனால் முதலாவது சந்ததியினரால் மட்டும் தான் அவற்றைப் பெற முடியும். ஏற்படும் பிரச்சனைகளுக்கு என்றைக்குமே முகங் கொக்க இரண்டாவது சந்ததியினரால் முடியாது. அவற்றை தீர்க்க வேண்டிய அவசியம் இலங்கையின் அரசியல்வாதிகளுக்கும் இல்லை. இரு தடவைகளிலும் இடம் பெற்றது பிரச்சனைகளைத் தீர்த்தது அல்ல, பிரச்சனைகளால் பீடிக்கபட்டவர்களை கொலை செய்தது மட்டுமேயாகும்" அங்குன கொலடுபலெஸ்ஸ என்னும் இடத்தில் நாம்சந்தித்த கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னைநாள் உறுப்பினர் கூறினார். இன்று அவர் அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதில்லை. இன்று அவர் தனது கடந்த கால அரசியல் குறித்து நடுநிலையில் இருந்து பார்க்கிறார்.

இலங்கையின் விவசாயக் குடியேற்றங்கள் பொதுவாக பல செயல்களைக் கொண்ட திட்டங்களாகவே அறிமுகப் படுத்தப்பட்டன. இங்கினமிட்டிய, தப்போவ போன்ற ஆரம்ப கால விவசாயக் குடியேற்றங்களும், கல்ஓயா, உடவளவ, மகாவலி போன்ற மிகப் பாரிய விவசாய குடியேற்றத் திட்டங்களும் மக்கள் மத்தியிலே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றை ஆரம்பித்த அரசியல்வாதிகள் தொடர்சியாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருந்த பெரும்பாலான தமது வாக்காளருக்கு 'மகாவலி திட்டம் பூர்த்தியானவுடன் உங்கள் பிரச்சனைகளும் தீரும்' 'கல்ஓயா திட்டம் பூர்த்தியானவுடன் நாட்டின் பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப்படும்' என்னும் தேர்தல் வாக்குறுதிகளையே அளித்தனர். தேசபிதா என அறிமுகப் படுத்தப்படும் டி.எஸ்.சேனநாயக தொடக்கம் இன்று வரை உள்ள சகல அரசியல்வாதிகளும் இவ் அபிவிருத்தித் திட்டங்களின் மேல் கட்டப்படும் தேவலோகக் கனவில் இலங்கை மக்களை உறங்க வைத்தனர். ஆனால் இன்று நிகழ்ந்துள்ளது என்ன?

உடவளவை திட்டத்தைச் சார்ந்த பிங்கம விவசாய குடியேற்றத்தில் மட்டும் இளைஞர்கள் யுவதிகள் 22 பேர் 1989-90 பயங்கர காலமட்டத்தில் காணமற் போயுள்ளனர். இது ஒரு கிராமத்தின் நிலைமை. காணமல்போன எம்பிலிப்பிட்டிய மாணவர்கள் 31 பேரும் உடவளவத் திட்டத்தைச் சார்ந்த விவசாய குடியேற்றங்களில் இருந்து மட்டும் சுமார் 1300 இளைஞர்களும் யுவதிகளும் காணமல் போயுள்ளனர் என நாம் நம்புகிறோம்.

விவசாயக் குடியேற்றங்களுக்குச் செல்லும் முதலாவது சந்ததியினரும் அவ்வாறே அங்கு பிறக்கும் இரண்டாவது சந்ததியினரும் முகங்கொடுக்கும் பாரிய நெருக்கடிகளை என்றைக்குமே தீர்க்க முடியாது. முதலாவது சந்ததியினர் நாட்டின் ஏதோ ஒரு பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து விவசாயக் குடியேற்றங்களுக்கு வருகினறனர். தமது நெருங்கிய உறவினர்கள், சம்பிரதாய ரீதியான ஊர், அதன் சுற்றுப் புறச் சூழல், தமது அத்துமத்துடன் தொடர்புடைய பிணைப்புக்கள், மனித தொடர்புகள் அனைத்தையும் தகர்த்தே அவர்கள் இவ்வாறு வந்து குடியேறுகின்றனர். அடுத்ததாக காடுகள் வெட்டப்பட்டு தமக்கு வழங்கப்பட்ட நிலங்களை வயல்களாக மாற்ற கடினமாக உழைக்கின்றனர். நிரந்தரமான வீடு ஒன்றைக் கட்டுவதற்காக பிரயாசப்படுகின்றனர். இவ்வேலைகள் பூரணம் அடையும் போது அவர்கள் அக்காலத்திலேயே வயோதிபம் அடைகின்றனர்.

"எமக்கு ஐந்து ஏக்கர் காணி கிடைத்தது. அதில் அரை ஏக்கர் மேட்டு நிலமும் நாலரை ஏக்கர் தாழ்வு நிலமும் ஆகும். அது அரைவாசி திருத்திய காடாகும். குடும்பத்தைச் சார்ந்த எல்லோருமாகச் சேர்ந்துதான் இதனை வயலாக மாற்றினோம். இவ்வாறுன காணி கிடைத்தது. அந்தக் காலத்தைப் பொறுத்தவரை அதிஷ்டம் தான். நாம் கொலன்னவில் பிறந்தவர்களாயினும் (கொலன்ன என்பது ஒரு பிரதேசத்தின் பெயர்) எங்களுக்கு காணி பூமி இருக்கவில்லை. செய்யிறதுக்கு சரியான தொழிலும் இருக்கவில்லை. இதற்கிடையில் நான் கலியாணமும் செய்திட்டேன். அதோடு எங்கே போவதென்றே எனக்கு விளங்கவில்லை. இந்தக் காணி கிடைத்தது பெரிய உதவியாகப் போயிற்று. தென் பகுதியிலிருந்தும், மலைநாடுகளில் இருந்தும் வந்து குடியேறியவர்களுடன் ஒன்றுகப் பழகித்தான் இதையெல்லாம் இந்த நிலமைக்கு கொண்டு வந்தோம். ஆனால் இந்த வயது போன காலத்தில் ஆறுதலாகச் சாகிறதுக்கும் வழி இல்லை....!"

காணமல் போன தனது மகனை எண்ணி அழுது புலம்பும் வயோதிபத் தந்தை வயதான காலத்திலும் மன ஆறுதல் இல்லாமற் போனதைப் பற்றி இவ்வாறு விபரித்தார்.

"எனக்கு பதினெரு பிள்ளைகள் இருக்கிருர்கள். அவர்கள் எல்லோரும் விசாயம் செய்யத்தான் பழகியிருக்கிருர்கள். ஆனால் எனக்கு ஐந்து ஏக்கர் காணி தான் இருக்கிறது. கலியாணம் கட்டியுள்ள இரண்டு மூத்த மகன்மாரும் இந்த ஐந்து ஏக்கர் காணியில்தான் வீடு கட்டியுள்ளார்கள். அவர்களுக்கு வாழ்வதற்கு ஒரு வழியும் கிடையாது. நான் என்னுடைய நாலரை ஏக்கரில் அவர்கள் இருவருக்கும் ஒவ்வொரு ஏக்கர் கொடுத்திருக்கிறேன். ஆனால் இந்தக் காணி வழங்கப்பட்ட சட்டத்தின் கீழ் இக்காணியை பங்கு போட முடியாது. இந்த நிலையில் என்றைக்காவது ஒருநாள் ஒரு பிள்ளைக்குத் தான் எழுதவேண்டிவரும். நான் சாக மட்டும் இந்தக் காணியை ஒரு பிள்ளைக்கும் எழுத மாட்டேன். அப்படி எழுதத்தான் முடியுமா? ஆண் பிள்ளைகள் ஏழு பேர் இருக்கிருர்கள். அவர்கள் எல்லோரும் என்னுடைய பிள்ளைகள் நான் இந்தக் காணியை ஒரு பிள்ளைக்கு எழுதினுல் மற்றவர்கள் என்னை கொன்று போடுவார்கள்.......!"

இலங்கையில் உள்ள சகல விவசாயக் குடியேற்றங்களிலும் உள்ள பாரதூரமான சமூகப் பிரச்சனை இது தான். இது பிங்கம விவசாய குடியேற்றத்துக்கும் பொதுவானது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூடுதலாக பெற்ரோர்கள் கொல்லப்பட்டது விவசாயக் குடியேற்றங்களைச் சார்ந்து குடும்பங்களிலேயே என நாம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கேள்விப்பட்டோம்.

இலங்கையிலுள்ள விவசாயக் குடியேற்றங்களின் இரண்டாவது சந்ததியினருக்கு அடுத்து வரும் பாவச் செயல்கள் இரண்டைச் செய்ய வேண்டாம் என சமுதாயத்திற்கு கட்டளை இடப்படவில்லையா?

"இந்த பிங்கம விவசாயக் குடியேற்றத்துக்கு அயலில் வளவத் திட்டம் ஆரம்பிக்கும் போதே இரண்டு பெரும் விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 300-400 ஏக்கர் பரப்பளவை கொண்டவை. மூடப்பட்டுள்ள இப்பண்ணைகளின் காணிகளை இளைஞர்களுக்கு

வழங்குவதாக ஒவ்வொரு தேர்தலின் போதும் யூ.என்.பி. காரர்கள் கூறினர். ஆனால் அவை தேர்தல் பேச்சுத்தான். ஒரு காலத்திலும் பகிரப்படவில்லை. இப்பொழுது அந்த இரண்டு விவசாயப் பண்ணைகளையும் கொழும்பிலுள்ள கொம்பனிக் காரர்களுக்கு விற்றுள்ளனர். ஒன்றை சித்தாலேப் முதலாளி வாங்கியுள்ளார். இப்பொழுது எங்களுக்கு காணி இல்லை. தனமல்வில பிரதேசத்தில் குத்தகைக்கு காணி பெறுவதானாலும் மகாவலி அமைச்சரின் கடிதம் தேவை. அரசாங்கத்தின் எடுபிடி ஆட்களுக்குத் தான் அவ்வாறான கடிதம் கொடுப்பார்கள். யூஎன்பி அரசாங்கம் கடந்த காலம் பூராவும் இவ்வாறான வேலைகளைத் தான் செய்தது. இந்த நிலமையின் கீழ் வேலை இல்லாத, நிலம் இல்லாத பெடியன்கள் அரசாங்கத்தை தாக்குவம் வாருங்கள் என்று ஜேவிபி அழைத்ததும் இந்த அரசாங்கத்தை தாக்கக்கூடிய கட்சி ஒன்று இருந்திருந்தால் சேர்ந்து தான் இருப்போம். ஜேவிபியால் அதனைச் செய்ய முடியாது என்பதாலேயே நான் ஜேவிபி யில் சேரவில்லை. எல்.ரீ.ரீ.ஈ போன்ற அமைப்பினுடைய உதவியைப் பெற்று அம்பாந்தோட்டையில் தனிநாடு அமைக்க ஒரு வழி இருக்குமானால் அது நல்லது என நான் இப்பொழுது நினைக்கிறேன்"

பிங்கமவிவசாயகுடியேற்றத்தினால் காணாமல் போயுள்ள விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகள் 16-35 வயதுடையவர்கள் இப்பிள்ளைகள் அனைவரும் திட்டவட்டமான வாழ்க்கைப் பாதை ஏதும் அற்ற எமது இளம் சந்ததியினர் நிலப் பற்றாக்குறையால் பீடிக்கப் பட்டுள்ள விவசாய குடியேற்றங் களைச் சார்ந்த இளம் சந்ததியினர் அவர்களது கல்வி மட்டம் மிகவும் குறைவானது. காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தொடர்பாக நாம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி அவர்கள் பிரதானமாக ஆறு குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதை அறிந்து கொண்டோம். ஆனால் இவ்விவசாய குடியேற்றத்தின் கலாச்சாரத்தின்படி குலம் என்பது பரந்த சமுதாய காரணியாக அமையவில்லை இவர்கள் பிரதானமாக கொவிகம கராவ, துராவ, தேவ, பத்கம குலத்தைச் சார்ந்தோர் ஆவர்.

"ஒவ்வொரு தேர்தலின் போதும்எமதுகுடியேற்றக்கிராமம் இரண்டு மூன்றாக பிளவுபடுகிறது. அவ் அப்போதைய நன்மையைக் கருதியே எமது வயது வந்தவர்கள் அரசியலில் ஈடுபடுகின்றனர். சில இளைஞர்களும் அவ்வாறுதான் அரசியல் வாதிகளுடன் பேசி இவைதான் எமது பிரச்சனை இவற்றைத் தீர்ப்பதற்கு ஒரு வழிவேண்டும் என சிந்திப்பது இல்லை தத்தமது பிரச்சனைகளை ஏதோ ஒரு வழியில் எப்படியாவது தீர்க்கவேண்டும் என்றுதான் எல்லோரும் பார்க்கின்றனர். எனது பிள்ளைக்கு தொழில் எனது பிள்ளைக்கு காணித்துண்டு என எண்ணிக்கொண்டு வேலை செய்ய வெளிக்கிட்டதால் தான் இவ்வாறான அழிவுகள் ஏற்பட்டன" பிங்கம தொண்டர் அமைப்புகளில் பணிபுரியும் இளைஞன் ஒருவன் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கூட்டான முயற்சி இல்லை என்பது குறித்து கிராம மக்கள் மீது குற்றம் சுமத்தியது. இவ்வாறு எவ்வாறாயினும் பிங்கம குடியேற்றத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய பிள்ளைகள் அனைவரும் அங்குண கொலபெலஸ்ஸ சனசமூக நிலயத்தின் பூமியில் உள்ளனர் என அங்கு வாழ்பவர்கள் நம்புகின்றனர். இலங்கை இராணுவத்தைச் சார்ந்த சிங்க றெஜிமேன்றின் ஆறாவது படையணியினர் வாடி அமைத்து தங்கியிருந்த இக்கட்டிடத்தின் பின் காணாமல் போன இவ் இளைஞர்கள் அனைவரும் புதைக்கப்பட்டுள்ளனர் என கூறுகின்றனர். இவ் இரு குழிகளிலும் சுமார் 150 இளைஞர்களது எலும்புக் கூடுகள் இருக்கலாம் என இவர்கள் நம்புகின்றனர்.

அரசாங்கத்துக்குச் சொந்த மான இரு கட்டிடங்களுக்கு தீ வைத்து அழித்ததே இக்கிராமத்தில் ஜேவிபியினால் செய்யப்பட்ட அழிவு வேலையாகும். ஆனால் இதற்குப் பதிலாக பிங்கம விவசாயக் குடியேற்ற இளைஞர்களிடமிருந்து அரசாங்கம்பெற்றுக்கொண்ட நட்ட ஈட்டை மதிப்பீடு செய்ய யாரால் முடியும்.

பிங்கம குடியேற்றக் கிராமத்தில் நாம் அறிந்து கொண்ட பரிகாசமான அரசியல் சம்பவங்கள் சிலவற்றை எழுதலாம் என நாம் எண்ணுகிறோம். ஒரு விவசாயக் குடும்பத்தில் மூத்த மகன் ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தார் என்னும் குற்றத்திற்காக கொல்லப்பட்டார். (இச் சம்பவம் இடம் பெற்றது பிங்கம கிராமத்தில் அல்ல) வாக்கைப் பெற்று ஆட்சி அமைத்த அரசாங்கத்தின் ஆணையின் படி செயல்பட்ட இராணுவத்தினால் கைது செய்யப்பட்டே மற்ற மகன் காணாமல் போனார்.....!

இன்னொரு குடும்பத்தில் பல மகன்மாரையும் இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமதி வாய்ந்த சொத்துக்களையும் (தீ வைப்பு காரணமாக) இழந்த குடும்பம் ஒன்று உண்டு. இவ் மகன்மாரை இராணுவம் கைது செய்யும் போது தகப்பன் தீவிர யூ. என்.பிகாரர். இப்புதுமையான தந்தை அடுத்த தேர்தலிலும் யூஎன்பி வெல்லும் என்னும் நம்பிக்கையில் ஆவலுடன் காத்திருக்கின்றார்....!

பிங்கம விவசாய குடியேற்றத்தை அண்மித்த கிராமத்தில் மாகாணசபை தேர்தலுக்கான வேட்பாளர் ஒருவர் இருக்கிறார். அவன் பிங்கம கிராமத்தில் மட்டுமன்றி சுற்றியுள்ள ஏனைய கிராமங்களிலும் இளைஞர்கள் காணாமல் போவதில் தீவிரமாக தனது கட்சிக்கு துணையாக செயல்பட்டவர். இன்று அவரைச் சுற்றி இருந்து தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபடுபவர்களில் அனேகர்

**23ம் பக்கம் பார்க்க..**

# ஊழல்களை கட்டுப்படுத்த முடியாத நிலமை

## 1994 பெப்ரவரி 13 ராவய ஆசிரியர் தலையங்கம்

### தமிழாக்கம் செ.லோகநாதன்

உயர் நீதிமன்றத்தின் 190 இலட்சம் ரூபாய் மோசடிச் சம்பவத்தின் பின்னணியில் மாகாணசபை உள்நாட்டு விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க அவர்களின் சகோதரரும் நீதி சேவை ஆணைக்குழுவின் செயலாளரும் இருப்பதாக பொலீஸ் விசாரணைகளில் அம்பலமாகியுள்ளதாக அறிய முடிந்தது. புகையிரத பொது முகாமையாளர் வெக் சில்வா மட்டுமன்றி போக்குவரத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸ், மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் சந்திர பண்டார ஆகியோரும் இலஞ்ச ஆணையாளரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர் எனவும் அறிகிறோம். ஹில்டன் ஹோட்டல் கட்டிட நிர்மாணத்துடன் தொடர்பாக இடம் பெற்ற மிகப்பெரும் மோசடியின் பின்னணியில் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் கே. என். சொக்சி இருப்பதாக நீதிமன்ற விசாரணைகளிலிருந்த அம்பலமாகியுள்ளது.

இவ் விடயங்கள் அனைத்தும் எமது நாடு எத்திசையில் பயணம் செய்கின்றது என்பதை தெளிவாக காட்டுகின்றன. உயர் நீதிமன்றத்தின் பணமோசடிக்கு பொறுப்பான நபரை கைது செய்வது எவ்வாறாயினும் அவரைச் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்வதற்குக் கூட நீண்ட காலம் எடுத்தது. இவ் ஊழல் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் பெரும் புள்ளி ஒருவரின் சகோதரர் இருந்ததே சேவை இடை நிறுத்தம் செய்வதற்கு நீண்டகாலம் எடுத்தற்கான காரணம் என்பதும தெளிவான விடயாகும். அரசியல் பெரும்புள்ளிகளின் இலஞ்ச குற்றங்கள் தொடர்பாக இலஞ்ச ஆணையாளர் பாராமுகமாக இருந்து தனது நடவடிக்கைகளை சின்ன மனிதர்களின் இலஞ்சக் குற்றங்களை கண்டுபிடிக்க மட்டும் நடவடிக்கை எடுத்திருந்தால் இலஞ்ச ஆணையாளரால் தொடர்ந்தும் பதவி வகித்து சகல சம்பவங்களுடனும் நன்றாக வாழ்வதற்கு இடமிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் கே. என்.சொக்சி தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்தில் அம்பலமாகியும் பின்னரும் அவர் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது மட்டுமன்றி நாட்டின் அதி உயர்ந்த நீதிக்குத் தொடர்பான அரசியல் விவகார அமைச்சராகவும் செயல்படுகின்றார்.

திறைசேரிச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அவர்களை பதவியிலிருந்து விலக்கவேண்டிய அளவுக்கு விடயங்கள் அம்பலமாகியும் இவை எதுவும் அவரது இருப்புக்குத் தடையாக அமையவில்லை. காலம் சென்ற ஜனாதிபதி ஆர்.பிரேமதாச அவர்களால் உருவாக்கப்பட்ட லோறன்ஸ்விசாரணைப் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்ட அரசாங்க அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான ஊழல் மோசடிகள் பற்றிய அனைத்து தகவல்களையும் மிக நன்றாக அறிந்துள்ள நபர் திறைசேரிச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அவர்களேயாகும். இதன் காரணத்தினாலேயே திறைசேரிச் செயலாளரை பாதுகாக்க வேண்டிய கொள்கையை அரசாங்கம் கொண்டுள்ளது என்பதும் தெளிவானதாகும்.

நாட்டை ஆள்பவர்களின் நிலமை இவ்வளவு கீழ்த்தரமான அளவுக்கு வீழ்ச்சி அடைந்திருக்கும்போது நாடு பயணம் செய்து கொண்டிருக்கும் திசை எவ்விதத்திலும் நல்லதாக அமைய முடியாது. நாட்டை ஆளும் அரசியல்வாதிகள் தொடக்கம் உயர்ந்த பதவிகளை வகிக்கும் அரசாங்கம் உத்தியோகத்தர்கள் வரை அனைவரும் ஊழல்களுக்குள் வீழ்ந்துள்ள தோடு கீழ் மட்டங்களை விட மேல் மட்டங்களிலேயே ஊழல்கள் இடம்பெறுவதால் ஊழல்கள் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாததாக மாறியுள்ளது என்பது தெளிவானதாகும்.

இந் நிலைமையில் அடிப்பட மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாடு வெற்றி காணாவிடில் நாடு பெரும் அழிவுக்குள் வீழ்வதை தடுக்க முடியாது.

## தெற்கில் இரத்தக்கறை..

இருந்தவர்களாவர். அன்று இவ் மாகாண சபை உறுப்பினரிடமிருந்து தமது உயிரைப் பாதுகாப்பதற்காக காடுகளில் மறைந்திருந்த இவர்கள் இன்று அவரை வெற்றி அடையச் செய்வதற்காக உயிரைப் பணயம் வைத்து உழைக்கின்றனர்!

இவ் அரசியல் கூத்துக்கள் அனைத்தின் மத்தியிலும் விவசாயக் குடியேற்றங்களில் இடம் பெறும் படுகொலைச் சுழற்சியை நிறுத்த எவ்வித வழிகளும் இல்லை. அம்பாந்தோட்டையில் நிறுவபட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைகளிலும் பாராளுமன்ற உறுப்பினரின் பெயர்ப்பட்டியலுக்கே தொழில் வழங்கப்பட்டுள்ளன, பயிர்ச் செய்கைக்கான கடன் தொடக்கம் சகல விவகாரங்களும் கட்சி அரசியலுக்கமையவே இன்னமும் இடம் பெறுகின்றன. இவ்வாறான நிலமையின்கீழ் இங்கு வாழும் இளைஞர்களும் யுவதிகளும் 20 வருடத்திற்கு ஒரு தடவை படுகொலை செய்யப்படுவதை நிறுத்துவதற்கு வேறு எவ் வழியும் எஞ்சியிருக்கவில்லை என்றே நாம் கருதுகிறோம்.

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 17

## சின்னத்தம்பி வேலாயுதம்

### இலங்கையும் இந்தியாவும்

இத்தொடரில் அந்நியர் ஆட்சியிலிருந்துவிடுதலையடைந்து பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை அறிமுகப்படுத்திக் கொண்ட இந்த இருநாடுகளின் உறவுகள் பற்றியே முக்கியமாக ஆய்வு செய்யப்படும். அந்நியர் ஆட்சிக் காலத்திலும் அதன் முன்னைய முடியாட்சிக் காலங் களிலும் இன்னும் முன்னேக்கிச் சென்று பூர்வீக காலத்திலும் இந்த இரு நாடுகளின் உறவு எத்தகையதாக இருந்தது என்பதை ஆய்வு செய்வது பயனற்றது.

இரண்டாவது உலக மகாயுத்த முடிவில் ஏற்படுத்தப்பட்ட புதிய உலகக் கட்டளைகள் இங்கு முக்கியமாகக் கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சாசனமும், ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் உலகின் புதிய வடிவத்துக்கான ஆணி வேராயுள்ளன. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் நடந்த சில முக்கிய மாறுதல்களை இங்கு குறிப்பிடல்பொருந்தும். ஜேர்மனி, வியட்னும் பிரித்து வைக்கப்பட்டு இணைந்து விட்டன. கொரியாவும் பிரித்து வைக்கப்பட்டது. இந்திய உபகண்டம் பாகிஸ்தான் என பிரிக்கப்பட்டு மீண்டும் பங்களாதேஷ் பிரிந்தது. சீனு ஒரு சோஸலிச நாடாகப் பரிணமித்தது. ரஷ்யா இணைந்து இன்று உடைந்துள்ளது. சோஸலிச போராட்ட மையங்களை உடைப்பதற்கான மாற்றீடாக தேசிய இனப் பிரச்சனைகள் கூர்மையடைந்தன. இவ்வாறுன மாற்றங்களின் பின்னணியில் ஐ. நா. வில் அங்கம் வகிக்ககூடிய ஒரு வல்லரசு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வல்லரசுகளின் அங்கீகாரம் இருந்துள்ளது.

இதனுலேதான் இன்றைய உலக விவகாரங்கள் முன்பு ஒரு காலத்தில் இருந்தது போலன்றி ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் உள்ள குறிப்பிட்ட வல்லரசின் கையில் வந்துள்ளது. நீதியானதோ நீதியற்றதோ உலக விவகாரங்களின் பொலிஸ் காரர்களாக ஒரு குறிப்பிட்ட நாடுகள் உள்ளன. இந்து சமுத்திரத்தில் இத்தகைய பாத்திரம் இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது. இத்தகைய இந்தியாவுடனுன இலங்கை உறவுகள் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக மிகவும் சீர் கெட்டுள்ளது. இதற்கான முக்கிய காரணங்கள் இரண்டு எனலாம். முதலாவது சிங்கள அரசின் இந்திய எதிர்ப்பு வாதம் இரண்டாவது ஈழப் பிரிவினை இந்த இருநாடுகளின் உறவுகள் சுதந்திர ஆரம்பகாலத்தில் நன்றேயிருந்தது. அவை எப்படி எனப் பார்ப்போம்.

சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் நேருவின் நண்பனும் ஸெனட்டன் கலாசாலை நண்பருமாயிருந்த பண்டாரநாயக்க உள்நாட்ட மைச்சராயிருந்தார். நேருவும், பண்டாரநாயக்கவும் சோவியத் யூனியன் மீது ஆகர்ஷிக்கப பட்டவர்கள். டீ.எஸ் பிரதமராயிருந்து ஏகாதிபத்திய அடிவருடியாக இருப்பதையும், இந்திய தோட்டத் தொழிலாளரை திருப்பி அனுப்ப முயற்சி செய்ததையும், இலங்கையில் என்,எம், பிலிப் தலைமைகளில் இடது சாரிகளின் வளர்ச்சியும் நேருவின் கவனத்தை ஈர்க்கத்தவறவில்லை.

1950 ம் ஆண்டு நேரு, மகள் இந்திராவுடன் இலங்கைக்கு விஜயம் செய்தார். இது இவரது இரண்டாவது விஜயமாகும். 1931 ல் அவர் முதல் முதல் விஜயம் செய்து "சுய ராஜ்ய" வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்திருந்தார். 1950 ல் நிதியமைச்சராயிருந்த ஜே.ஆர் நேருவுக்கும், இந்திராவுக்கும் தனது சொந்த வாஸஸ்தலத்தில் விருந்து வைத்தது குறிப்பிடப படவேண்டியது. ஏனெனில் இந்த ஜே.ஆரும் இந்திராவும் தான் பின்னர் இலங்கை இந்திய விரிசல்களுக்குக் காரணமாகினர். இரண்டாவது விஜயத்தின் போது நேரு இலங்கை பற்றி அவதானித்துச் சென்ருர்.

1952ல் பண்டாரநாயக்கா புதிய வழியில் ஆட்சியைப் பிடிக்க முனைந்தார். 1953ல் இந்திய உளவு ஸ்தாபனம் IB கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப் படுகிறது. இதே ஆண்டில் ஹர்த்தாலில் டட்லி பதவியை ராஜினுமாச் செய்கிருர். 1952 தேர்தலில் மீண்டும் ஐ.தே கட்சி வென்றது இங்கு கவனிக்கத்தக்கது 1956 ல் இடதுசாரிகளுடனுன கூட்டில் பண்டாரநாயக்க பதவிக்கு வந்தார். இங்கே நேரு, இந்திய உளவு ஸ்தாபனத்தின் பங்கு மிக முக்கியமானது என்பதை நாம் நோக்கவேண்டும்.

1955 ம் ஆண்டு இந்தோனேஷிய நாட்டின் பாண்டுங் நகரில் கூட்டப்பட்ட பிராந்தியக் கொள்கைகளை வகுத்தல், அணி மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவலை நேரு போன்ற முக்கிய தலைவர்கள் சென்றிரு ந்தனர். பிராந்தியக் கடல் எல்லைகளை வகுக்கும் விடயத்தில் சிக்கல் ஏற்பட்டது. 10 மைல் தரைசார் நீர்பரப்பு TERRITORIAL WATER அவரவர் கடற் பிராந்தியமாக பாக்கு நீரிணையில் எல்லை வகுப்பதில் சிக்கல் ஏற்படவில்லை. ஆனுல் 400 மைல் கடற் பாதுகாப்பு வலயம் இந்தியாவுக்கு இருக்க வேண்டுமென்ற நேருவின் வேண்டு கோளின் போது இலங்கை, மாலைதீவுகளின் நிலை என்ன என்ற

கேள்வி எழுந்தது. அப்போதுநேரு பின்வருமாறு பதிளித்தாராம் " இலங்கையும் மாலேதீவும் இந்தியாவின் நிழல்கள் அவர்களை இந்தியா பாதுகாத்துக்கொள்ளும்" இந்த முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1956 ல் பண்டாரநாயக்கா வெற்றி பெற்றதும் நேரு இலங்கைக்கு விஜயம் செய்தார். இந்தியத் தலைமைக்கு இலங்கையின் விவகாரங்களில் இனித் தலையிடியில்லையென்ற நிலையிருந்த போதும் பண்டாரநாயக்க அதிகம் இடதுசாரிகளுடன் ஐக்கியமாகச் செல்வதை அவதானித்த நேரு பண்டாரநாயக்காவை அழைத்து புத்திமதி கூறினுர். அதன் விளைவு இடதுசாரிகளுடன் முரண்படத் தொடங்கிய பண்டாரநாயக்கா 1956 ல் இறப்பதற்கு முன்பு நடந்த குருநாகலை மகாநாட்டில் தனது கம்யூனிச விரோதச் சொற்பொழிவை நிகழ்த்தினுர். இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் இந்தியத்தலைமைகள் எப்பொழுதும் மேற்குலகத் தரகு பூர்சுவா வர்க்கத்தை நிராகரிப்பதுடன் கம்யூனிச விரோதத்தையும் கொண்ட தேசிய பூர்சுவா முதலாளி வர்க்க ஆட்சியை விரும்புவோரென்பதே.

இதன் அடிப்படையில்தான் இலங்கை அரசியலிலும் இந்தியத் தலையீடு இருந்து வந்தது. 1965 ம் அண்டு வரை ஆட்சியிலிருந்த ஸ்ரீமாவோவுடனும் 1965 -70 ல் ஆட்சிபுரிந்த டட்லியுடனும் இந்தியா நல்லுறவு பேணியது. 1965 ம் ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்தியாவின் தலையிடியில்லாதிருந்தற்குப் பல காரணங்கள் உண்டு. 1965 பாகிஸ்தானிய யுத்தம், 1966 லால்பகதூர் சாஸ்திரி மரணம் இந்திரா பதவியேற்பு என்பன முக்கியமானவை, 1968 ல் "ரோ" உளவுஸ்தாபனம் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது. 1970 ல் மீண்டும் ஸ்ரீமாவோ பதவிக்கு வந்தார். இலங்கை இந்தியா உறவுகள் திருப்திகர மானதாகவ இருந்தது.

1977ம் ஆண்டை ஒரு திருப்பு முனையென்று கூறலாம் 1977 மார்ச்சில் இந்திரா காந்தி பொதுத்தேர்தலில் தோல்வியடைய ஜனதாக் கூட்டணி வெற்றிபெற்று மொரார்ஜி தேசாய் பிரதமராஞர். இதைத் தொடர்ந்து யூலையில் இலங்கைத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் பிரச்சாரங்களில் ஜே. ஆர் இந்திராகாந்தியின் தோல்வியைக் குறிப்பிட்டு இரு நாடுகளையும் இரு பெண்கள் நாசமாக்குவதாகப் பேசினுர். சஞ்சேயும் அனுராவும் ஒப்பிடப்பட்டனர். இந்திய மக்கள் இந்திராவுக்குப் பாடம் புகட்டியது போன்று சிறிமாவுக்கு இலங்கை மக்கள் பாடம் புகட்ட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார் இத்தகைய ஜே. ஆரின் பேச்சு இந்திராவின் கவனத்துக்கு கொணரப்பட்டது. இதற்கான விலையை இலங்கை செலுத்த வேண்டுமென இந்திரா கருதிக் கொண்டார்.

ஜே.ஆரின் தாராள பொருளாதாரக் கொள்கையும், சிங்கப்பூர் யப்பான், மேற்குலக இறக்குமதிகளும் இந்தியாவின் ஏற்றுமதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தின ஸ்ரீமாவோ அரசின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக டாட்டா, பென்ஸ் பேருந்து வண்டிகள் தொடக்கம், துவிச்சக்கர வண்டிகள் வரை மின்சார உபகரணங்கள்,நெசவு நூல் என்பன போன்ற சகல பொருட்களும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இதனுல் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புகள் இந்தியாவை நடவடிக்கையில் இறங்கத் தூண்டின.

அமெரிக்காவுடனை நெருக்கமும், மேற்குலக சார்பும் இலங்கைமீது இந்தியா கண்காணிப்பு செய்யவேண்டிய தேவையே அதிகரித்தது. ஜே. ஆரை போட்டியிட்டு வெல்லக் கூடிய சிறிமாவோவின் குடியுரிமை திட்டமிட்டுப் பறிக்கப்பட்டதை இந்தியா அவதானித்தது. இஸ்ரவேலின் தொடர்புகளும் அமெரிக்க வானொலி நிலையம், எண்ணெய்க்குதம், திருகோண மலைத் துறைமுகம் என்பனவும் ஏனைய காரணங்களாகும்.

இத்தகைய நிலையில் 1980 ஜனவரியில் மீண்டும் இந்திரா காந்தி பொதுத் தேர்தலில் வென்று இந்தியப் பிரதமராஞர். அவரால் ஜே.ஆருடன் எந்த வித நட்புறவையும் ஏற்படுத்திக் கொள்ளும் சூழல் முற்ருகக் கெடுக்கப்பட்டிருந்தது. 1981 ல் ஜே.ஆரால் வழங்கப்பட்ட மாவட்டசபையைக் கூட்டணி ஆதரிக்கவும் இளைஞர்கள் எதிர்க்கவும் ஏற்பட்ட இடைவெளி காரணமாகத் தீவிரவாதம் உத்வேகம் பெற்றது. யாழ் நூலக எரிப்பு உட்பட்ட தமிழருக கெதிரான வன்முறையும் தமிழ் இளைஞர்களின் எதிர்ப்பார்ப்பும் வன்முறை நிறுவனமான ரோ விஞல் அவதானிக்கப்பட்டது.

முன்னைய காங்கேசன துறைத் தொகுதிக் கம்யூனிஸ்ட் வேட்பாளரும், லண்டன் வாசியுமான வைகுந்தவாசன், கூட்டணித் தலைவர்கள் எல்லாம் இந்திரா எதிர்க் கட்சியிலிருந்த போது ஈழத்தமிழர் போராட்டத்துக்கு ஆதரவு நல்கும்படி கேட்டுக் கொண்டதும் இந்திரா உறுதியளித்ததும் முக்கிய விடயங்கள், ஆகவே, ஜே ஆருக்கு எதிரான இந்திராவின் நடவடிக்கை களுக்கு ஈழத் தமிழர் விவகாரம் காரணமாகியது. 1982 அக்டோபர் ஜஞதிபதி தேர்தலிலும் ஜே. ஆர் மீண்டும் வெற்றி பெற்றதும் ரோ வின் நடவடிக்கைகள் தீவிரமாயின

### ஒரு சிறுகதை;

வைகுந்தவாசன் ஐக்கியநாடுகள் சபைக்குள் அனுமதியின்றி உட்புகுந்து ஸ்ரீலங்கா பிரதிநிதி (ஹமீட்) பேச அழைக்க இவர் திடீரென மேடைக்குச் சென்று "நான் தமிழீழத்திலிருந்த வந்திருக்கிறேன் எனது நாட்டின் பிரச்சனையை பேச அனுமதியுங்கள் எனக் கேட்டு" திரில் பண்ணி பின் வெளியேற்றப்பட்டார். எப்படியோ ஒரு சாதனை.

# புறூண்டி: றவாண்டா: மறக்கப்பட்ட தேசங்கள் மரணிக்கும் மக்கள்!

பொதுவாகவே பெற்றோல் வளமில்லாத, கம்யூனிசப் பயம் இல்லாத, இராணுவ தள அமைப்புக்கு வசதியற்ற நாடுகள் மேற்கு உலகின் பார்வைப் புலன்களில் அகப்படுவதில்லை. சர்வதேச சமூகத்தைப் பொறுத்த வரையில் இவை மறக்கப்பட்ட நாடுகள். இங்கு சம்பவிக்கும் நிகழ்வுகள் மறைக்கப்பட்ட துயரங்கள் இத்தகைய நாடுகள்தான் றவாண்டா புறூண்டி, உகண்டா, தான்சானியா, ஸெயர் போன்ற நாடுகளுக்கு அருகே அமைந்திருக்கும் இந்த மத்திய ஆபிரிக்க நாடுகளில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பும் அரசியல் குழப்பங்களும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பேரின் மரணத்துக்கு காரணமாகியது. 4 இலட்சம்பேரை அகதிகளாக நாட்டைவிட்டு விரட்டியது. ஆனால் புறூண்டியின் வரலாற்றில் இது புதிதாக ஒரு சம்பவமல்ல,

கடந்த 30 ஆண்டுகளாக மத்திய ஆபிரிக்காவில் ஹூது (HUTU) ருத்சி(TUTSI) ஆகிய இரு இனப்பிரிவுகளும் மோதி வருகின்றன. அதிகாரத்துக்கான போட்டி, பழிவாங்கும் மனபான்மை, இரு இனங்களுக்குமிடையேயுள்ள பரஸ்பர பய உணர்வு இவைதான் இந்த மோதல்களுக்கான அடிப்படைக் காரணங்கள், ஆனால் இவற்றின் விளைவுகளோ இலட்சக் கணக்கானோர் கொல்லப்படுகின்றார்கள், மேலும் பல இலட்சக்கணக்கானோர் அகதிகளாகின்றனர்.

இதோ ஒரு உதாரணம் "நாங்கள் அனைவரும் சேர்ந்து வாழவே விரும்புகிறோம். ஆனால் அது முடியாதது. முடியவே முடியாதது. அதை அவர்கள் விரும்பவில்லை "இது ஹூது இனத்தைச்சேர்ந்த தெரேஸ் என்ற பெண்ணின் வாக்கு மூலம். ரவாண்டாவிலுள்ள கியகனி அகதிகள் முகாமில் இவர் இப்போது இருக்கிறார். 1972ம் ஆண்டு ருத்சி இன மக்களும் அவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இராணுவமும் ஹூது இனப்பிரிவின் மீது கொலை வெறியாட்டம் நடத்தியபோது தெரேஸ் தனது குடும்பத்துடன் அங்கிருந்து தப்பி இதே பள்ளத்தாக்கில் தஞ்சம் புகுந்தார். 1972, மே மாதம் புருண்டியின் எல்லைகள் யாவும் மூடப்பட்டு வெளியுலகச் சாட்சிகள் யாரும் இல்லாமல் நடந்த இந்த வெறியாட்டத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேல், இதன் பின்னர் சில காலங்களின் பின் பூறூண்டியின் வடபகுதியிலுள்ள தனது சொந்த நகருக்கு தெரேஸ் திரும்ப வந்தார். ஆனால் 1988இல் மீண்டும் அகதியாக கியானிக்கு தெரேஸ் செல்லவேண்டி வந்தது. ஏனென்றால் இந்தக் காலப்பகுதியில் இரு இனப் பிரிவுகளுக்கும் இடையில் நடந்த மோதலில் கொல்லப்பட்ட ஹூது மக்களின் எண்ணிக்கை 20 ஆயிரம்.

1972 ம் ஆண்டு படுகொலைகள் நிகழும் வரை சுதந்திரத்தின் பின் அமைக்கப்பட்ட புறூண்டியின் அரசுகள் இரு இனப் பிரிவுகளையும் இணைத்துத்தான் இருந்தது. ஆனால் 1972 ம் ஆண்டு படுகொலைகளைத் தொடர்ந்து நாட்டின் 5.4 மில்லியன் மக்கள் தொகையின் மீது ருத்சி இனப்பிரிவு அதிகாரம் செலுத்த ஆரம்பித்தது. அதுமட்டுமல்ல இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ஹூது மக்கள் கிட்டத்தட்ட நிரந்தர அகதிகளாக அயலிலுள்ள மத்திய ஆபிரிக்க நாடுகளில் வாழும் நிலையும் ஏற்பட்டது.

இந்த இரு இனங்களும் புறூண்டியில் மாத்திரமல்ல அதன் அயல் நாடான றவாண்டாவிலும் வாழ்கின்றன. அங்கும் இரு பிரிவுகளுக்குமிடையிலான மோதல்கள் நடக்கின்றன. றவாண்டாவின் மொத்த மக்கள் தொகை 7.3 மில்லியன் இதில் 90% ஹூது 10% ருத்சி ஆகும். புறூண்டியின் மக்கள் தொகையோ 5.6 மில்லியன் இதில் 87% ஹூது 13% ருத்சி. இந்த இருநாடுகளிலிருந்தும் இந்த இரு இனப்பிரிவு மக்களும் பாரிய அளவில் மூன்று முக்கிய காரணங்களால் இடம் பெயர்ந்துள்ளனர். முதலாவது காரணம் இரு இனங்களுக்கு மிடையே ஏற்படும் மோதல்கள். இந்தக்காரணத்தால் 1.5 மில்லியன் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். அடுத்தது வேலை வாய்ப்பு காரணமான குடிபெயர்வாளர்கள், இதனால் இரு பிரிவுகளையும் சேர்ந்த 1.5 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதைவிட சுதந்திரத்தின் போது எல்லைகள் மாற்றி வரையப்பட்டதால் 1.5 மில்லியன் ரவாண்டா மக்கள் தமது முன்னாள் நாட்டுக்கு வெளியே வாழவேண்டியுள்ளது.

புறூண்டி, ரவாண்டா இரு நாடுகளுக்கிடையே ஆறு இலட்சம் அகதிகள் குறுக்கிட்டுள்ளனர்.

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரவாண்டா மக்கள் புறூண்டிக்குள்ளும் 4 இலட்சத்து 20 ஆயிரம் புறூண்டியர்கள் ரவாண்டாவிற்குள்ளும் சென்றுள்ளனர். அயல்நாடான ஸயரில் இரண்டு லட்சம்ருற்சி மக்கள்வாழ்கின்றனர். இதில் 1 இலட்சம் பேர் குடிபெயர்ந்தவர்கள் மீதி 1 இலட்சம் பேர் சுதந்திரத்தின் போது எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டதால் இடம் மாறியவர்கள். இதுபோல 1972 படுகொலைகளால் இடம் பெயர்ந்த ஹூது அகதிகள் 30 ஆயிரம் பேரும் இங்கு வாழ்கின்றனர் இதுபோல உகண்டாவில் 25 ஆயிரம் ருற்சி இனப்பிரிவினர் உள்ளனர். இதில் பாதி மக்கள் தொகை குடிபெயர்ந்தவர்கள் மீதி எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டதால் இந்நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் இங்கு 40 ஆயிரம்ஹூது அகதிகள் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டு நடந்த படுகொலைகளைத் தொடர்ந்து வெளியேறியவர்கள் இதுபோலவே தான்ஸானியாவிலும் 50 ஆயிரம் ருற்சி அகதிகள் உள்ளனர். இங்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ஹூது அகதிகள் உள்ளனர். இவர்கள் 1972 படுகொலைகள் தொடக்கம் கடந்த வருட படுகொலைகள் வரை நடந்த துன்ப நிகழ்வுகளிலிருந்து தப்பி நாட்டைவிட்டு வெளியேறியவர்கள்.

பொதுவாகவே சிறுபான்மை இனப்பிரிவினராகிய ருற்சிக்கள் பெரும்பான்மை இனமான ஹூது இனப்பிரிவின் மீது ஆளுமையை பிரயோகிக்க முயலும்போதே இன மோதலகளும், படுகொலைகளும் நிகழ்ந்துள்ளன. ஆனால் 1993ம் அண்டு யூன் மாதம் நடந்த தேர்தல் புறூண்டியில் ஒரு அரசியல் மாற்றத்தைக் கொண்டுவந்தது. இந்தத் தேர்தலில் ஹூது இனப்பிரிவைச் சேர்ந்த மெல்சோர் நடாயே பெரும் வெற்றி பெற்று ஜனாதிபதிப் பதவி ஏற்றார். முன்னாள் வங்கியாளரான இவர் 1987 இல் ஆட்சிக்கவிழ்ப்பின் மூலம் பதவிக்கு வந்தவரும் ருற்சி இனப்பிரிவை சேர்ந்தவருமான மேஜர் புயோயாவை தேர்தலில் தோற்கடித்தார். இவரது வெற்றி ருற்சி இனப்பிரிவின் அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால் இதனை சகித்துக் கொள்ளமுடியாத ருற்சி இனப்பிரிவுத் தலைமை நடாயே பதவி ஏற்ற அடுத்தமாதமே ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்றில் ஈடுபட்டது. ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது. ஆனால் மீண்டும் ருற்சி இனப்பிரிவினர் கடந்த அக்டோபர் மாதம் மேற்கொண்ட ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி வெற்றியடைந்தது. அதன் போது ஜனாதிபதியும் நான்கு உயர் அதிகாரிகளும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் இச்சம்பவத்துக்கு பழிவாங்க ஹூது இனப்பிரிவினர் கிளர்ந்தனர். ஆனால் பெரும்பான்மையாக ருற்சி இனப்பிரிவைக் கொண்டமைந்த இராணுவம் தனது மக்களுக்கு சார்பாக செயற்பட்டது. விளைவு 1 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து 1987 ம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டு வரை புறூண்டியை ஆண்ட மேஜர் புயோயாவின் கருத்து இப்படியிருக்கிறது. "இந்த இரு பிரிவினருக்குமிடையேயான மோதல் எப்போதுமே கிராம மட்டத்துக்கு மேலே போனதில்லை. அதுவும் குறிப்பாக சுதந்திரத்திற்கு முன்னர் இத்தகைய மோதல்களே இருந்ததில்லை" எனக்கூறும் மேஜர் புயோயா "அரசியல்வாதிகளே இந்நிலைக்குக் காரணம் அரசியல் வாதிகள் வாயைத் திறக்காமல் இருந்திருந்தால் இந்தப் படுகொலைகள் நிகழ்ந்திருக்காது" என்றும் குறிப்பிடுகிறார். மேஜர் புயோயா அரசியல் சீர்த்திருத்தங்களை புறூண்டியில் அமுல் நடத்தியவர் அதனாலேயே புறூண்டியில் 1993ம் ஆண்டு தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் புயோயா தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் ருற்சி இனத் தீவிரவாதிகளும் இவரது எதிர்ப்பாளராக மாறினர் 'அக்டோபர் மாதம் நடந்த படுகொலைகளுக்கான காரணம் அதிகாரத்தை நோக்கி அலையும் இருதரப்பு தீவிரவாத சக்திகளுமே" என்பது புயோயாவின் கருத்து. அதுமட்டுமல்ல ரவாண்டாவில் ஹூதுக்கள் ருற்சிக்களை கொலை செய்ததாலும், அடித்து விரட்டியயதாலும் ஏற்பட்ட நிலையே இது" எனக் கூறும் புயோயா "அதிகாரம் என்பது தமது பிறப்புரிமை என ஹூதுக்கள் நினைப்பதுதான் மோதல்களுக்கு காரணமாகிறது", என்கிறார். 'அதிகாரம் இனமயமாக்கலுக்குள்ளாகும்போது புறூண்டியாக இருந்தாலென்ன, ரவாண்டாவாக இருந்தாலென்ன எங்குமே வன்முறைகள் விளைவாகும்" என்பது மேஜர் புயோயாவின் கருத்து.

1899ம் ஆண்டு ஜேர்மன் காலனித்துவ வாதிகள் புருண்டி, ரவாண்டாவிற்கு வருவதற்கு முன்னர் இந்தநாடுகள் ருற்சி இன அரசர்களாலேயே ஆளப்பட்டன முதலாவது உலகயுத்தத்தின் பின்னர் ஐக்கியநாடுகள் சபையினால் இந்த ஜேர்மன் காலனித்துவநாடுகள் பெல்ஜியத்திடம் கையளிக்கப்பட்டன. அவர்களும் அரசியல் மாற்றமெதையும் செய்யவில்லை. மன்னர்களினூடாகவே தமது அதிகாரத்தை செலுத்தினர். இதனால் ஆளும் வர்க்கமாக இருந்த ருஸ்ரிக்களுக்கே அனைத்து நலன்களும் போயின. இவர்களே முதலில் கல்வி பயின்றவர்களுமானார்கள். ஆனால் 1950 இல் சுதந்திரமடைந்த பின்னர் நிலமை மாறிற்று. 1959இல் ருற்சி ஆட்சியாளர்களுக்கு எதிராக ஹூதுக்கள் கிளர்ந்தெழுந்தனர். இதில் ஹூதுக்களுக்கு பெல்ஜியம் ஆதரவு கொடுத்தது. இதன்மூலம் சுதந்திரம் என்றவகையில் ஹூதுக்கள் அரச அதிகாரத்தை கைப்பற்றினர். 1961 இல் ஹூதுக்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டி இனச்சுத்திகரிப்பை Ethnic Cleansing ரவாண்டாவில் செய்ய முயன்றபோது 2

30ம் பக்கம் பார்க்க..

## கலாநிதி க.செ.நடராசா

மேன்மையை என்றைக்கும் எடுத்துக் காட்டவல்லன.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தாபகர்களில் ஒருவர் ஐந்து வருடங்கள் அதன் தலைவராகவும் இருந்து அரும்பணி ஆற்றியவர். இருமுறை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர், இவரின் தமிழ்ப் புலமையை மதித்து 'இலக்கிய வித்தகர்' என்ற பட்டத்தையும் இலங்கை அரசாங்கம் வழங்கிக் கௌரவித்தது.

ஒய்வு பெற்றதனையடுத்து தனது மகளுடன் இருக்கக் கனடாவுக்கு வந்த கலாநிதி நடராசா அவர்கள் இங்கும் தனது தமிழ்ப் பணியை மிகுந்த ஆர்வத்துடன் தொடரலாயினர், பல சங்கங்களும் சபைகளும் அவரது ஆழ்ந்த அறிவையும் பரந்த அனுபவத்தையும் பயன்படுத்தலாயின. பத்திரிகைகள் அவரது கட்டுரைகளைப் பெருமையுடன் பிரசுரிக்கலாயின. வானொலி தொலைக்காட்சி போன்ற பிற வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகவும் தனது எண்ணக் கிடக்கையைத் துணிந்து வெளிப்படுத்தி வந்தார்.

கடைசியாக அவர் எழுதத் தி[illegible]மிருந்தது கனடியத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு உகந்த தமிழ் இலக்கண நூல் ஒன்று. இதனை முடிக்கமுன் அவரது வாழ்வு முடிந்து விட்டது. தமிழ் இலக்கிய உலகில் ஏறுநடை போட்ட இராசர் இறைவனடி எய்திவிட்டார்.

இடம்: ஸ்காபரோ, ஒன்ராறியோ
காலம் 17.2.1994

அவரது ஆவல் "புலம் பெயர்ந்தாலும் நாம் தமிழராக வாழ வேண்டும். தமிழ்ப் பண்பாட்டையும் கலை கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும். தமிழை இலக்கணப் பிழை இன்றி எழுதுதல் வேண்டும்."

செய்வோமா?

## ஒரு நாள் உயிர்க்கும்..

அரவிந்தனை மீண்டும் சுயநினைவுக்கு கொண்டுவந்தார்.

"அரவிந்தன் , நீங்கள் எப்போதாவது நொஸ்ரடாமஸ் என்பவர் பற்றி எங்காவது வாசித்திருக்கிறீரா ? அல்லது சினிமாவில் பார்த்திருக்கிறீரா ?"

"இல்லையே! யார் அவர் ?"

" பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு தீர்க்கதரிசி. உலகப்போர்கள் பற்றியும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல விஷயங்களையும் முற்கூட்டியே சொல்லி வைத்துள்ளார் அவர் "

"அப்படியா " என அதிசயித்த அரவிந்தனுக்கு தான் ஆழ்ந்த தூக்கத்துக்கு போன போது அது பற்றி டாக்டர்ஜோன்சனுக்கு சொன்னது தெரியவில்லை. அதை டாக்டர் அவனுக்கு தெரிவிக்கவும் இல்லை.

★ ★ ★

ஜோன்சன் மிகவும் பரபரப்பாக இருந்தார். நாளை "அந்த விஷயத்தை" எப்படியேனும் பொதுசனத்தொடர்பு சாதனமுலம் எல்லோருக்கும் அறிமுகப்படுத்த வேண்டும். அதைப்பற்றி கலந்தாலோசிக்க அல்பிரட்டின் கருத்தைக் கேட்க தனது றூமுக்கு அவரை அழைத்திருந்தார். இருவரும் பலமணி நேரம் விவாதித்தனர்.

"டாக்டர்ஜோன்சன், இதை நீங்கள் வெளிவிடுவது ஆபத்தானது. இந்த பிராந்திய வலயத்தையை ஒரு காலத்தில் கட்டியாளப்போவது தாங்கள் என சம்பந்தப்பட்டவர்கள் அறிந்தால் அதுவும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒரு தீர்க்கதரிசியால் கூறப்பட்டுள்ளது என்பதை நிருபணத்துடன் உணர்ந்தால் அவர்களின் உற்சாகம் அதிகரித்து அந்த தீர்க்கதரிசி சொன்னது உண்மையாக நடந்துவிடும்.

இதனால் மேலைத்தேசத்தவராகிய எங்களுக்கு உள்ள பெரும் பாதிப்பை நீங்கள் அறிந்து கொண்டும் அந்தவிஷயத்தை வெளியில் விட நினைப்பது மேற்கு நாட்டவர்களுக்கு நீங்கள் செய்யும் துரோகம்" அல்பிரட் சத்தம்போட்டு கதைத்தார்.

ஜோன்சன் தனது முடிவில திடமாக இருந்தார்.

"இவ்விஷயத்தை நாம் ஒளித்து வைப்பதனால் நடக்கப்போவதை தடுத்து விடமுடியாது. தீர்க்க தரிசனங்கள் பொய்ப்பதும் உண்டு. ஆனால் அது பொய்த்தால் அதற்குப் பெயர் தீர்க்கதரிசனம் அல்ல. எம்மைப் போன்ற ஆய்வாளர்கள் உண்மைகளை மறைப்பது மிகத்தவறு"

டாக்டர் ஜோன்சனை மாற்றமுடியாதென்பது அல்பிரட்டுக்கு புரிந்துவிட்டது. நிசப்தம் . அமைதியாக அந்த அறையில் இருந்து வெளியேறினார் அல்பிரட்.

நடுநிசி. இயக்கத்தினரின் வானலை சமிக்ஞைப்பிரிவு ஏதோ இரகசிய சமிக்ஞைகள் தமது பகுதியால் வெளியேறுவதை அவதானித்தனர். சந்தேகத்தில் டாக்டர் ஜான்சனின் றூமுக்குள் சென்று பார்த்தபோது அவர் இறந்து கிடந்தார். அவரின் ஆய்வுக்குறிப்புகளும் ஒலிப்பதிவு நாடாக்களும் சிதைக்கப்பட்டுக் கிடந்தது.

அல்பிரட்டைக் காணவில்லை.

மறு நாள் உலகப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் தலைப்புச் செய்தி .

"ஆராய்ச்சிக்காக வந்த டாக்டர் ஜோன்சன் தமிழ் பயங்கரவாதிகளால் மர்மமான முறையில் கொலை. அவரின் உதவியாளர் அல்பிரட் தப்பித்து வந்து தகவல்".

தமிழினமும் விடுதலைப் போராளிகளும் அதிர்ச்சி அடைந்தனர். இவ்வாறான பொய்கள் என்றுமே தம் போராட்டத்துக்கு தடங்கலை தரப்போவதில்லை என விடுதலைப்பேராளி ஒருவன் வீராவேசத்துடன் கூவிக்கொண்டு சென்றான். என்றோ ஒரு நாள் .........

(யாவும் கற்பனை .... ஆனால் காதிலை பூ அல்ல)




# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St. Dennis Dr**

**(Don Mills/Eglinton)**

**(416) 421 3429**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

தமிழ், ஹிந்தி வீடியோப்
படங்களின் ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும் விற்பனைக்கும்
பெறலாம்

CD, Audio

**மலிவு விலையில்**

# A.R.K MARKET

## வளர்முகநாடுகள்...

வளர்முகநாடுகளின் பொருளாதார நிலைமை காரணமாக இவற்றின் பாவனை ஒழிந்து போகப் போவதில்லை. அரசுகள் வீடமைப்புத் திட்டங்களை அமுலாக்கும் அதேசமயம் மக்களும் மண்ணும் கிடுகும் கொண்ட வீடுகளை அமைத்துக் கொண்டு தானிருக்கப் போகின்றார்கள். எனவே இவற்றின் தரத்தை உயர்த்துவதில் கவனம் செலுத்தப்படவேண்டும். உதாரணமாக மண் சுவர்களின் நீர் எதிர்ப்புத் தன்மையை (water proof) மண்ணெண்ணெய், அஸ்பால்ட் போன்றவற்றால் உருவான கலவையைத் தெளிப்பதன் மூலம் அதிகரிக்கலாம். மண்ணின் உறுதியை.(Stability) சீமெந்து போன்றவற்றை மண்ணுடன் கலந்து உறுதியாக்குவதன் மூலம் அதிகரிக்கலாம். மேலும் கிடுகளின் நெருப்பெதிர்க்கும்தன்மையை (fire proof) கிடுகுகளை அமோனியம் பொஸ்பேட் உரத்தால் உருவான கரைசலிற்குள் தோய்த்தெடுப்பதன் மூலம் அதிகரித்துக் கொள்ளலாம் இந்தியா போன்ற வளர்முக நாடுகள் சிலவற்றில் இத்தகைய முறைகள் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துள்ளன. வளர்முக நாடுகளில் மேலும் கிடுகுகளைப் பின்னுவது கைத்தொழிலாகத் தானிருந்து வருகின்றது. இந்தோனேசியாவில் மூங்கில்களாலான பாய்களைப் பின்னுவதற்கு எளிய இயந்திரங்களைப் பாவிக்கின்றார்கள். கைகளால் பின்னுவதாலேற்படும் கால விரயம் செலவெல்லாம் இதனால் குறைக்கப்படுகின்றது. இத்தகைய எளிய இயந்திரங்களைப் பாவிப்பதன் மூலம் கிடுகுகளைப் பின்னலாம்.

தொடரும்

## றவாண்டா...

இலட்சத்து 60 ஆயிரம் ருற்சிக்கள் புறூண்டிக்கும் 3 இலட்சம்பேர் உகண்டாவுக்கும் தப்பியோடினர்.


இத்தகைய வகையிலேயே ரவாண்டாவில் ஹூதுக்கள் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டனர். அனைத்துத் துன்பங்களுக்கும் இவர்கள் காலனித்துவ ஆட்சியாளர்களை பழி சொல்லவில்லை. மாறாக சகோதர இனப் பிரிவையே குற்றம் சாட்டினார்கள். முப்பது வருடங்களுக்குப் பின்னர் அனர்த்தங்களும், பல்லாயிரக் கணக்கான இறப்புக்களுமே பல்கட்சி ஜனநாயகத்தை ஏற்கும் நிலையை 1991 இல் தள்ளியது. ஆனால் அது கூட இப்போது புறூண்டியிலும், ரவாண்டாவிலும் தடுமாறி நிற்கிறது. "இரத்த வெறி கொண்ட இந்த இனப்பிரிவுகளுக்கிடையிலான கோபதாபங்கள் மறைய இன்னமும் 10 வருடங்கள் எடுக்கும் " என்கிறார் மேஜர் புயோயா "இப்போது ஜனநாயகக் கட்சியின் அடையாளம் என்பதைவிட இன அடையாளமே முன்னிற்கிறது. கால ஓட்டமே இதனை மாற்றும் "என்று கூறும் புயோயா "ஜனநாயகத்தில் இனங்களுக்கான யதார்த்தங்களை பிரயோகிப்பதன் மூலமே இம்மாற்றத்தை ஏற்படுத்த முடியும் "என்றும் கூறுகிறார்.

ரவாண்டாவிலுள்ள பிரபல பல்கலைக்கழகத்தின் சட்டவிரிவுரையாளரான சாள்ஸ் நரம்பகா கருத்துக்கூறுகையில் "ஜனநாயகம் பதட்டத்தை தோற்றுவிக்கிறது. காரணம் ஒவ்வொருவரும் தமக்கு சாதகமான குழுக்களை உருவாக்க அது வழிகோலுகிறது" என்கிறார். மனித உரிமைகள் தொடர்பாக பணிபுரியும் இவர் "இதை மாற்றுவதற்கான ஒரே வழி அரசியல் என்பது பெரும்பான்மை இனத்தவரின் எண்ணிக்கையை வைத்தல்ல, பெரும்பான்மை சிந்தனையின் அடிப்படையிலே நிர்ணயிக்கப்பட வேண்டும் " என்கிறார். இவரது கருத்து இந்த வகையில் இருக்கிறது. "சிறுபான்மையினர் எப்போதுமே விரக்தியடைந்தவர்களாக இருக்கிறார்கள். இந்நிலையில் எப்போதுமே யுத்தத்துக்கான சூழ்நிலைகள் நிறைய உள்ளன. ஒரு நிரந்தரமான இனப் பிரச்சனை இருப்பதும் உண்மை. ஆனால் அதிகார மாற்றத்தின் போதுதான் இப்பிரச்சனை கிளர்கிறது. ஆனால் உண்மையான பிரச்சனை பொருளாதாரப் பிரச்சனையே. அது பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கு மிடையிலான பிரச்சனை. ஆனால் பணக்காரர்களே ஏழைகளை யுத்தத்திலீடுபடுமாறு உந்துகிறார்கள்" என்கிறார்.

இருநாடுகளிலுமே அரசியல் தலைவர்கள்தான் இப்பிரச்சனைகளுக்கான காரணம் என வர்ணிக்கப்படுகின்றபோதும் காலனித்துவ ஆட்சியாளர்களின் பங்களிப்பு எந்த வகையிலும் குறைந்தது அல்ல. மத்திய ஆபிரிக்காவின் இன்றைய இந்த இரத்தக் காயத்துக்கும் காலனித்துவ ஆட்சியாளர்களே காரணமாக அமைகிறார்கள். பொதுவாகவே இருதரப்புமே பரஸ்பரம் வன்முறைகளை உபயோகித்து தம்மை காயப்படுத்தியுள்ளது. அதனால் இருதரப்புமே பரஸ்பரம் கடும் கோபம் கொண்டுள்ளன. அதுமட்டுமல்ல இருதரப்பினருமே இப்போது அகதிமுகாம்களிலே. அகதிகளாகவே பிறந்து அகதிகளாகவே வளர்ந்துவிட்ட ஒரு புதிய தலைமுறை உருவாகி விட்டது. இந்தத் தலைமுறை பழிவாங்கும் உணர்வு மிகுந்ததாகவே உள்ளது.

புறுண்டி ரவாண்டா இந்த இரு நாடுகளின் எதிர்காலமுமே ஹூது, ருற்சி ஆகிய இனப்பிரிவுகளிடையே ஏற்படும் இணக்கத்திலேயே தங்கியுள்ளது. ஆனால் முன்னெப்போதையும் விட இரு இனப்பிரிவுகளுக்கிடையேயுள்ள இடைவெளி முன்னெப்போதையும் விட அதிகமாகியுள்ளது. ஒவ்வொரு ருற்சியும் துப்பாக்கி தரித்திருக்கிறான் அவன் தன்னைத் தாக்க வருகிறான் என ஹூது பிரஜை சந்தேகிப்பதும் அதன் மறுசுழற்சியாக ஹூதுவை ருற்சிப் பிரஜை சந்தேகிப்பதுமே இன்றைய யதார்த்தமாக இருக்கிறது. இந்த நிலையில் மத்திய ஆபிரிக்காவின் நீண்ட கால இனமோதலும் இரத்தப்பெருக்கும் முடிவுக்கு வந்துவிடும் என எதிர்பார்ப்பது யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனைதான்.

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

**ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது**

**பரீட்சித்துப் பாருங்கள்**

Try First

**பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்**

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்தசுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றவையும் கிடைக்கும்.*




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

# ஜே. வி.பி அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி 1

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ணன்டோ சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்: செ. லோகநாதன்**

ஜேவிபி யானது இலங்கை அரசியலில் ஒரு விசேட பிரபஞ்சமாகும். அது ஒரு தடவை மட்டுமல்ல, இரு தடவைகள் இலங்கைச் சமூகத்தை அதன் அத்திவாரத்துடனேயே சேர்த்து ஆட்டம் காணவைத்த அரசியல் நடிவடிக்கைகளுக்கு தலைமை அளித்தது. இது நாம் ஏற்கனவே கண்டவாறு 1971 ஏப்பிரல் மாதத்தில் முதல் தடவையாகவும் 1987-89 காலகட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் ஆகும். இந்நாட்டின் இளம் சந்ததியினர் விசேடமாக மிகுந்த ஆர்வமும்தீவிர ஈடுபாடும்கொண்ட இளைஞர்கள், ஒரு தடவை அல்ல இரு தடவைகள் ஜேவிபியின் தலைமையின் கீழ் வன்முறை அரசியலை நோக்கி இழுபட்டுச் சென்றது எவ்வாறு? பிரபல்யமானதும் கசப்பானதுமான ஒரு அனுபவம் இருக்கும் போதும் அதுபற்றி போதிய கவனம் செலுத்தாமல், முதலாவது தடவையை விட பன்மடங்கு அதிக அளவு வன்முறையும் மக்கள் இயக்கத்துக்கு எடுத்துக் கூறமுடியாத அளவு ஊறு விளைவித்ததும் தம்மையே அழித்ததுமான வன்முறை நடவடிக்கைகளை நோக்கி இவ் இளைஞர்கள் இழுபட்டுச் சென்றது எவ்வாறு? இந் நடவடிக்கைகளின் வேர்கள் எங்கே உள்ளன? இவ் நடவடிக்கை தோன்றுவதற்கு காரணமாக இருந்த சமூக, பொருளாதார அரசியல் பின்னணியை ஆராய்வதன் மூலமே நாம் இக்கேள்விகளுக்கு பதில் காண முடியும்.

1971 கிளர்ச்சிக்குப் பின்னரும் அவ்வாறே 1987-89 காலகட்ட கிளர்ச்சிகர நிலமைக்குப்பின்னரும் இந் நடவடிக்கைகளுக்கான காரணத்தைத் தேட பல்வேறு பகுதியினரும் முன் வந்தனர். இம் முயற்சியில் முதலாவதாக ஈடுபட்டது ஆட்சியாளராகும். கிளர்ச்சிகர நிலமை ஒன்றின் போது முதலாவதும் கூடுதலான அளவும் தாக்கங்களுக்குள் சிக்குவது, ஆட்சியாளரே என்பதனாலேயே இவர்கள் அதற்கான காரணத்தை தேட முனைகின்றனர். 1971 கிளர்ச்சிக்குப் பின்னர் அதற்கான காரணத்தை தேடிய அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம், சமூக பொருளாதார அரசியல் காரணிகளே கிளர்ச்சிக்கான தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை அங்கீகரித்தது. ஆயினும் அக்காரணங்களுக்குள் ஆழமாகச் சென்று பார்ப்பதற்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் முயற்சிக்கவில்லை கிளர்ச்சி தோன்றுவதற்கு காரணமாக இருந்த சமூக பொருளாதார அரசியல் பின்னணியை மனதில் கொண்டே அன்றைய ஆட்சியாளர் 1972 ல் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் சமர்ப்பித்தனர். ஆயினும் அவ் நிலச்சீர்த்திருத்தமும் அதற்கு பரிகாரமாக அமையவில்லை.

1987--89 ல் தோன்றிய கிளர்ச்சிகர நிலமையை அடித்து நொறுக்கி வெற்றி கண்ட பின்னர் இன்றைய அரசாங்கமும் அதற்கு பரிகாரம் காணும் முகமாக காரணங்களை ஆராய்வு செய்வதில் ஈடுபட்டது. இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இளைஞர்கள் கிளர்ச்சியை நோக்கி இழுபட்டுச் சென்றதற்கான காரணத்தை ஆராய்ந்து அதற்குப் பரிகாரம்தேட முயன்றதையும் நாம் கண்டோம். ஆனாலும் அப்பரிகாரமும் 71க்குப் பின்னர் காணப்பட்டதை விட எவ்விதத்திலும் வேறுபட்டது அல்ல.

ஆட்சியாளர்களும், குறைந்த கூடிய பட்சம், இளைஞர் கிளர்ச்சிக்கான காரணத்தை சமூக பொருளாதார பின்னணிக்குள்ளேயே கண்டனர். ஆனாலும் கிளர்ச்சிக்கு காரணமாக இருந்த சமூக பொருளாதார அரசியல் நிலமைகளை ஆழமாக ஆராய்ந்து சரியான பரிகாரம் காண்பதற்கு எந்த ஆட்சியாளரும் முன் வரவில்லை. அவர்கள் செய்ததோ இவ்வாறான கிளர்ச்சிகர நிலமை தோன்றுவதற்கு சமூக பொருளாதார காரணங்கள் உள்ளன என்பதை அங்கீகரித்ததன் மூலம் அதனை குறைவாக மதிப்பீடு செய்து அவ்வாறான கிளர்ச்சி தோன்றுவதற்கான உண்மைக் காரணங்கள் சமூக விழுமியங்கள் சீரழிந்துபோனதும்பொருள்முதல் வாதத்தின் தாக்கங்களுமே எனக் கூறினர். ஆட்சியாளர் கூடுதலாக முயன்றது கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்தவேயாகும். தமது அடக்கு முறை அதிகாரத்தைப் பாவித்து பொதுமக்களையும் தம்முடன் உடன்படாத சக்திகளையும் அழிக்கவே செயல்பட்டனர். இதுதான் ஆட்சியாளரின் தர்க்க சாஸ்திரமாகும்.

ஆனால் ஆட்சியாளர்கள் மட்டுமன்றி சில அரசியல் திறனாய்வாளர்களும் 1987-89 ஜேவிபியின் கிளர்ச்சிகர அரசியலுக்கான அடிப்படைக் காரணம் சமூக பொருளாதார

காரணிகளை விட வேறு காரணங்கள் உள்ளன என காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றனர். இவர்களில் சிலர் கிளர்ச்சிக்கான காரணத்தைக் காணவேண்டியது சமூக பொருளாதார காரணிகளில் அல்ல, இனப் பிரச்சனையின் உள்ளேயே காண வேண்டும் எனக் கூறுகின்றனர். எமது சமுதாயத்தின் சகல சமூக பொருளாதார காரணங்களும் இனப் பிரச்சனையால் அதி நிச்சயிக்கப்பட்டுள்ளன எனவும் அதற்கமைய ஜேவிபியின் நடவடிக்கைகளுக்கான அடிப்படைக் காரணத்தை காண வேண்டியது சமூக பொருளாதார காரணிகளில் அல்லஇனப் பிரச்சனைக்குள்ளேயே என அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறாக இவர்கள் பொருளாதார காரணங்களை இரண்டாவது இடத்திற்குத் தள்ளி அரசியல் ரீதியான காரணத்தை முதல் இடத்தில் கொள்கின்றனர்.

அரசியல், நீதித் துறை, கலாச்சாரம், நல்லொழுக்கம்சமயம் ஆகிய மேல் கட்டமைப்புகள் அனைத்தும் பொருளாதார அடித்தளம் என்னும் அத்திவாரத்தின் மேலேயே கட்டப்பட்டுள்ளன. சகல அரசியல், நீதித்துறை, கலாச்சாரம், நல்லொழுக்கம், சமயம் ஆகிய மேல் கட்டுகள் அனைத்தும் ஒரு திட்டவட்டமான காலத்தில் நிலவும் பொருளாதார அடித்தளத்துக்கு அமைவானதாகவே உள்ளன என்பதை கூறவேண்டி உள்ளது. ஆதலால் எந்தவொரு சமூக அரசியல் போராட்டத்திற்குமான அடிப்படைக் காரணத்தை பொருளாதார அடித்தளத்திலேயே தேடவேண்டுமே தவிர பொருளாதார அத்திவாரத்தின் மேல்கட்டி எழுப்பப்படுகின்றமேல் கட்டமைப்புகளில் அல்ல. பொருளாதார அடித்தளத்தின் மீது கட்டி எழுப்பப்படுகின்ற மேல் கட்டமைப்புக்கள் திரும்ப பொருளாதார அடித்தளத்திற்கு அதனை மாற்றி அமைப்பதற்கான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. செயல்படுகின்றன என்பது உண்மை. ஆனால் எந்த வொரு சமூக அரசியல் போராட்டத்தின் அடிப்படைக்கான காரணம் அல்லது இறுதிக்காரணம் பொருளாதார அடித்தளத்திலேயே உள்ளது என வரலாற்றியல் பொருள் முதல் வாதம் எமக்குக் கற்பிக்கிறது.

1980ம் ஆண்டு செப்டம்பர் 21ம் திகதி ஏங்கெல்ஸ், ஜே. ப்ளொஹ் என்பவருக்கு அனுப்பிய கடிதத்தில் வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தின் படிப்பினைகளை இவ்வாறு சுருக்கமாகக் காண்பிக்கிறார்.

"............பொருளாதார நிலமை அடித்தளமாகும் ஆனாலும் மேல் கட்டமைப்பின் அனேக அம்சங்களும், வர்க்கப் போராட்டத்தின் சுபாவமும் அதன் பெறுபேறும், உதாரணமாக கூறுவதாயின் போராட்டம் வெற்றி பெற்ற பின் வெற்றி பெற்ற வர்க்கத்தால் ஸ்தாபிக்கப்படும் அரசியல் யாப்பும் நீதிமன்றத்தின் சுபாவமும், போராட்டத்தில் பங்கு பற்றுவோர் மனதில் இவ் அனைத்தும் உண்மையான போராட்டத்தின் பிரதிருபத்தைக் கூட அரசியல், நீதிமுறை, தத்துவம், சமயக்கருத்து, ஈமக்கிரிகை முறையாக அவற்றை மேலும் வளர்த்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தின் பாதை குறித்து தனது தாக்கத்தை ஏற்படுத்து வதோடு அனேக சந்தர்ப்பத்தில் அதன் சுயருபத்தை நிர்மாணிப்பதில் பெரும் பங்கு வகிக்கும் (மார்க்ஸ்-ஏங்கெல்ஸ்- "சமயம் பற்றி" பக்கம் 352)

உதாரணத்துக்கு கூறுவதாயின் இனப்பிரச்சனைக்கான அடிப படைக்காரணத்தைதேடும்போது, இதற்கான தாக்கத்தை ஏற்படுத்திய அரசியல், மொழி, கல்வி ஆகியவற்றில் பாரபட்சம் காட்டுவதற்கு பொருளாதாரக் காரணம் அடிப்படையாக இருந்தது என்பது தெளிவானதாகும். ஆட்சியாளரின் பொருளாதார அடித்தளத்தில் நிலவிய பெலயீனம் காரணமாக தொழிற் துறை, விவசாயத்துறை என்பவற்றை விருத்தி செய்ய முடியவில்லை இதன் காரணத்தினாலேயே தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்ய முடியாமற் போனது போன்றவை களாகும். இதன் காரணத்தால் தம்மீது சுமத்தப்படுகின்ற பாரத்திலிருந்து விடுபடுவதற்காக ஆட்சியாளர் கூடுதலான பாரத்தை சிறுபான்மை இன மக்கள் மீது சுமத்துகின்றனர். சிறுபான்மை இனமக்களுக்கு இனரீதியான பாரபட்சம் குறைந்த கவனிப்பு ஆகியவற்றை இழைப்பதன் மூலம் இனவாதத்திற்கு உயிரூட்டு கின்றனர். இதிலிருந்து இது பொருளாதாரப் பிரச்சனையையும் விட அரசியல் பிரச்சனையாக மாற்றம்பெறுகிறது. அதன் பின்னர் இவ் அரசியல் பிரச்சனையைத் தீர்க்காமல் இனப்பிரச்சனையுடன் ஒட்டிய பொருளாதாரக்காரணிக்கு பரிகாரம் காணமுடியாது.

ஜேவிபி யின் நடவடிக்கை களுக்கு அடிப்படையாக அமைந்த சமூக பொருளாதார அரசியல் பின்னணி பற்றி ஆழமான ஆய்வைச் செய்ய வேண்டியவர்கள் இடதுசாரிகளாகும் ஆனாலும் இப் பணியை இடதுசாரி இயக்கத்தின் பிரதான கட்சிகள் அனைத்தும் கைவிட்டுள்ளன. இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்குக் கூட முயற்சிக்கவில்லை. இது இடதுசாரி இயக்கத்தைப் பொறுத்தவரை வேதனைக்குரிய நிலமையாகும். அழிவை ஏற்படுத்திய அரசியலுக்கு தூண்டுகோலாக விருந்த சமூக பொருளாதாரப் பின்னணியைப் பற்றி ஆழமாக கவனத்தில் கொள்ளாவிடில் அவ்வாறான நிலமையினால் தோன்றும் அழிவை ஏற்படுத்தக் கூடிய அரசியல் சக்திகளின் சுபாவத்தை அடையாளங் கண்டு அவற்றைத் தோற்கடிப்பதற்கு அவசியமான நிலமைகளை நிர்மாணிப்பது மிகவும் கடினமாகும்.

தொடரும்

# வா+கர் 'கடி'தம்

## அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

சென்ற வாரம் உலகத்தமிழர் சஞ்சிகை பார்த்தேன். தமிழீழ விடுதலைப் போரில் பத்திரிகைகளின் பங்கு பற்றி இருந்தது. அடடா.. இதென்ன? ஏற்கனவே உலகத்தமிழர் தலைவரின் பிறந்த நாள் செய்திகளையும் பூனகரியில் இறந்த நூற்றுக்கணக்கான சிறுவர்களின் அஞ்சலிச்சிறப்பிதழையும் ஒருங்கே வெளியிட்டு தமிழீழப் போருக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. போதாதற்கு... புலிகளை ஆதரித்து எக்கச்சக்கமான 'நடுநிலைப்' பத்திரிகைகள் வேறு வருகின்றன. அதுவும் போதாதென்ருல் 'இவ்வாருன குழு அரசியல் பிசுபிடுங்கலில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு, ஈழத்தில் சாவை வரவேற்றுக் காத்திருந்தபடி சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் எமது மக்களுக்காக மனம் வருந்தி அவர்களின் வாழ்வில் விடிவை வேண்டிக் குரல் கொடுக்கின்ற' (வருடத்திற்கு ஒரு சில தடவைகள் என்ருலும்!) சஞ்சிகைகள் வேறு வருகின்றன. இந்த பங்களிப்பு எல்லாம் போதாதா என்று மண்டையை பிய்த்துக் கொண்டால்....

மக்களின் மன உறுதியை, சிந்தனையைக் குலைக்கக் கூடிய (மக்களே நீங்கள், நீங்களே மக்கள், எனவே உங்கள் மன உறுதியை!) செய்திகள் பத்திரிகைகளால் பரப்படுகின்றனவாம். இவ்வாருன பத்திரிகைகளால் பரப்பப்படும் செய்திகள், ஆய்வுகள், விமர்சனம் etc எல்லாம் அரைகுறை, ஆதாரமற்றவை, நம்ப முடியாதவை, உண்மைக்கு புறம்பானவையாம். இதனுல் மக்களுக்கு குழப்பமும் விரக்தியுமாம். மனச்சோர்வடைந்து போரில் நின்று தூரவிலகக் கூடுமாம். செய்திகளை ஊர்ஜிதப்படுத்தும் வரை போருக்கான தங்கள் பங்களிப்பை தள்ளிப் போடக் கூடுமாம். இவ்வாருன நிலைக்கு காரணமானவர்கள் தமிழினத்திற்கு தங்களையறியாமலேயே துரோகம் செய்கிருர்களாம்.

எமது இனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், தமிழீழ விடுதலைப்போருக்கு ஆதரவு என்று கூறும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைச் சுதந்திரம் முக்கியமானது என்று கூறும் பத்திரிகையாளர்கள் சிங்கள அரசுக்கும் படைகளுக்கும் பலம் சேர்க்கும் செய்திகளை ஏன் வெளியிடுகிருர்களாம் என்று உலகத்தமிழர் கண்கலங்குகிறது. தமிழீழம் கிடைத்த பின்னர் எதிர்காலச் சந்தி 'தமிழீழ மக்களை ஒன்றிணைப்பதில் ஈழத்திலும் வெளிநாட்டிலும் பத்திரிகைகளின் பங்கு எவ்வாறு முனைப்புற்றிருந்தது' என்று ஆய்வு செய்யும் போது போருக்கு பலம் சேர்ப்பவையே தமிழீழ மண்ணில் கௌரவ இடம் பெறும், அந்த ஆசிரியர்களே சரித்திரத்திலும் இடம் பெறுவார்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

ஏற்கனவே ஈழத்திலிருக்கின்ற பத்திரிகைகள் புலிகளின் 'கண்ணுக்குப் புலப்படாத கட்டுப்பாட்டுக்குள்' வெளிவருகின்றன. புகலிடத்தில் வெளிவரும் பத்திரிகைகளில் பெரும்பாலானவை புலிகளுக்கான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த செய்திகளை எழுதியதில் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் பத்திரிகையாளருக்கும் பங்குண்டு. மாத்தயா பற்றிய தகவல் வெளியிட்டதால் ஒரு பத்திரிகை அலுவலகத்தை எரிந்தார்கள் என்று வதந்தி.

இவ்வளவு தூரம் புலிகள் பத்திரிகைகளின் பங்கை அறிந்ததற்கு காரணம் மாத்தயா விவகாரம் தான். மாத்தயா பற்றிய செய்திகள் வெளிவந்ததும் புலிகளின் 'கறுப்பில்' சந்தேகம்வந்து விட்டது. மாத்தயா விவகாரத்தால் தமிழர்கள் போருக்கான பங்களிப்பை தள்ளிப்போட்டதால், தங்களது வருமானத்திற்கு பங்கம் வந்து விட்டதே என்பதால் 'நம்ம போராளிகள்' பத்திரிகையாளர்கள் மீது பாய்கிருர்கள். நல்ல காலம், தாயகத்திற்கு எல்லாம் எதிர்கால வரலாற்றில் இடம்பெற வேண்டும் என்ற ஆசையில்லாததால் தப்பித்துக் கொண்டு விட்டது. இருந்தாலும் தமிழீழ 'மண்ணில்' தாயகத்திற்கு நிச்சயம் இடம் இருக்கும்என்பதுவேறு பிரச்சனை. பாவம்.. சரித்திரத்தில் இடம் பெறுவதற்காக வால் பிடித்தும் துரோகிப் பட்டம் வேறு... பாருங்கள். புலிகளை ஆதரித்து இத்தனை பத்திரிகைகள் வந்தும் அவர்கள் மீதே புலிகள் வெறுப்படைகிருர்கள். ஐலண்ட், புரொன்ட்லைன் பத்திரிகைகளைப் பார்த்தால் புலிகள் இனிமேல் என்ன எழுதுவார்களோ? என்னவோ பத்திரிகைகளுக்கு இவ்வளவு பலம் இருப்பதை ஒப்புக்கொண்டதில் சந்தோசம் தான்.

★ ★ ★

முன்பு தான் சொன்னேனே.. நான்



அறு(சு)வை

எதையாவது எழுதித்தொலைத்தால் அது சம்பந்தமாக ஏதாவது தெரியவருகிறது, நடந்து விடுகிறது. நதிமூலம், ரிஷிமூலம் பார்க்கக் கூடாது என்ற மாதிரி.. வாசகர் கடிதங்களின் மூலத்தையும் பார்த்ததால் வந்த வினையோ என்னவோ... சென்ற வார இறுதியில் MacUser (3/94) என்ற கம்பியூட்டர் சஞ்சிகையை வாங்கி புரட்டினால் முதலில் கண்ணில் பட்டது வாசகர் கடிதம் ஒன்றுதான். அதுவும் 'எனக்கு சஞ்சிகை கிடைக்கும்போது அதில் தவிர்க்க முடியாததாக எனக்குப் படுவதில் வாசகர் கடிதப் பகுதியும் ஒன்று. அதில் தான் கம்பியூட்டர் பாவிப்பவர்களின் உண்மையான தகவல்களைப் பெற முடியும். உங்கள் வாசகர் கடிதப் பகுதியை மூன்று மடங்காக அதிகரியுங்கள். நிச்சயம் வெற்றி பெறும்' என்று ஒரு வாசகர் e-mail (Electronic mail என்று கம்பியூட்டர்கள் தொலைபேசி இணைப்புகளூடாக அனுப்புகின்ற தகவல்கள்) அனுப்பியிருக்கிறார்.

இன்னொரு வாசகர் மற்றச் சஞ்சிகைகள் பற்றி எழுதி 'மற்றப் பத்திரிகைகள் எல்லாம் வாய்வீச்சில் ஈடுபடுகின்ற போது, நீங்கள் தான் உண்மையான அர்ப்பணிப்புடன் எழுதுகிறீர்கள்' என்று எழுதியிருக்கிறார். இப்படி வாசகர் கடிதங்களுக்கு தனிப் பெருமை உண்டு. இதனால் தான் 'இங்கே சில' பத்திரிகைகள் வாசகர் கடிதம் வெளியிடப் போவதாக சொல்கின்றன போலும். எங்கே போய் முடியுமோ?

★ ★ ★

இதற்குள் கேள்வி பதில் வருவதாகவும் பத்திரிகைகள் பயமுறுத்துகின்றன. கேள்விக்கு பதில் சொன்ன ஞானியார் என்னவானாரோ? சட்டிக்குள் இருந்தது முடிந்து போயிற்றோ என்னவோ? (ஏதோ முன்பு இருந்த மாதிரி?) இதற்குள் ஒரு பத்திரிகை கேள்விகளுக்கு பதில் சொல்ல முதல் கேள்வி கேட்டவர்களின் விலாசங்களை வெளியிட்டிருக்கிறது.

வீரகேசரியில் ஒரு கேள்வி பதில்.. சினிமா பகுதியில்.. மோனா பதிலளிக்கிறார். அதில் எம்.ஜி.ஆர் என்பதன் அர்த்தம் என்று வாசகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு.... (சுவிட்சலாந்திற்கு புலம் பெயர்ந்த ஈழமணி ஒன்றுதான்) பதில் வருகிறது.. மகேந்திரா, குணபாலன், ராமச்சந்திரன் என்று. அது உண்மையல்ல. மருதூர் கோபாலன் ராமச்சந்திரன் என்பது தான் எம்.ஜி.ஆர் ஆயிற்று.. வாழ்க கேள்வி பதில்கள்..

★ ★ ★

வாசர்கள் முடியைப் பிய்ச்சுக்கிறார்கள். ஈழநாடு வாங்கப் போனால்... ஈழநாடு இரண்டு வருகின்றன. அ.தி.மு.கவில் ஜெ அணி, ஜா அணி என்ற மாதிரி.. இனிமேல் ஆசிரியர்களின் பெயரைச் சொல்லி அவர்களின் ஈழநாடு என்று சொல்ல வேண்டியதுதான். விளம்பரப் போட்டியில் எங்கள் இலக்கத்துடன் மட்டுமே தொடர்பு கொள்ளுங்கள் என்று விளம்பரம் வேறு...

ஈ நாடு... இதை நாடாதே.. வாசகர்களுக்கு இந்த துன்பமெல்லாம் தேவை தான். போகிற போக்கில் வாசகர்கள் இந்த தொல்லை வேண்டாம் என்று ஓசிப் பத்திரிகையான உலகத்தமிழரை வாங்கிப் படிக்கப் போகிறார்கள்.

கற்றென்ன பேப்பர் விட்டென்ன நம்மவர்க்கு
bat இல்லா வாழ்வு பொய்.

★ ★ ★

தினசரிப் பத்திரிகை வேறு வருவதாக அறிவித்தல்கள் வருகின்றன. அன்றாடம் மலரும் செந்தாமரை போல என்று விளம்பரத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சூரியனைக் காணாமல் தான் அந்த செந்தாமரை நின்று போய் விட்டதே. அதற்குள் இப்படி ஒரு ஒப்பீடு தேவைதானா?

முன்பு தாயகம் பற்றி செந்தாமரை எழுதிய போது செந்தாமரை படித்தவர்கள் நடத்துகின்ற பத்திரிகை என்ற பிரமை ஏற்படுத்துவதற்காக அதன் நிர்வாக சபையின் பெயர் போட்டு அவர்களது பதவிகள் போட்டிருந்தது. இந்த 'மெத்தப் படித்தவர்கள்' கடைசியில் மஞ்சரி இணை வெளியீடாக வரும் போது கூட புரியாமல் கடைசியில் அமிழ்ந்து போனார்கள். ஆளும் வளரணும், அறிவும் வளரணும். அதுதாங்க வளர்ச்சி...

★ ★ ★

தினசரிப் பத்திரிகை வெளியிடுவதாக 'தகவல்' வெளிவந்தது. அங்கு தினசரிப் பத்திரிகைக்கு ஸ்பீக்கர் பிடித்து விளம்பரம் செய்து, பத்திரிகை கீதம் பாடியது வரை செய்தது போல இங்கும் தொடருமோ என்னவோ? தினசரிப் பத்திரிகையின் விற்பனையையும் பத்தாயிரமாக அதிகரிக்கும் நோக்கம் இருந்தால் தமிழ் மக்கள் கதி?

எதற்கும் கியூறியஸின் கேள்விகளுக்குப் பதிலைக் காணோமே.. நல்ல காலம், நான் எந்த வாசகர் கடிதமும் எழுதி தொலைக்கவில்லை. தொலைத்திருந்தால் தொலைந்தேன். அந்த வாசகர் கடிதத்திற்கு ஒரு விமர்சனம் வந்திருக்கும்.

★ ★ ★

இந்தப் பத்திரிகைப் போட்டிகளில் சோதிடர்கள் அகப்பட்டுத் திணறுகிறார்கள். தங்கள் தலைவிதியையோ, தாங்கள் எழுதி வந்த பத்திரிகைகளின் தலைவிதியையோ, எதிர் காலத்தையே தெரியாமல் சோதிடம் எழுதுகிறார்கள். பிறகெப்படி மற்றவர்களுக்கு சோதிடம் சொல்ல முடியும்? ஒருவர் அக்குவேறு ஆணி வேறாக சோதிடத்தைப் பிரித்து விட்டு செந்தாமரையிலிருந்து விலகி மாத இதழ் விடுவதாக சொன்னார். அதைக் காணோம். இன்னொரு பரமர் ஓசையில் எழுதிக் கொண்டிருந்து விட்டு ஈநாடு வந்ததும் ஆளைக்காணோம். இன்னொரு நரசிம்மர் செந்தாமரையில் எழுதி விட்டு அது மறைந்ததும் ஈழநாடு பதிப்பொன்றில் எழுதுகிறார். மஞ்சரியோ ஆயர்பாடி சோதிட புத்தகத்தை மறுபிரசுரம் செய்கிறது.

பத்திரிகைகள் மறை

கின்றன, தோன்றுகின்றன, இரட்டிக்கின்றன. சோதிடர்களோ அலேகிறுர்கள். பத்திரிகை விற்கிறதோ இல்லேயோ, சோதிடருக்கு வேலே கிடைக்கிறதே. எதற்கும் நம்ம சிவப்பிரகாசத்திடம் கேட்க வேண்டும். எல்லாம் சனிமாற்றம் செய்த வேலே... பரவாயில்லே.

★ ★ ★

வாசகர் கடிதம் பற்றி எழுதியதும் கிருஷ்ணர் வேறு தாயகத்திற்கு கடிதம் எழுதி விட்டார். கிருஷ்ணர் என்ருல் கிட்டு என்ற கிருஷ்ணகுமார் அல்ல, கண்ணன், கோவிந்தன் எனப்படும் அந்த வெண்ணெய் உண்ட கண்ணன்... நெதர்லாந்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிருர். இதென்னடா, கலியுக அவதாரம் நெதர்லாந்திலிருந்தா? என்று கேட்பீர்கள். சாயிபாபா பற்றிய மர்மங்கள் பற்றி பல தகவல்கள் வெளியாகும் போது இதென்ன புதுக்கதை என்பீர்கள்...

'எல்லாவற்றையும் மேலோட்டமாகப் பார்க்கும் இந்தக் கண்ணபிரானின் கண்ணுக்கு' தாயகம் பட்டதாம். அதில் 27.8. 93ல் திருவிளேயாடல் என்ற கவிதைதன்னேப் பற்றிய குறிப்பாக இருந்ததாம். அதில் சில உண்மைகள் இருப்பதால் மறுப்பதற்கு காரணம்கூற முடியாத நிலேமையால் 'உமது ஆர்வம் ஏன் மழுங்க வேண்டும்' என்று தன்னே இனம் காட்டுகிருராம். பரமாத்மாவின் கடிதத்தில் இருந்து சில பகுதிகள்...

இவ்வுலக உண்மை கொண்டு அவதரித்த போது விஷ்ணுவின் அவதாரமாய் வந்தேன். தற்போதும் இப்புவியில் பிறந்திருக்கிறேன். சகல வரலாற்றையும் மீண்டும் சுற்ற விட்டேன். நானும் இவ்வுலகிற்கு வரும் காலத்தை நான்கு பெரும் சமயத்திலும் கூறி இருக்கிறேன்.... என் தாய் சக்தியின் அவதாரம்.. தந்தை சிவ அவதாரம்.. மூத்தவர் விஞயகர் அவதாரம்.. என்னே முதலில் ஆதாரபூர்வமாக நிருபிக்க இவ்வுலகம் நம்பாத அளவுக்கு அறியாமை மூடி மறைக்கிறது. உங்கள் தாயகத்தில் பரிதாபப்படுவதால்.. என் வேண்டுகோளே நீரும் அறிவிக்கலாம். தமிழன் என்று என்னேக் காட்டாமல் என் அவதாரத்தைப் பற்றி எழுதவும்.. 83ல் நாட்டை விட்டு ஓடினேன். ஓடியும் என் பணம் மனேவியிடமே இருந்தது... இவ்வுலகம் விதியாமல் மட்டுமல்ல.. மனிதர்களது அகம்பாவத்தாலும் அழிவுக்கு செல்வதை தடுக்க இப்பிறப்பில் எனது வாழ்க்கை ஒரு அவதாரம்..

பெரிய கடிதம் ஒன்றில் இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள் நிறைய இருந்ததுடன் வசனங்கள் தொடர்பற்றும் கருத்து அற்றும் காணப்பட்டன. கிருஷ்ண பகவானுக்கு தமிழிலக்கணம் தெரியாமல் போயிருக்கக் கூடும். கிருஷ்ண பரமாத்மாவும் யுத்தத்திலிருந்து தப்பியோடி ஐரோப்பாவில் தஞ்சம்.. இவ்வாசகரின் கடிதங்கள் நியூ யோர்க்ரைம்ஸ், மொன்றியல் கசட், ரொறன்ரோ ஸ்டார், சி.என்.என் தொலேக்காட்சி, துக்ளக், வாஷிங்டன் போஸ்ட், வி.ஜி, ஆப்டன் போஸ்டன் என்ற நோர்வேப் பத்திரிகைகள், நியூஸ்வீக், இந்தியா ருடே போன்ற சஞ்சிகைகளுக்கு தான் அனுப்பியதாகவும் (அந்த சஞ்சிகைகளின் விலாசங்களேயும் அனுப்பியிருக்கிருர்) இதன் தீர்ப்புகள் அவர்களுக்கே மிகவும் கஷ்டமாக இருந்ததை தான் அறிவேன் என்றும் எழுதியிருக்கிருர். இந்த வாசகரின் (மன்னிக்க, கிருஷ்ண பரமாத்மாவின்) பெயர் எஸ். செல்வராஜா.. தொலேபேசி இலக்கம், முகவரி எல்லாம் தந்திருக்கிருர். (எமது பழைய பெயர்களேயே பாவிக்கலாமாம்!)

எனவே, கிருஷ்ண பரமாத்வாவிடம் இருந்து வாசகர் கடிதம் பெற்றுக் கொண்ட ஒரே பத்திரிகை தாயகம்தான். தெய்வீக அருள் பெற்ற பத்திரிகையான தாயகத்தை வாங்கிப் படியுங்கள்.

This newspaper
is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினல்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களே எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலேபேசி இலக்கங்களேயும் விலாசங்களேயும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களே மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லே.

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள்
ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலேகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலேகள் அனேத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West (Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

# மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

## SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

## P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்